

கல்கி

KALKI
23.2.86
ரூ. 1.50

"பத்மாசுப்பிரமணியத்துக்கா
பரதமாடத் தெரியாது?"


பார்லே
இனிப்பும் உப்பும்-இணைந்திட்ட புதுமை.
இதன் சுவை இனிப்பென்று
சாதிப்பவரும் உப்பென்று
வாதிப்பவரும் மனமுவந்து
சொல்வதோ : அது சுவை மிக்கது.
மொரு மொருப்பானது,
கரகரப்பானது.
இந்தப் பேக்கை மட்டுமே
வாங்குங்கள். ஏனெனில்
க்ராக்ஜாக் ஒருபோதும்
உதிரியாக விற்கப்படுவதில்லை.
ஒருபோதும்.
Krackjack
BISCUITS
உலகத் தேர்வில்
விருது வென்றது.
பார்லே க்ராக்ஜாக் பிஸ்கட்
–இனிப்பும் உப்பும் இணைந்திட்ட மோகம்.
everest/85/PP/386Rtm

இது சினிமா புதிர் அல்ல!

முதல் கட்டங்களில் சினிமா நட்சத்திரங்கள் இருக்கிறார்கள். அவர்கள் பெயரின் முதல் எழுத்தில் ஆரம்பிக்கும்படியான நதி, நாடு, ஊர், அரசியல் வாதி, விளையாட்டு வீரர்களின் பெயர்களை வரிசையாக அடுத்தடுத்த கட்டங்களில் நிரப்புங்கள் பார்க்கலாம். எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட நேரம் 5 நிமிஷம் மட்டுமே! உதாரணத்துக்கு முதல் வரிசை பூர்த்தி செய்யப் பட்டுள்ளது.

சினிமா நட்சத்திரம்	நதி	நாடு	ஊர்	அரசியல்வாதி	விளையாட்டு வீரர்
	கங்கை	கனடா	கன்னியாகுமரி	கரன் சிங்	கபில்தேவ்
					
					
					
					
					
					

விடை: 56 ஆம் பக்கம்.

புதிர்: மௌஷ்மி.

கட்சி சார்பற்ற பஞ்சாயத்துத் தேர்தல்?

அண்ணாவின் கொள்கையை கைவிட்டு

நிருபர்: ஊராட்சி மன்றத் தேர்தலுக்கு, வாக்குரிமை வயதை 21லிருந்து 18 ஆகக் குறைத்திருப்பதன் உள்நோக்கம் என்ன?

ப.உ. சண்முகம்: பொதுவாகவே, நம் நாட்டில் 18 வயதானோர்க்கு வாக்குரிமை வழங்குவது பற்றிப் பேசி வருகிறார்கள். மத்திய அரசும் இதைப் பரிசீலித்து வருகிறது. ஆனால் தமிழக முதலமைச்சர், புரட்சித் தலைவர் ஒருவர்தான் அதைச் செயல்படுத்தியிருக்கிறார். அதிகப்படியான மக்களுக்கு, ஜனநாயக உரிமைகள் தரப்பட வேண்டுமென்ற பரந்த நோக்கத்திலும் இளைஞர்களுக்கு முக்கியத்துவம் தரும் நோக்கிலும் இது செய்யப்பட்டுள்ளது. இதிலே ஒன்றைக் கவனிக்க வேண்டும். வாக்களிக்கத்தான் 18 வயது போதுமென்று சொல்லியிருக்கிறோமே தவிர, தேர்தலில் நிற்பதற்கு 21 வயதாகி இருக்க வேண்டும் என்பதை மாற்றவில்லை.

நிரு: வாக்குரிமையானது பாராளுமன்ற, சட்டமன்றத் தேர்தலில் 21 வயதானோருக்கும் ஊராட்சி மன்றத் தேர்தலில் 18 வயதானோருக்கும் என்று இருப்பதால் பிரச்னைகள் வராதா?

ப.உ.ச.: அதற்கும், இதற்கும் வாக்காளர் பட்டியல் தனித்தனி. இரண்டுக்கும் சம்பந்தம் கிடையாது. அது மத்திய தேர்தல் கமிஷனாலும், இது மாநிலத் தேர்தல் கமிஷனாலும் தயாரிக்கப்படுவது. எனவே பிரச்னைகள் வராது.

நிரு: எல்லாத் தேர்தலுக்குமே, வாக்காளர் வயதை ஒரே மாதிரி நிர்ணயித்து விட்டால், ஒரே வாக்காளர் பட்டியல் போதுமே!



இம்மாதம் 21ம் தேதி நடக்கவிருக்கும் நீதிமன்ற வழக்கு பாதிக்காமலிருந்தால் ஒருவழியாக 23ம் தேதி தமிழகத்தில் பஞ்சாயத்துத் தேர்தல் நடந்துவிடும்.

உள்ளாட்சித் தேர்தல்கள் மூலம்தான் ஜனநாயகம் அடிமட்டத்தில் பரவி பலம் பெறுகிறது. எனவே காலதாமதமான காரணத்தாலேயே, நடக்கவிருக்கும் தேர்தல் மிக அத்தியாவசியமான ஒரு ஜனநாயகத் தேவையைப் பூர்த்தி செய்கிற தேர்தலாகவும் விளங்கி முக்கியத்துவம் பெறுகிறது.

இத்தேர்தலில் சில புதிய நடைமுறைகளும் விதிமுறைகளும் புகுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பாக மக்களிடையே பரவலாக ஏற்பட்டுள்ள பல சந்தேகங்களுக்கு விடை தருகிறார் உள்ளாட்சித் துறை அமைச்சர் ப.உ. சண்முகம். எரிச்சலூட்டக் கூடிய சில கேள்விகளுக்குக்கூட சிரித்த முகத்துடன் அவர் பதிலளித்தார் என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

ப.உ.ச.: அந்த வாக்காளர் பட்டியலை வைத்துக் கொண்டு இந்தத் தேர்தலை நடத்த முடியாது.

நிரு: இதனால் அதிகப்படி செலவில்லையா?

ப.உ.ச.: இல்லை..... அடுத்த கேள்வி?

நிரு: இப்போதுள்ள தனி அலுவலர் முதலான அரசாங்க செட் அப்பே தேவலாம். பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்தாவிட்டால்தான் என்ன? என்று கூடச் சிலர் கருது-

'அண்ணாவின் அரசு' விடலாமா?

றார்களே?

ப.உ.ச.: ஜனநாயகத்திலே அடிப் படையே ஊராட்சி முறைதான். எனவே ஊராட்சி மன்றங்களுக்கு, ஜனநாயக முறைப் படி தேர்தல் நடத்தியே தீரவேண்டும். அப் போதுதான் ஆட்சி செய்பவர்கள் தவறு செய்தால் மக்களே தண்டனை தரமுடியும். இப்போதுள்ளது போல அதிகாரிகளை வைத் துக் கொண்டே தொடர்ந்தால் மக்கள் அதை



-ப.உ.ச. பேட்டி

அதிக நாள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். மக்களுக்குள்ள உரிமைகளை எக்காரணத் தாலும் தராமல் இருக்கக் கூடாது. பஞ்சாயத் துத் தேர்தலை எவரும் வரவேற்கத்தான் செய் வார்களே தவிர, வேண்டாம் என்று ஒரு வரும் சொல்லமாட்டார்கள்.

நிரு: நம் நாட்டில், தேர்தல் என்று வந் தாலே சகட்டு மேனிக்குச் செலவு செய்து விட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டதும், செலவு செய்ததைவிட அதிகமாகச் சம்பாதித்து விடு வது என்பது வழக்கமாகிவிட்டதே! இதற் குப் பஞ்சாயத்து தேர்தலும் விதிவிலக்கில் லையே! அதனால்தான் சிலர் பஞ்சாயத்துத் தேர்தலே வேண்டாம் என்றுகூட நினைக்கிறார் கள்....

ப.உ.ச.: சம்பாதிக்கத்தான், தேர்தலில் நிற்க வேண்டும் என்ற அவசியம் இல்லையே! எல்லோருக்குமே பணம் சம்பாதிக்க வாய்ப் புக்கள் கிடைக்காது. வருகிற எல்லோரும் சம்பாதிக்கத்தான் வருகிறார்கள் என்று எப் படிச் சொல்ல முடியும்? எல்லோருமே தவறு செய்கிறவர்கள் இல்லை! ஒரு சிலர் இருக்க லாம். அதை உதாரணமாய் வைத்துக் கொண்டு ஒட்டு மொத்தமாய்க் குற்றம் சொல்லக் கூடாது.

நிரு: பஞ்சாயத்துத் தேர்தலில் கட்சி சார்பு கூடாது என்பது அறிஞர் அண்ணா வின் கருத்து. நீங்களும் கட்சி சார்பு இல்லை என்று சொல்லிக் கொண்டிருந்தீர்கள். ஆனால் இப்போது கட்சி சார்பாகத்தானே தேர்தல் நடக்கப் போகிறது?

ப.உ.ச.: கட்சி சார்பு வேண்டாமென்று தான் நாங்களும் விரும்பினோம். அப்படியே தான், முந்தைய தேர்தல் அறிவிப்புகளும் வெளியாயின. பஞ்சாயத்துத் தேர்தலில் வெற்றி பெற்று வருகிறவர்கள் தெருக்களின் சுத்தம், தண்ணீர் வசதி இவைகளைத்தான் பார்த்துக் கொள்ளப் போகிறார்கள். எனவே சின்னம் அவசியமில்லை என்று நினைத்தோம். ஆனால் சில கட்சிகள் சின்னம் அவசியம் என்றார்கள். தி.மு.க. தலைவர் கருணாநிதி கூட அப்படியே வற்புறுத்தினார். இப்போது கூடத் தலைவர் பதவிக்கு மட்டுமே கட்சிச் சின்னத்தில் நிற்க அனுமதித்துள்ளோம்.

நிரு: அண்ணாவின் அரசு என்று சொல் லிக் கொள்ளும் அரசு உங்கள் அரசு. அப் படியிருக்க, சில கட்சியினர் — தி.மு.க. உட்பட — கேட்கிறார்கள் என்பதற்காக அண்ணாவின் கொள்கையை நீங்கள் கை விட்டுவிடலாமா?.

ப.உ.ச.: அண்ணாவின் லட்சியத்தை நோக்கித்தான் சென்று கொண்டிருக்கிறோம். அதே சமயத்தில் எதிர்க் கட்சியினரின் உணர்வுகளையும் மதிக்கிறோம். எல்லாம் படிப்படியாகத்தான் மாற வேண்டும். இப் போது சில படிகள் முன்னேறியிருக்கிறோம். மீண்டும் சொல்கிறேன், கட்சி சாயமின்றிப் பஞ்சாயத்துத் தேர்தல் நடத்துவதுதான் எங்கள் லட்சியம்.

நிரு: ஜகஜீவன் ராம் கட்சிக்குத் தராசுச் சின்னம் வழங்குவதில் ஏன் தகராறு?

ப.உ.ச.: அகில இந்திய ரீதியில் ஜகஜீவன் ராம் கட்சி அங்கீகரிக்கப்பட்டாலும், நம் மாநிலத்தில் அது ஏற்றுக் கொள்ளப்பட்ட கட்சி இல்லை. அவர்கள் இந்த விஷயத்தில் காலம் கடந்து வந்தார்கள். உரிய நேரத்தில் வந்திருந்தால் ஏதாவது செய்திருக்க முடியும்.

நிரு: வரும் தேர்தலில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு பெற்றவர் தலைவ ராய் வருகிற முறை கிடையாது. உறுப்பினர் கள் 'வார்டு' வாரியாகவும், தலைவர் நேரடி யாகவும் தேர்ந்தெடுக்கப்படவிருக்கிறார்கள். இதனால் தலைவரும், பெரும்பான்மை உறுப் பினர்களும் எதிரெதிர் கட்சிகளாய் அமைந்துவிட்டால், தலைவர் ஒன்றுமே செய்ய முடியாதே!

ப.உ.ச.: உறுப்பினர்கள் கட்சி அடிப்



படையில் தேர்ந்தெடுக்கப்படப் போவ தில்லையே. எனவே எதிரெதிர் கட்சி என்ற பிரச்னை எழாதே!

நிரு: உறுப்பினர்கள் தேர்தல், கட்சி அடிப்படையில் இல்லாவிட்டாலும் அவர்களுக்குக் கட்சிச் சார்பு இருக்கத்தானே செய்கிறது. தலைவருக்கு எதிராய்ப் பெரும்பான்மையினர் கோஷ்டி (கட்சி) சேர்ந்து கொண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கூடக் கொண்டு வந்து, தலைவரைப் பதவியிலிருந்து இறக்கிவிடலாமே!

ப.உ.ச.: தலைவர் மீது உறுப்பினர்கள் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வர முடியாது. அதற்குச் சட்டம் வழி செய்யவில்லை. தலைவர் நேரடியாக மக்களின் பெரும்பான்மை பலத்துடன் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

நிரு: இது தலைவருக்குச் சாதகமான விஷயமாயிற்றே! இதை வைத்துக் கொண்டு, அவர் வரம்பு மீறிச் செயல்பட ஆரம்பித்தால்?

ப.உ.ச.: இந்தக் கேள்வியை அடுத்துக் கேட்பீர்கள் என்று எனக்குத் தெரியும்! அப்படிப்பட்ட தலைவரைப் பதவி நீக்கம் செய்ய அரசுக்கு அதிகாரம் உண்டு.

நிரு: மன்றங்களின் பணிக் காலத்தை நாலு வருஷங்களிலிருந்து மூன்றாகக் குறைத்திருப்பது ஏன்?

ப.உ.ச.: இது எட்டாவது சட்டமன்றத்தால் உருவாக்கப்படும் அமைப்பு. இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சில புதிய அதிகாரங்கள் வழங்க இருக்கிறோம். இந்தச் சட்ட சபையின் காலம் முடிவதற்குள், இவற்றின் செயல்பாடு பற்றிக் குறை நிறைகளை அலச விரும்புகிறோம். எனவே மூன்றாண்டுகளாய் ஆயுளைக் குறைத்திருக்கிறோம். இதில் அரசியல் நோக்கம் ஏதுமில்லை.

நிரு: அதிகப்படி அதிகாரம்என்றுசொன்னீர்களே! அவை என்னென்ன?

ப.உ.ச.: அவை பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம். என்னென்ன அதிகாரங்கள் தரலாம் என முடிவானதும், அவை உடனடியாகத் தரப்படும்.

நிரு: பல தடவை இந்தத் தேர்தல்கள் தள்ளி வைக்கப்பட்டபோது பல காரணங்கள் சொல்லப்பட்டாலும், நிஜமான காரணம் என்ன?

ப.உ.ச.: ஏற்கெனவே சொல்லப்பட்ட காரணங்கள் தவிர, வேறு எந்த தனிப்பட்ட காரணமும் இல்லை; அரசியல் ரீதியான காரணமும் எதுவும் இல்லை.

நிரு: வாக்காளர் பட்டியல் அச்சடிப்பு வேலை கூட்டுறவு அச்சகங்களுக்குத் தரப்பட்டுள்ளதாய்ச் சொன்னது உண்மைக்குப் புறம்பானது என்று நிரூபிக்கப்பட்டதே!

ப.உ.ச.: வாக்குச் சீட்டுகள் (பாலட் பேப்பர்கள்) அச்சடிப்பதைக் கூட்டுறவு அச்சகங்களுக்கும், வாக்காளர் பட்டியல் அச்சடிப்பதைத் தனியார் அச்சகங்களுக்கும் கொடுத்தோம். பாலட் பேப்பர் என்பதை நான் 'வோட் லிஸ்ட்' என்றேன். இதை 'வோட்டர்ஸ் லிஸ்ட்' என்று மாற்றிவிட்டார்கள்.

நிரு: பஞ்சாயத்துத் தேர்தல் தள்ளி வைப்பு விஷயத்திலே நீங்கள் மிகவும் விமர்சிக்கப்பட்டீர்கள்; கார்ட்டூன், ஜோக்ஸ்..... ஏன், 'ப.உ.ச.வுக்கு ஐடியா' என்று வாசகர்களுக்குப் போட்டி கூட வைத்து உங்களைக் கேலி செய்தார்கள். இவை உங்களைப் புண்படுத்த



GLC.203.12 Tam

வில்லையா?

ப.உ.ச.: இதை நான் சீரியஸாய் எடுத்துக் கொள்ளாமல் ரொம்ப ஸ்போர்டிவாக எடுத்துக் கொள்கிறேன். ஐ ரியலி என்ஜாய்ட் இட். ஜனநாயகத்தில் இதெல்லாம் ஓர் அங்கம். ஆனால் அக்கப்போர் கூடாது. அது தவறானது.

நிரு: அ.தி.மு.க. — காங்கிரஸ் இட ஒதுக்கீட்டில் ஏன் இத்தனை குழப்பம்?

ப.உ.ச.: (சிரித்தபடி) கட்சியிலும் சரி, ஆட்சியிலும் சரி நாங்கள் மிகத் தெளிவாய் இருக்கிறோம்.

நிரு: எல்லா இடங்களிலும் இரண்டு கட்சியினரையும் மனு தாக்கல் செய்யச் சொல்லிவிட்டு, கடைசியில் ஏதோ ஒரு வழியாய் வாபஸ் வாங்கச் சொல்லி..... இதெல்லாம் தெளிவாய் இருப்பதன் அறிகுறிகளா?

ப.உ.ச.: பிரச்னைகள் இருந்தாலும், மனு தாக்கல் செய்து கடைசித் தேதிக்குள் சுமுகமாய்ப் பிரச்னைகளைத் தீர்த்து வாபஸ் பெற முடிந்ததே. அது தெளிவாய் இருப்பதன் விளைவுதானே!

நிரு: இந்தத் தேர்தலில், அ.தி.மு.க. எதைத் தன் சாதனையாய்ச் சொல்லி வோட்டு கேட்கப் போகிறது?

ப.உ.ச.: கிராமங்களில் தன்னிறைவுத் திட்டம் என்கிற திட்டம் மிகச் சிறப்பாய்ச் செயல்பட்டு வருகிறது. இது 240 கோடி ரூபாய் திட்டம். கிராமங்களில் குடி தண்ணீர் வசதி, பள்ளிக் கூடம் போன்ற வசதிகள் அளிக்கிற திட்டம். இந்தச் சாதனை போதுமே!

நிரு: சத்துணவை விட்டுவிட்டீர்களே!


ப.உ.ச.: (சிரிப்பு)

நிரு: 21ம் தேதி சுப்ரீம் கோர்ட் வழக்கு காரணமாய் இந்தத் தேர்தல் செல்லாததாகி விடுமோ?

ப.உ.ச.: சுப்ரீம் கோர்ட்டுக்குச் சட்ட வரம்புக்குட்பட்டு, எந்தத் தீர்ப்பையும் வழங்கும் அதிகாரம் உண்டு. ஆனால் இந்தத் தடவை எந்த ஓட்டையும் இல்லாமல் ரொம்ப உறுதியாக எங்கள் தரப்பு வழக்கைச் சமர்ப்பித்திருக்கிறோம். எனவே தேர்தல் செல்லாது என சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வராது என்றே நினைக்கிறேன்.

பேட்டி: எஸ். சந்திரமௌலி

படம்: யோகா



அடுத்த இதழில்....

அயல்நாட்டு நிபுணர்கள் உதவியின்றி சாதிக்கவே முடியாது என்று கருதப்பட்டதை நம்மவர் செய்து காட்டி ஏராளமான அந்நியச் செலாவணி மிச்சமாக வழிவகுத்திருக்கிறார்கள். இந்த அதிசய முயற்சி பற்றியும் அதில் ஈடுபட்டவர்களின் உழைப்பு, எதிர்பார்ப்பு, வெற்றிக் களிப்பு இவை குறித்தும் படித்துப் பரவசமடையுங்கள்!

மேட்டூரில் ஒரு சிலிக்கான் புரட்சி!

— ஸ்பெஷல் ரிப்போர்ட்

உங்கள் அவசியத் தேவைகளுக்கு தக்க தருணத்தில் கைகொடுக்கும் மூலதனம் !

கார்திக் சிட்ஸ்

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உரிய உன்னத நிறுவனம்



நீண்டகாலச் சீட்டுகள் :

குரூப்	மாதங்கள்	செலுத்த வேண்டிய தொகை	சீட்டின் மதிப்பீடு
AA	40	125/-	5,000/-
BB	40	250/-	10,000/-
CC	40	500/-	20,000/-
DD	40	1,250/-	50,000/-

குறுகிய காலச் சீட்டுகள் :

குரூப்	மாதங்கள்	செலுத்த வேண்டிய தொகை	சீட்டின் மதிப்பீடு
AB	20	100/-	2,000/-
AC	20	250/-	5,000/-
AD	20	500/-	10,000/-
AE	25	1,000/-	25,000/-
AF	25	2,000/-	50,000/-
AG	20	5,000/-	1,00,000/-

குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு உடனே தொகை வழங்க உறுதியளிக்கிறது.

KC கார்திக் சிட்ஸ் பிரைவேட் லிமிடெட்,

No. 1, 8 ஆவது தெரு, கோபாலபுரம், சென்னை-600 086.



பஞ்சாயத்துக் தேர்தல்
வாக்குச் சீட்டு
முதல்வர் பதவி
எனக்கு முக்கால் இடம்!
எனக்குப் பாதிக்கு மேல்!
இந்த ஒரு கால் இல்லென்று நாற்காலி முக்காலி!
முஸ்லிம் லீக்



1986 பிப்ரவரி 23
மலர் 44 இதழ் 30
குரோதன மாசி 11

கல்கி



ஹெக்டே ராஜினாமா:

துயரம் தாக்குகிறது; மகிழ்ச்சியும் பொங்குகிறது

"ராஜினாமா செய்யாதீர்கள்" என்று எம்.ஜி.ஆர். அளித்த அறிவுரையை ஏற்காததன் மூலம் ஹெக்டே தாம் எவ்வளவு உயர்ந்த மனிதர் என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்திருக்கிறார். எம்.ஜி.ஆர். அளித்த அறிவுரை நல்லெண்ணத்தின் பேரில் தரப்பட்டது என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் அது தேவையற்ற, வேண்டப்படாத அறிவுரை என்பதோடு தார்மீகச் சிந்தனைகளுக்கு முரணான அறிவுரையுமாகும். எனவே அந்த அறிவுரையை ஹெக்டே ஏற்காததில் மகிழ்கிறோம். இந்த மகிழ்ச்சி, செய்ய வேண்டியதை, செய்ய வேண்டிய நேரத்தில் ஹெக்டே தயக்கமின்றிச் செய்தார் என்பதால் பல மடங்கு அதிகமாகிறது. அதே சமயம், கவலையில் இதயம் கனத்துப் போக ஆழ்ந்த துயரில் கண்களில் நீர் பனிக்கவும் செய்கிறது.

துயரத்துக்கும் கவலைக்கும் வலுவான காரணங்கள் உள்ளன. ஹெக்டே கர்நாடகத்தின் தன்னிகரில்லாத தலைவராக விளங்குகிறார். தார்மீக அரசியலில் அசைக்க முடியாத பற்றுள்ளவராக இருக்கிறார். மக்களின் இன்ப துன்பங்களில் நேரடியாகப் பங்கு கொண்டு அவர்கள் இதயத்தில் நீங்கா இடம் பெற்ற அருமைத் தலைவராகப் பிரகாசிக்கிறார். இத்தகையவர் ராஜினாமா செய்ய நேர்ந்ததே என்ற துயரம் ஒரு பக்கம்; அவரைவிடச் சிறந்ததொரு தலைவர் ஆளும் கட்சியிலும் சரி, எதிர்க் கட்சியிலும் சரி, இல்லையே, கர்நாடகத்தின் எதிர்காலம் என்ன ஆகப் போகிறதோ என்ற கவலை மறுபக்கம்.

ராஜினாமாவுக்கான காரணங்களை ஆராயும்போது நம் மனம் உருகிப் போகிறது. அரசாங்க விதிமுறைகளுக்குப் புறம்பான ஒரு காரியம் நடந்துவிட்டது; அதற்கு உயர் நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது என்பதற்கு அதிகமாக ஏதுமில்லை. வழக்குத் தொடுத்தவர்களே லஞ்ச ஊழல் குற்றச் சாட்டுக்களை வாபஸ் பெற்றுக் கொண்டு வருத்தம் தெரிவிக்கவும் செய்தார்கள். மேலும், விதிமுறைகளைப் புறக்கணித்ததும், புதிய விதிகள் உருவாக்கியதும் மனப்பூர்வமாக மக்கள் நலனையொட்டியே. இதில் சுயநலம் சிறிதும் இல்லை. ஆயினும் நீதிமன்றம், விதிமுறைகள் அப்பட்டமாகப் புறக்கணிக்கப்பட்டது பெரும் தவறு என்று சுட்டிக்காட்டித் தன் கடமையைச் செய்துள்ளது. ஆட்சேபம் எழுந்தபின் புதிய விதிமுறைகளை உருவாக்குவது நீதியாகாது என்று கூறியுள்ளது. இத்தீர்ப்பே ஹெக்டே ராஜினாமாவுக்குக் காரணமாகவும் அமைந்துவிட்டது.

இவ்வாறு விதிமுறைகளைப் புறக்கணிக்கிற காரியங்கள் வேறு பல மாநிலங்களிலும் நாளைக்கு எட்டு, பத்து என்ற ரீதியில் நடந்து கொண்டேதான் இருக்கின்றன. ஆட்சியிலிருப்போரின் சுயநலத்துக்காகவே நடக்கின்றன. நீதி மன்றத்தின் கண்டனங்களுக்கும் உள்ளாகின்றன. அச்செயல்களுக்குத் தார்மீகப் பொறுப்பேற்று ராஜினாமா செய்யும் தலைவர்கள் எத்தனை பேர்?

சமீப காலத்தில் நமக்குத் தெரிந்து ஹெக்டே ஒருவருக்குத்தான் பதவியைத் துச்சமாக மதித்து, சுய கௌரவத்தையே பெரிதாக எண்ணும் தார்மீக குணமும் பலமும் இருந்திருக்கிறது!

இனி, கட்சி எம்.எல்.ஏ.க்களால் அவரே மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மறுபடி முதல்வரானாலும் சரி, அல்லது ஆட்சிக்கு வெளியே இருந்து ஆட்சியைக் கண்காணித்துக் கட்சியை வளர்த்தாலும் சரி, எவ்வாறானாலும் ஹெக்டேயின் மதிப்பு முன் எப்போதையும்விட உயர்ந்துவிட்டிருக்கிறது.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்.

கிழக்கே ஓர் உலகம்

வாஸந்தி

கிழக்கின் கோடியில் உதித்த சூரியன் பளிச்சென்றிருந்தாலும் தகிக்கவில்லை. சிலுசிலுவென்று அடித்த குளிர்ந்த காற்றில் நாண்டியின் தெருக்களும் வீடுகளும் சுத்தமாகப் புதிதாகத் தெரிந்தன. அநேக வீடுகள் உண்மையிலேயே அண்மையில் புதுப்பிக்கப்பட்டவை என்று நான் பிறகு தெரிந்து கொண்டேன்.

வருஷத்தில் கண்டிப்பாக இரண்டு முறையேனும் சூறுவளி ஃபீஜியைத் தாக்குமாம். அப்பொழுது வீட்டின் கூரையெல்லாம் பிய்த்துக் கொண்டு போய்விடும். புதுப்பித்தாக வேண்டும் என்று சொன்னார்கள். சென்ற வருஷம் மூன்று முறை மிகப் பயங்கரச் சூறுவளி வந்து அதற்குச் சான்றுகளாகச் சில வீடுகள் இன்னும் காட்சியளித்தன.

இந்தக் காரணத்தால் இன்ஷ்யூர் செய்யாத வீடுகளே இங்கு இல்லை. சூறுவளியினால் பாதிக்கப்படும் வீடுகளுக்குத் தாராளமாக நஷ்ட ஈடும் அரசு கொடுக்கிறது. வருஷா வருஷம் சூறுவளி வருவது நிச்சயமானாலும் இங்கு கான்க்ரீட் வீடுகள் மிகக் குறைவு. மரம் இங்கு மலிவானதால் எல்லாம் மர வீடுகள், கண்ணாடிக் கதவுகள், ஜன்னல்கள்.

"சிமெண்ட் விலை மிக அதிகம். கான்க்ரீட் வீடுகள் கட்டுவதைவிட நஷ்ட ஈடு பணத்தின் மூலம் வீட்டைப் புதுப்பித்துக் கொள்வது எங்களுக்கு லாபமானது" என்றார் என்.கே. நாயுடு. சங்கத்தின் அலுவலகத்துக்கு மறுநாள் காலை என்னை அழைத்துச் சென்றுகொண்டிருந்தார் அவர்.

மேற்கத்திய நாடுகளில் தெரியும் சுத்தமும் அப்பழுக்கில்லாத வேலைத் திறனும் தெருக்களிலும் வீடுகளின் அமைப்பிலும் பளிச்சிட்டன. கிட்டத்தட்ட எல்லா வீடுகளிலுமே ஸோலார் எனர்ஜியினால் சுடுநீர் வசதி செய்யப்பட்டிருப்பதை அறிந்தேன்.

தெருவில் கண்ணில்

* எங்கும் பசுமை — கர்ல்ஃப் மைதானம்.





* எங்கும் எழில் — கேரளத்தை நினைவூட்டும் கடற்கரை



* எங்கும் சுத்தம் — டென்னிஸ் கோர்ட்.



* எங்கும் நவீனக் கச்சிதம் — நீச்சல் குளம்.

பட்டவர்கள் எல்லாம் இந்தியர்கள். கடைகளின் பெயர்கள் எல்லாம் இந்தியப் பெயர்கள். வீடுகளில் தென்னம்பிள்ளைகள். செம்பருத்திகள், போகன் வில்லாக்கள்.

''இந்தியாவின் ஓர் எழிலார்ந்த அமைதியான பகுதிக்கு வந்ததுபோல் இருக்கிறதே தவிர இது மிகத் தொலைவில் இருக்கும் அந்நிய நாடுபோல் தெரியவில்லை!'' என்றேன்.

''ஆமாம். அதனால்தான் இதை 'லிட்டில் இந்தியா' என்றும் அழைக்கிறார்கள். ஃபீஜியின் ஜனத் தொகையில் 51 சதம் இந்தியர்கள். ஃபீஜி, ஆங்கிலம், ஆகிய மொழிகளுடன் ஹிந்தியும் இங்கே ஆட்சி மொழி. தென்னை மரங்களும் சீதோஷ்ணமும் உங்களுக்குக் கேரளத்தை ஞாபகப்படுத்தும்'' என்றார் நாயுடு.

மொத்த ஜனத் தொகை குறைவானதாலும் (6,71,712) நகர அமைப்பு மிக நேர்த்தியாக இருப்பதாலும் கண்ணில்பட்ட காட்சிகள் எல்லாம் மனத்தைக் கொள்ளை கொண்டன.

''இங்கு டூரிஸம் டிபார்ட்மெண்ட் ரொம்பத் தீவிரமாகச் செயல்படுகிறது'' என்றார் நாயுடு. ''சர்க்கரைதான் அந்நியச் செலாவணி சம்பாதிக்கும் முக்கிய பண்டம். இப்பொழுது டூரிஸமும் அதற்கு இணையாக வந்துவிட்டது. வருஷம் முழுவதும் இங்கு மிதமான சீதோஷ்ணமானதால் இங்கிருக்கும் கடற்கரை ஸ்தலங்களுக்கு விடுமுறைக்காக ஜப்பான், ஆஸ்திரேலியா, நியூஜிலாண்ட் ஆகிய நாடுகளிலிருந்து டூரிஸ்ட்டுகள் ஏராளமாக வருகிறார்கள். எண்ணிக்கை வருஷத்துக்கு வருஷம் அதிகரிக்கிறது.''

''இங்கு கரும்புத்தோட்டத்தில் கூலி வேலை செய்ய வந்த இந்தியர்கள் மிக மிகக் கஷ்டப்பட்டார்களே, இப்போதிருக்கும் அவர்களது சந்ததிகளின் நிலை என்ன? வாழ்க்கைத் தரம் எப்படி இருக்கிறது?''

''ஒப்பிட்டுப் பார்க்க முடியாத அளவுக்கு உயர்ந்திருக்கிறது. எங்கள் முன்னோர்கள் பட்ட கஷ்டங்கள் எங்களுக்கு மறக்கவில்லை. அந்த ஞாபகத்தினாலேயே முன்னேற்றத்திற்கு ஒரே வழி கடுமையான உழைப்பு என்கிற பிரக்ஞை இந்திய சந்ததிகளுக்கு இருக்கிறது. ஆனால் எங்கள் முன்னோர்களின் விவேகமும் தொலைநோக்கும் இல்லாமல் போயிருந்தால் நாங்கள் நிச்சயமாக முன்னேறியிருக்க முடியாது.''

இந்த முன்னோர்களைப் பற்றிய பேச்சு எழுந்தபோதெல்லாம் நாயுடுவின் பேச்சிலும் பார்வையிலும் ஒரு பக்திப் பரவசம் இழையோடிற்று.

''பாதி வயிற்றுக்குக் கூடக் காணாத நாட்களில் அவர்களுக்குள் எத்தனை தியாக உணர்வும் கரிசனமும் இருந்திருந்தால் தங்கள் சந்ததிகளின் எதிர்காலத்துக்காகப் பாதை வகுத்திருப்பார்கள்? தங்களைப் போலவே கூலி ஆட்களாகத் தங்கள் குழந்தைகள் நின்று விடக்கூடாது என்பதில் எவ்வளவு அக்கறை! தங்களுக்குக் கிடைத்த அரைக் காசில் கால் காசை மீதப்படுத்திப் பள்ளிகளை ஆரம்பித்தார்கள். இன்றைய எங்கள் சங்கம் அவர்களது மூளையில் உதித்த சிசுதான். இப்பொழுது எங்கள் சங்கம், இரண்டு தீவுகளையும் சேர்த்து முந்நூறு பள்ளிகளை நடத்துகிறது. ஆரம்பப் பள்ளியிலிருந்து உயர்நிலைப் பள்ளி உள்பட.''

''இந்தப் பள்ளிகளில் பாடம் போதிக்க உபாத்தியாயர்களை இந்தியாவிலிருந்து வரவழைத்தீர்களா?''

''வரவழைக்கப் போதிய பண வசதி இல்லாததால் மிகக் கொஞ்சம் பேர்தான் வந்தார்கள். முக்கியமாகத் தமிழும் தெலுங்கும் கற்றுக் கொடுக்க ராமகிருஷ்ண மிஷனின் உதவி கிடைத்தது. இப்பொழுது எல்லா உபாத்தியாயர்களும் ஃபீஜி இந்தியர்கள்தான்.''

''தமிழ் இப்பவும் ஒரு பாடமா உங்கள் பள்ளிகளில்?''

''ஆரம்பப் பள்ளியில் மட்டும் தமிழ் கற்க விரும்புகிறவர்கள் கற்கலாம். இந்த அளவுக்குச் சொல்லித் தருவதுகூட இப்பொழுது ரொம்பவும் சிரமமாகப் போய்விட்டது. ஏனென்றால் எங்களிடம் வேண்டிய அளவு ஆரம்பப் பாடப் புத்தகங்களே இல்லை. தமிழ் நாட்டு அரசிடம் உதவி கோரி அலுத்துவிட்டது. இரண்டு எம்.எல்.ஏ.க்கள் தமிழ் நாட்டிலிருந்து இங்கு வந்திருந்தார்கள். அவர்களிடமும் எங்கள் வேண்டுகோளைச் சொன்னோம். ஆரம்பப் பள்ளி தமிழ்ப் புத்தகங்கள் இல்லாததால் தமிழ் ஆர்வம் உள்ளவர்கள் கூட இங்கு கற்க முடியாமல் போகிறது என்று எடுத்துரைத்தோம். நிறைய உறுதி மொழிகள் அளித்துவிட்டுப் போனார்களே தவிர செயலில் ஒன்றும் காணோம். இவ்வளவிற்கும் நாங்கள் புத்தகங்களை இலவசமாகக் கேட்கவில்லை.''

அவரது குற்றச்சாட்டு மிகவும் நியாயமானது என்பதால் அவமான உணர்வுடன் நான் சங்கத்தின் கட்டிடத்துக்குள் நுழைந்தேன். கூடத்தின் நடு மையத்தில் சாது குப்புஸ்வாமியின் உருவப் படம் இருந்தது. அங்கிருந்த நான்கைந்து ஊழியர்களுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார்.

''இவர்தான் மிஸ்டர் ஆறுமுகம் பிள்ளை. தமிழ் நாட்டிலிருந்து இங்கு தமிழ் கற்றுக் கொடுக்கவே வந்தவர்.

சுமார் அறுபது வயதினராகத் தோற்றமளித்த ஆறுமுகம் பிள்ளை, ''தமிழைக் கற்கவோ, கற்றுக் கொடுக்கவோ இப்பொழுது வாய்ப்புக்கள் மிகவும் குறைந்து போய்விட்டது'' என்று வருத்தப்பட்டார். ''முதலாவது பாடப்-புத்தகங்கள் இல்லை. இரண்டாவது ஆங்கிலமும் ஹிந்தியும் அரசு மொழிகளாக இருக்கும்போது தமிழ் கற்க வேண்டியது அவசியமில்லை, லாபகரமானதில்லை என்று குழந்தைகளுக்குத் தோன்ற ஆரம்பித்துவிட்டது. ஆரம்பப் பள்ளியில் மூன்றும் வகுப்புவரை பெற்றோர்களின் ஆசையைப் பூர்த்தி செய்யச் சில குழந்தைகள் தமிழ் வகுப்புக்குப் போகும். அதுவும் அரை மனத்துடன்தான். ஏனென்றால் அந்தச் சமயத்தில் மற்றக் குழந்தைகள் விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருக்கும்!''

''தமிழ்ப் பாடம் நடத்தப்படும் ஆரம்பப் பள்ளிக்கு உங்களை அழைத்துப் போகிறேன்'' என்று நாயுடு அங்கிருந்து என்னைப் பள்ளிக் கட்டிடம் இருந்த இடத்துக்கு அழைத்துச் சென்றார்.

''ஒரு விசேஷம் எங்கள் பள்ளிகளில் நீங்கள் பார்க்கலாம். பள்ளிக் கட்டிடத்தை ஒட்டினாற்போல் நிச்சயம் கோவில் இருக்கும். கல்வி போதிப்பதற்கும், பெறுவதற்கும் முன் பிரார்த்தனை அவசியம் வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம்.''

கோவிலும் பள்ளிக் கட்டிடமும் அப்பழுக்கில்லாது சுத்தமாக இருந்தன. சட்டென்று நான் நின்றேன். சின்னஞ்சிறு குரல்களின் ஒலி ஒன்றாய் உள்ளிருந்து வந்தது:

''வாழ்க நிரந்தரம், வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!''

பல்லாயிரம் மைல்களுக்கப்பால் அந்தப் பாட்டைக் கேட்டதும் என்னுள் ஏற்பட்ட சிலிர்ப்பை வர்ணிப்பது அசாத்தியமானது. ஐந்து ஆறு வயதுக் குழந்தைகள் என்னைக் கண்டதும் அழகாக, ''வணக்கம்'' என்று வரவேற்று ஆசிரியர் சொன்னவுடன் பவ்யமாகக் கண்ணை மூடி கைகூப்பிய நிலையில், ''கணபதிராயன்'' என்று கம்பீரமாக ஆரம்பித்துப் பாடி முடித்தபோது என்னுள் ஒரு நெகிழ்ச்சி ஏற்பட்டது. தமிழே பேசாத இந்தக் குழந்தைகளின் உச்சரிப்பில் இம்மியளவும் குற்றம் காண முடியவில்லை.

பள்ளியை ஒட்டிய கோவில் எல்லையம்மன் கோவிலைப் போல் இருந்தது. பூசாரி தமிழும் தெலுங்கும் கலந்து பேசினார். ''ஓம் காளி மாகாளி'' என்று நாமாவளி ஆரம்பித்து, ''கோவிந்தா, கோவிந்தா'' என்று முடித்தார்.


இந்தியக் கோவில்களையும் பூஜைகளையும் பார்த்தே இராத இவர்கள் தங்கள் கோவில்களைக் கர்ம சிரத்தையாகப் பராமரிப்பது மிகவும் சிலாக்கியமானதாகப்பட்டது. கோவிலிலிருந்து கிளம்பும்போது செய்தி வந்தது. அருகிலிருந்த ஃபீஜி கிராமத்துத் தலைவர் என்னை விசேஷ விருந்தினராக வரவேற்கக் காத்திருப்பதாக.


நாயுடுவின் முகம் மலர்ந்து போயிற்று. ''இதை நீங்கள் உங்களுக்குக் கிடைக்கும் மிகப் பெரிய கௌரவமாகக் கருத வேண்டும்'' என்றார் என்னிடம். ''வெளியிலிருந்து வருபவர்களை அவர்கள் சுலபத்தில் வரவேற்க முன்வரமாட்டார்கள்!''

(தொடரும்)

ஓவர் ன்டைம் வேலை செய்து, அல்லது இரவுக் காட்சி சினிமா பார்த்து பஸ்ஸைக் கோட்டைவிட்டவர்கள், டாக்ஸிக்குத் தண்டம் அழ வேண்டாம் — ஜப்பானில். தூங்க ஓர் இடம்தானே வேண்டும்? அதை டாக்ஸி சத்தத்தைவிட மலிவான வாடகையில் அளிக்கிறது காப்ஸ்யூல் ஹோட்டல்! எல்லாம் தனித் தனி அறைகள்தாம். ஆனால் ஒரே ஒரு படுக்கை மட்டுமே கொண்ட மினி அறைகள்!

நன்றி: பிக்டோரியல் ஜப்பான்.





11

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — 11


ராஜ்மோகன் காந்தி

கிரிப்ஸ் தூது

பிரிட்டிஷ் அரசின் தூதராக இந்தியா வந்திருந்த கிரிப்ஸ் அந்தப் பணிக்கு மிகவும் பொருத்தமானவராகத் தோன்றப் பல காரணங்கள் இருந்தன. இந்தியர்களின் சுதந்திர வேட்கையைப் புரிந்து கொண்டவர் என்பதாகக் கருதப்பட்டவர் அவர். மாஸ்கோவில் பிரிட்டிஷ் தூதராகத் திறம்படப் பணியாற்றியிருந்தார்; பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் இடது சாரியைச் சேர்ந்தவர்; அறிவாற்றல் மிக்க வழக்கறிஞர்; நேருவின் நண்பர்; மஹாத்மாவைப் போல் மரக்கறி உணவு மட்டுமே அருந்துபவர். மேலோட்டமான முதல் பார்வையில், கிரிப்ஸ் திட்டம் கவர்ச்சிகரமாகவே இருந்தது. யுத்தத்துக்குப் பிறகு இந்தியாவுக்கு முழுமையான சுயாட்சி அந்தஸ்து; தேவைப்பட்டால் காமன்வெல்த்திலிருந்து விலகிக் கொள்ளும் உரிமை; ஒரு மத்திய அரசியல் நிர்ணய சபை; அதன் உறுப்பினர்களை மாநில சட்டசபைகள் தேர்ந்தெடுக்கும், சமஸ்தான மன்னர்களும் நியமிப்பார்கள். இவை யுத்தம் முடிந்த பிறகு என்றால் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டியதும் கிரிப்ஸ் திட்டத்தில் இருந்தது. அது முன்னணி அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு தேசிய அரசு.

ஆனால் ஒரு சிக்கலும் இருந்தது. யுத்தம் முடிந்த பிறகு சுயாட்சி பெறும் இந்தியாவில் சேர விரும்பாத மாகாணங்கள் தனித்து இயங்கலாம். அப்படித் தனித்து இயங்கும் மாகாணங்களுக்கு இந்தியாவைப் போலவே சுயாட்சி உரிமை வழங்கப்படும். ஜின்னாவைத் திருப்திப்படுத்தி அவர் சம்மதத்தைப் பெற வேண்டும் என்பதற்காகவே கிரிப்ஸ் திட்டத்தில் சேர்க்கப்பட்ட அம்சம் இது. இந்தியாவைப் பிளப்பதற்கான ஏற்பாடு. கிரிப்ஸ் ஒப்பந்தத்தின் இந்த அம்சமும், அரசியல் நிர்ணய சபைக்கு உறுப்பினர்களை நியமிக்க சமஸ்தான மன்னர்களுக்கு வழங்கப்பட்டிருந்த உரிமையும், காங்கிரஸ் உறுப்பினர்களுக்குப் பிடிக்கவில்லை. இருப்பினும், மஹாத்மாவைத் தவிர வேறு யாருமே இவற்றைப் பெரிய பிரச்னைகளாக்கவில்லை. 1942 மார்ச், ஏப்ரல் மாதங்களில் கிரிப்ஸுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி அவர் உடனடியாக வழங்க முன் வந்த தேசிய அரசு பற்றித்தான் முக்கியமாகக் காங்கிரஸ்காரர்கள் ஆராய்ந்தனர். அதிலும் அவர்களுக்கு ஏமாற்றமே ஏற்பட்டது. கிரிப்ஸ் அறிவித்த "தேசிய அரசு" என்பது உண்மையில் தன் பெயருக்குப் பொருத்தமுள்ளதாக அமையாது என்பதை அவர்கள் உணர்ந்தனர். இறுதியில் கிரிப்ஸ் இரட்டை வேஷம் போடுவதாகக் குற்றம் சாட்டப்பட்டார். காங்கிரஸ் சார்பாக கிரிப்ஸுடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்ட தலைவர் ஆஸாத்தும் நேருவும் கிரிப்ஸ் முதலில் கூறியதைப் பிறகு வாபஸ்

* சர்ச்சில்.





* ரூஸ்வெல்ட்

தாய்க்குலம்



எம். ஜி. ஆர். ஆட்சியில் குடிப் பழக்கத்தால் பல இளைஞர்கள் சீரழிந்து வருகிறார்கள் என்பது கண்கூடான உண்மை. அதைவிட அதிகமாக அண்மையில் பாளையங் கோட்டையில் நான் கண்ட காட்சி எனக்கு மிகவும் மன வருத் தத்தை அளித்தது.

பாளையங்கோட்டை மார்க்கெட் பக்கத்திலுள்ள ஒரு சாராயக் கடையிலிருந்து ஒருவர் ஏழு எட்டு சாராய டம்ளர்களை ஏதோ டீ கிளாஸ் கொண்டு வருவதுபோல் கொண்டு வந்தார். கொண்டு வந்தவர், ஒரு சந்துக்குள் திரும்பி அங்குள்ள இளம் மற்றும் நடுத்தர வயது பெண்களிடம் கொடுத்தார். பெண்கள் குடித்ததும் வெற்று டம்ளருடன் திரும்பினார். அந்தப் பெண்கள் அனைவரும் கூலி வேலை செய்பவர்கள். பத்து, பன்னிரெண்டு ரூபாய் சம்பாதிக்கும் அவர்கள் ஐம்பது சதவிதத்தை சாராயத்திற்குக் கொடுத்துவிடுகிறார்கள். தாய்க் குலத்தை உயிருக்குயிராக நேசிக்கும் எம்.ஜி.ஆர். ஆட்சியில் தாய்க் குலத்தின் நிலையைப் பாருங்கள்!

— எஸ். முகம்மது யூசுப்.

பெற்றுக் கொண்டுவிட்டதாகச் சொன்னார்கள். தேசிய அரசு ஒரு மந்திரிசபை போலவே செயல்படும் என்றும் வைஸ்ராய்க்கு வீடோ அதிகாரம் இருக்காது என்றும் முதலில் உணர்த்தியிருந்தார் கிரிப்ஸ். பின்னர் தம் கருத்தைமாற்றிக்கொண்டுவிட்டார். கிரிப்ஸ் மீது சுமத்தப்பட்ட இந்தக் குற்றச்சாட்டு நியாயமானது என்று லின்லித்கோ வேவலிடம் கூறியதிலிருந்து நிரூபணமாகிறது. அவர் சொன்னார்: ''வைஸ்ராயின் வீடோ அதிகாரம் குறித்தும் 'அமைச்சரவைப் பொறுப்பு குறித்தும் கிரிப்ஸ் தெளிவாகவும் உறுதியாகவும் பேசாமல், காங்கிரஸுக்கு ஏதோ ஆசைகாட்டி விட்டார்.''

மேலும், பாதுகாப்புத் துறை பிரிட்டிஷ் பிரதம தளபதியின் நேரடி அதிகாரத்தின் கீழ்த்தான் இருக்கும் என்ற ஷரத்தையும் காங்கிரஸ் எதிர்த்தது. இதையொட்டி கிரிப்ஸ், ஸி. ஆர்., ரூஸ்வெல்ட் இந்தியாவுக்கு அனுப்பி வைத்த பிரதிநிதி லூயி ஜான்ஸன் ஆகிய மூவரும் இணைந்து ஒரு சமரசத் திட்டத்தை உருவாக்கினர். அதன்படி சில முக்கியமான பாதுகாப்புத் துறை அதிகாரங்களை மட்டும் இந்தியப் பாதுகாப்பு அமைச்சரின் பொறுப்பில் ஒப்படைக்கலாம் என்று யோசனை கூறப்பட்டது. ஒரு கணம் இந்தச் சமரச யோசனை 'பாதுகாப்புப் பிரச்னை'யைப்பொறுத்தமட்டில்நல்லதொரு தீர்வாக அமைந்துவிடும்போல் தோன்றியது. அந்த நம்பிக்கையும் அதிக காலம் நீடிக்கவில்லை. அமெரிக்கத் தலையீட்டால் கோபம் அடைந்திருந்த சர்ச்சில், எப்படியோ ஓர் ஒப்பந்தத்தை உருவாக்கி வெற்றிபெறும் ஆவலில் கிரிப்ஸ் சலுகைகளை வாரி வழங்கி விடுவாரோ என்றும் அஞ்சினார். எனவே, லின்லித்கோவும் பிரதம தளபதி வேவலும் தங்கள் பூரண ஆமோதிப்பைத் தமக்கு நேரடியாகத் தெரிவித்தாலன்றிப் பாதுகாப்புத் தொடர்பாகக் கிரிப்ஸ் செய்கிற எந்த ஏற்பாட்டையும் தாம் ஏற்க முடியாது' என்று கிரிப்ஸுக்குத் தந்தி கொடுத்தார் சர்ச்சில். இந்தத் தந்தி 'இம்மியும் விட்டுக் கொடுக்காமல் உறுதியுடன் இருக்க வேண்டும்' என்பதைவைஸ்ராய்க்கும்வேவலுக்கும் குறிப்பால் உணர்த்தியது. அவர்களும் சர்ச்சில் உணர்த்திய குறிப்பறிந்து இயங்கினார்கள். ஸி. ஆரும், ஜான்ஸனும் இணைந்து உருவாக்கிய சமரசத் திட்டம் நொறுங்கியது.

கிரிப்ஸ் திட்டத்தைப் பார்த்ததுமே காந்தி அதனை நிராகரிக்குமாறு சிபாரிசு செய்துவிட்டு, சேவாக்கிராமத்துக்குப் போய்விட்டார். காங்கிரஸ் காரியக் கமிட்டியின் பெரும்பாலான உறுப்பினர்கள் அவர் கருத்துக்கு உடன்படத் தயாராக இருந்தார்கள். ஆனால் விதிவிலக்காக விளங்கிய சிலரில் முக்கியமான இரண்டு பேர் இருந்தார்கள். அவர்கள் நேருவும் ஸி. ஆரும்தான். ஆஜாத்தின் வார்த்தைகளில் சொல்வதென்றால், ஜனநாயக நாடுகளிடம் தமக்கிருந்த ஈடுபாடு காரணமாக நேரு, கிரிப்ஸ் திட்டத்தைச் சாதகமாகவே எடைபோட விரும்பினார். ஸி. ஆரோ ஆரம்பத்தில் நேருவைக் காட்டிலும் ஒருபடி அதிகமாகவே நம்பிக்கை கொண்டிருந்தார். கிரிப்ஸ் திட்டத்தை ஏற்க வேண்டும் என்றே கூறினார். ஆனால், இருவரது அபிப்பிராயமும் பேச்சு வார்த்தைகள் நடக்க நடக்க மாறிப் போயின. ராஜேந்திர பிரசாத் கூறுகிறார்: ''காரியக் கமிட்டி உறுப்பினர்களில் ராஜகோபாலாச்சாரி மட்டுமே கிரிப்ஸ் திட்டத்தை ஏற்க வேண்டும் என்று ஆரம்பத்தில் கூறி வந்தார். பாதுகாப்பு, போர் தவிர இதரத் துறைகளிலெல்லாம் இந்தியர்களுக்கு' முழு அதிகாரம் இருக்கும் என்று அவர் நம்பினார். ஆனால் வைஸ்ராய், 'வீட்டோ' போன்ற தனது விசேஷ அதிகாரங்களைச் சிறிதும் தளர்த்திக் கொள்ளத் தயாராயில்லை என்பது தெளிவானதும் ஸி. ஆர். எங்களுடைய கருத்துக்குக் காட்டி வந்த எதிர்ப்பெல்லாம் கரைந்து போய் விட்டது.''

(தொடரும்)

தமிழாக்கம்: சீதாரவி.

திரைவிழாப்
படக்கதை — 4

இந்தத் தள்ளாடும் வாழ்க்கை

ஜார்ஜ் மிக லேசாகத் தள்ளாடி எழுந்து கொண்டார்.
''வருகிறேன்..... வருகிறேன்'' என்றார்.
'குரலில் இருந்த வேகம் செயலில் இல்லை. தட்டப்பட்ட வாசற்கதவை
மெதுவாகத்தான் அணுக முடிந்தது.
கதவைத் திறந்தார்.
போஸ்ட்மேன்!
பென்ஷன் பணத்தைக் கொண்டு வந்திருந்தான்.
ஜார்ஜ் பணத்தை வாங்கிக் கையெழுத்துப் போட்டார். எச்சில் தடவிய
விரலால் இருமுறை எண்ணினார்.
ஆன்னி பார்த்துக் கொண்டிருந்தான். பின்னிக் கொண்டிருந்த
ஸ்வெட்டரைக் கீழே வைத்துவிட்டு அவரை நெருங்கி மெல்ல அணைத்துக்
கொண்டாள்.
''நான் வெளியே போய் வருகிறேன்'' என்று ஜார்ஜ் கிளம்பினார்.
கையில் ஒரு பிளாஸ்டிக் கூடை.
மெதுவாக நடை போட்டார்.
மார்க்கெட்டுக்குப் போகும் வழியில்தான் பூங்கா இருந்தது.
நடந்த களைப்புத் தீர ஒரு பெஞ்சில் உட்காரலாம்போல் இருந்தது.
பட்சிகள் சிலுசிலு என்று இறக்கைகளைச் சிலுப்பி, கீச் கீச் என்று காதலித்தன.
ஒரு காதல் ஜோடி பெஞ்சில் அமர்ந்து ஒன்றை ஒன்று முகர்ந்து
கொண்டிருந்தது. அவர்களுக்கு இந்த உலகம், அதன்
மனிதர்கள் யாருமே ஒரு பொருட்டாகத் தெரியவில்லை.
ஒரு குருடன், ஒரு பெரும் புன்னகையுடன், கையில் வாக்கிங் ஸ்டிக்குடன்
பறவைகளின் சங்கீதத்தை ரசித்துக் கொண்டிருந்தான்.
'ம்ஹூம்.
பெருமூச்சுவிட்டார் ஜார்ஜ்.



எல்லோருக்கும் வாழ்க்கையில் நம்பிக்கை இருக்கிறது.

எழுந்தார். மார்க்கெட்டில் காய்கறிகளை எடுத்துப் போட்ட பெண் துடிப்பானவள். சில காய்கறிகளைக் கீழே சிதறவிட்டாள். ஜார்ஜுக்கு இரண்டு, மூன்று முறை குனிய வேண்டி இருந்தது. கஷ்டமாயிருந்தது. மூச்சிரைத்தது.

வீட்டுக்குப் போனால் போதும் என்றிருந்தது.

சாலையைக்கடக்கும்போது, 'தடார்' என்று ப்ரேக் அடித்து ஒரு கார் அவரை உரசிக் கொண்டு நின்றது. ஜார்ஜ் மிக பயந்து போனார்.

"கிழவா, சாக உனக்கு வேறு கார் கிடைக்கவில்லே?"

ஜார்ஜ் அந்தக் குத்தலைத் தாங்கிக் கொண்டார். இந்த வயோதிக வாழ்க்கையில் இப்படி எத்தனை குத்தல்கள்!

வீட்டுக்கு வந்தவுடன் ஆன்னி அவரை அன்பாய் வரவேற்றாள்.

சூடான சூப்பை எடுத்துக் கொடுத்தாள்.

"ஆன்னி..... உனக்கு ஒரு சந்தோஷமான விஷயத்தைச் சொல்லட்டுமா?"

சுருக்கம் விழுந்த முகத்தில், மேலும் ஆவல் சுருக்கங்கள் விழ ஆன்னி அவரை ஏறிட்டுப் பார்த்தாள்.

"இன்றைக்கு நமக்குத் திருமணமாகி ஐம்பது ஆண்டுகள் முடிவடைகின்றன."

ஆன்னி இத்தனை நேரம் வேலை செய்த களைப்பைப் போக்கிவிட்டு முகமலர்ந்தாள்.

"உனக்கு ஒரு பரிசு வாங்கி வந்திருக்கிறேன். என்ன என்று சொல்லேன்."

ஆன்னி கண்களை மூடி யோசித்து, தோற்று, கண்களைத் திறந்து சிரிக்க, ஜார்ஜ் கைப்பையிலிருந்து அதை எடுத்து வெளியே விட,

அது மெத்தென்று மேஜை மேல் குதித்து....

'ம்யாவ்' என்றது.

கறுப்பாய் இருந்தது. அழகாய் இருந்தது. சின்னக் கண்களை விரித்துப் பார்த்து, இன்னொரு முறை 'ம்யாவ்' என்று குரல் கொடுக்க, ஆன்னி வெகு ஆவலுடன் அதைத் தூக்கி மடியில் போட்டுக் கொஞ்சினாள்.

மறுநாள்.

ஜார்ஜ் அந்த செல்லப் பூனையின், சின்னத் தாவல்களைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தபோது அந்த அலறல் கேட்டது.

பாத்ரூமிலிருந்து! ஆன்னியின் அலறல்!

"ஆன்னி" என்றார் ஜார்ஜ் நெஞ்சப் பதைப்புடன்.

பாத்ரூமுக்கு ஓடினார்.

ஆன்னி ஒரு நம்பமுடியாத கோணத்தில் விழுந்து கிடந்தாள்.

முகத்தில் டன் டன்னாய் வேதனை. அந்த வேதனை இழைத்துவிட்ட கோடுகள்.

"வழுக்கி விட்டது" என்றாள் முனகலாக.

ஜார்ஜ் அவளைக் கைத்தாங்கலாக எழுப்பி, மெதுவாக அணைத்துப் படுக்கையில் கொண்டு வந்து விடுவதற்குள் ஆன்னி செத்து, செத்துப் பிழைத்தாள்.

இடுப்பு எலும்பு உடைந்துவிட்டது போலிருந்தது.

ஜார்ஜ் கீழே இறங்கி ஆஸ்பத்திரி ஆம்புலன்ஸிற்கு ஃபோன் செய்து, அவளருகில் வந்து அமர்ந்து கொண்டார்.

தலையை ஆதுரத்துடன் தடவிக் கொடுத்தார்.

ஆம்புலன்ஸின் ஸைரன் ஒலி கேட்டபோது, பூனை 'ம்யாவ்', 'ம்யாவ்' என்று கட்டிலைச் சுற்றிச் சுற்றி வந்தது.

ஜார்ஜைத் தனிமை முட்கரண்டியாகக் குத்தியது.

தினமும் ஆஸ்பத்திரிக்குப் போய் ஆன்னியைப் பார்த்து வந்தாலும்கூட, மற்ற நேரங்களில் அந்தத் தனிமை இருக்கிறதே.....

ஆன்னி இருந்தால் வீடு எவ்வளவு கலகலப்பாய் இருக்கும்.



படவிழா நடந்த காலத்தில் இன்னொரு விசேஷமும் நடந்தது. அதுதான் பந்த். திடீரென்று ஒரு காலை, ஊரில் இருந்த ஹோட்டல்களை இழுத்து மூடிவிட்டார்கள். தண்ணீர்ப் பஞ்சமாம்!

'ஊரில் தண்ணீர்ப் பஞ்சம் தலைவிரித்தாடும் போது அதற்கு வழி பண்ணாமல், செலவழிக்காமல் ஃபிலிமோத்ஸவ்வுக்குப் பணத்தைத் தண்ணீராகச் செலவழிப்பானேன்?' என்று ஒரு துண்டுப் பிரசுரம் கேள்விகளை அடுக்கியது.

பத்திரிகைகளில் ஆசிரியருக்குக் கடிதம் பகுதியில் படவிழாவைத் தாக்கியும் ஆதரித்தும் தினசரி கடிதங்கள்.

இருந்தும், படவிழா எல்லாவற்றையும் அலட்சியம் செய்துவிட்டு அதுபாட்டிற்கு ராஜபாட்டையில் ஜம்மென்று நடந்தது.

நம் ஊர் ஃபிலிம் நியூஸ் ஆனந்தன் அங்கே ஒரு கண்காட்சி வைத்திருந்தார். என். டி. ஆர். நடித்த முதல் பட ஸ்டில்லில் தொடங்கி ஏறக்குறைய அத்தனை தெலுங்குப் படங்களின் ஸ்டில்களையும் பார்வைக்கு வைத்திருந்தார்.

அந்தக் கண்காட்சியில் ஒரு தமிழ்ப்பட ஸ்டில் லும் எட்டிப் பார்க்கக் கூடாது என்று சொல்லி விட்டார்களாம்!

அது அப்படி இருக்க, கண்காட்சியைப் பார்க்க வந்த பார்வையாளர்களில் ஒருவர் தெலுங்குப் பட ஸ்டில்லுக்குக் கீழே இருந்த தமிழ் விளக்கத்தைக் காட்டி, 'ஹைதராபாத்தில் எப்படி தமிழ் நுழையலாம்?' என்று வரிந்து கட்டிச் சண்டை பிடித்தார்.

இப்படி தமிழ், தெலுங்கு என்று அடித்துக் கொள்வதைப் பார்த்து மனம் நொந்து போனது.

படத்தில் ஃபிலிம் நியூஸ் ஆனந்தனின் கண்காட்சியைச் சுற்றி வரும் ராஜகலோசனு.

அவருக்குப் பிடித்த சூப் போட்டுத் தருவாள். ரெகார்ட் ப்ளேயரில் அவருக்குப் பிடித்த ரெகார்ட் போடுவாள். இப்போது இடுப்பு எலும்பு முறிந்து ஆஸ்பத்திரியில்....
ம்ஹூம்.

ஜார்ஜ் எழுந்தார். ரெகார்ட் ப்ளேயரில் சிறிது நேரம் ஒரு ரெகார்டை ஓடவிட்டார். மூலையில் தூசி படிந்து கிடந்த வயலின் பெட்டியைத் திறந்து சிறிது நேரம் வயலின் வாசித்தார்.

பூனை அவ்வரை ரசித்து ஒருமுறை 'ம்யாவ்' என்றது.

'ச்சே' என்று வயலினைத் தூக்கிப் போட்டார் ஜார்ஜ்.

ஆன்னியைத் தினமும் இவ்வளவு தூரம் ஏன் போய்ப் பார்க்க வேண்டும். ஆன்னியின் அருகிலேயே இருந்துவிட்டால்.....

நாடையைப்பிடிக்காதகுறையாய் அந்த டாக்டரிடம் கெஞ்சினார் ஜார்ஜ்:

''எனக்கு இந்த ஆஸ்பத்திரியிலேயே ஒரு படுக்கை ஒதுக்கிக் கொடுங்கள் டாக்டர். என் மனைவியின் அருகில் இருக்க ஆசைப் படுகிறேன்.''

அந்த டாக்டருக்குக் கடைசியில் மனம் இரங்கிவிட்டது. ஆண்களுக்கான பகுதியில் ஒரு கட்டிலில் ஜார்ஜுக்கும் படுக்கை.

ஆன்னியை அடிக்கடி வந்து பார்த்துக் கொள்ள முடிந்தது. மாலை வேளைகளில் சக்கர நாற்காலியில் ஆன்னியை வைத்து ஆஸ்பத்திரி தோட்டத்தில் உலா வரமுடிந்தது. மெல்ல மெல்ல ஆன்னியிடம் ஊன்று கோல்களைக் கொடுத்து நடக்கச் செய்ய முடிந்தது. அவளிடம் நிறைய பேச முடிந்தது. பார்க்கில் தான் பார்த்த காதலர்கள் பற்றி, குருடனைப் பற்றி, பறவைகளின் காதல் பற்றி.... கொஞ்சம் கொஞ்சமாக ஆன்னி, ஊன்று கோல்கள் இல்லாமலேயே நடக்கப் பழகிவிட்ட ஒரு நாளில் அவளை டிஸ்சார்ஜ் செய்தார்கள்.

வாசலுக்கு வந்து இருவருமாய் அந்த ஆஸ்பத்திரி கட்டிடத்தை அண்ணாந்து பார்த்தார்கள். மெல்ல நடந்து பஸ் ஸ்டாண்டை அடைந்தார்கள்.

வீட்டை அடைந்தபோது 'ம்யாவ்' அவர்களை வரவேற்றது.

மறுபடி பழைய வாழ்க்கை.

ஜார்ஜுக்குப் பயமாக இருந்தது.

தனியாக வாழ்ந்த அந்தச் சில கரிய நாட்களை நினைத்துப் பார்க்கக் கூடப் பயமாக இருந்தது.

''ஆன்னி.''

''ம்'' என்றாள் ஆன்னி மிக அன்பாக.

''என்ன வாழ்க்கை இது! ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிஷமும் சாவை எதிர் பார்த்து பயந்து வாழும் வாழ்க்கை.''

ஆன்னி, 'இது என்ன புது சிந்தனை' என்பதுபோல் அவரைப் பார்த்தாள்.

''நான் செத்துவிட்டால் இந்த உலகில் நீ எப்படித் தனியாக இருப்பாய் ஆன்னி?''

''அப்படி எதுவும் நடக்காது. நான்தான் முதலில் செத்துப் போவேன் ஜார்ஜ்.''

லக்கேஜ் பெட்டித் தயாரிப்புத்
தலைவர்களின் படைப்பு—


விஐபி
கன்கார்டு

வந்திறங்குது இப்போது—

இதோ, ஜெட் யுகக் கட்டழகுள்ள
புதிய விஐபி கன்கார்டு! நாகரீக
நரம்போடிய அலாதி ஸ்டைலிங்.
கண்டறியாத வர்ண வகைகள்:
பீச க்ரீம் (செவ்விள மஞ்சள்),
டெஸர்ட் பிரவுன் (மணற் கபில
நிறம்), மிஸ்ட் க்ரே (பனிச்
சாம்பல்), க்ரீம் சாக்கலேட்,
மேலும் பலப் பல. உட்புறமோ
இடவசதி மிகுதி.

ஓடோடிப் பார்வையிடுவீர்:
அருகிலுள்ள வியாபாரியிடம்...
சொகுசு லக்கேஜ் புதுவரவுகள்.

ஆகாயமெட்டும் எங்கள் அதிநவீனக் கற்பனை.



தேர்ந்தெடுக்க மிகப் பல வகைகள்,
வருங்கால யோக வரவுகளோ மேலும் பலப்பல.

LINTAS VIP M 10 2013 TM

''நோ! நோ!'' என்று கத்தினார் ஜார்ஜ். ''என்னால் தனியாக இருக்க முடியாது. நீ இல்லாமல் இந்த உலகத்தில் என்னால் ஒரு நிமிடம்கூட இருக்க முடியாது.... அப்படி ஒரு நிலைமை வரவே கூடாது.... வரவே கூடாது....''

ஜார்ஜ் வெறி பிடித்தவர்போல் எழுந்தார்.

தடதடவென்று சென்று வீட்டின் எல்லா ஜன்னல்களையும் அடைத்தார். கதவை இறுக மூடினார்.

ஆன்னி அவரை வியப்புடன், கலவரத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவர் காஸ் ஸ்டவ்வின் எல்லாக் குமிழ்களையும் திருகிவிட்டார்.

'ஸ்' என்று மெலிய சத்தத்துடன் வாயு அந்த அறையை நிரப்பத் தொடங்கியது.

மெல்ல மெல்ல ஜார்ஜின் கண்கள் அகன்றன. ஆன்னியின் கண்கள் அகன்றன. சூழ்நிலையில் எரிவாயுவின் ஆதிக்கம் மேலோங்கியிருக்க, ஆன்னி அதீத கலவரத்துடன் மௌனம் சாதிக்க.....

'ம்யாவ்....'

ஆன்னி குனிந்தாள்.

கட்டிலுக்குக்கீழே பூனை ஒருமுறை துள்ளிக் குதித்தது.

'ம்யாவ்.... ம்யாவ்... ம்யாவ்... ம்யாவ்... ம்யாவ்....'

ஒவ்வொரு ம்யாவிற்கும் அது துள்ள....

ஜார்ஜும், ஆன்னியும் அதைப் பார்த்தார்கள்.

அந்தப் பூனைகூட வாழ்ந்துதான் ஆக வேண்டும் என்பதைச் சொல்லாமல் சொல்கிறதோ!

''ஜார்ஜ்....'' என்றாள் ஆன்னி. ''ஜார்ஜ், நான் வாழ்க்கையின் மிச்சமிருக்கும் ஒவ்வொரு கணத்தையும் வாழ விரும்புகிறேன் ஜார்ஜ்..... ப்ளீஸ்.''

ஜார்ஜ் அந்தக் கடைசி வினாடியில் மனம் மாறினார். எழுந்தார். தள்ளாடிக் கொண்டே சென்று குமிழ்களைத் திருகி மூடினார்.

ஜன்னல்களைத் திறந்துவிட்டார்.

'ப்ஹா' என்று ஒரு பெருமூச்சுவிட்டார்.

ஆன்னி கண்களில் நீருடன் அவரைப் பார்த்தாள்.

ஜார்ஜ் மெல்ல ஆன்னியை நெருங்கி அணைத்துக் கொண்டார்.

'ம்யாவ்' என்றது அது - சந்தோஷ 'ம்யாவ்.'

A MOMENT IN TIME: ஃப்ரான்ஸ் தேசத்துப் படம். பார்வைகள், உணர்ச்சிகள், மௌனங்கள் ஆகியவற்றாலேயே உருவாக்கப்பட்ட நிறைய ஃப்ரேம்கள். வயோதிக நாட்களின் பய எண்ணங்களைத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டிய ஸெலுலாயிட் திறமை. படம் ஸ்லோதான் என்றாலும் பசுமரத்தாணி என்று படம் முடிந்தவுடன் எழுந்த கை தட்டல்கள் சொல்லிவிட்டன.

— ஜெயமன்மதன்.



குழந்தையைத் திருத்தினேன்

போட்டி: 43

சில குழந்தைகள் படிப்பில் நாட்டமின்றி இருக்கும்; வேறு சில குழந்தைகள் உணவில் காய்கறி சேர்த்துக் கொள்ள மாட்டேன் என்று அடம் பிடிக்கும்; இன்னும் சில சதா ஏதாவது குறும்புத்தனம் செய்து பொறுமையைச் சோதிக்கும்; செல்லம் கொடுத்துக் கெட்டுப் போன குழந்தைகள், எத்தனையோ; பொய் பேசுதல், பொறாமைப்படுதல், ஏன் திருட்டுப் புத்தியைக் கூட வளர்த்துக் கொண்டுவிட்ட சில குழந்தைகள் உண்டு. உங்கள் வீட்டில் அல்லது அக்கம் பக்கத்தில் உள்ள ஒரு குழந்தையை என்ன உபாயம் செய்து திருத்தினீர்கள்? அந்த அனுபவத்தைக் கீழே வெற்றிடத்தில் எழுதி அனுப்புங்கள். இந்த அரைப் பக்கத்தை முழுமையாகக் கத்தரித்து அனுப்பும்போது உறை மீது, ''குழந்தையைத் 'திருத்தினேன்'' என்று குறிப்பிடுங்கள். பிரசுரமானால் பரிசு. தவிர ஒருவருக்குக் குலுக்கல் முறையில் வி. ஜி. பி. ஸூட்கேஸ்.


முடிவு தேதி: 10.3.86


என் பெயர்: ....

விலாசம்: ....

வி.ஜி.பி. ஸூட்கேஸ் பரிசுத் திட்டம்

லடாக்கில் கடுமையான பனிப்புயல் வீசிய பிறகு குவியும் பனியின் கனத்தைத் தாங்கி நின்று பாதுகாப்பு தரக்கூடிய கூரைத் தகடு எது?





லடாக்கில் இத்தகடுகள் தேவைப்படாது என்றாலும் ராம்கோ அஸ்பெஸ்டாஸ் கூரைத் தகடுகள் மிக அதிக பளுவையும் தாங்கி நிற்கும் வகையில் உறுதியாகத் தயாரிக்கப்படுகின்றன.

ராம்கோ அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் ஆயுளுக்கும் உழைக்கும் வண்ணம் வலுவாக உரு வாக்கப்படுகின்றன. சிறந்த மூலப் பொருட் களைத் தேர்ந்தெடுப்பதில் கண்காணிப்பு, உற்பத்தியில் நவீனத் தொழில்நுட்பம், திட்ட மிட்ட தரக்கட்டுப்பாடு — இவற்றின் இணைப்பே ராம்கோ அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகளின் சிறப்பு.

எனவேதான் ராம்கோ அஸ் பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் எப்படிப்பட்ட பருவநிலைகளையும் எதிர்கொண்டு, காலத்தை வென்று நிலைத்து நிற்கின்றன.

எனவே கூரைத் தகடுகளில் ராம்கோவின் புகழ் கொடி கட்டிப் பறப்பதிலும் தலைசிறந்த கட்டிடக்கலை நிபுணர்களும் பொறியாளர்களும் அதையே தேர்ந்தெடுப்பதிலும் வியப்ப தற்கு ஏதுமில்லை.

Ramco

ராம்கோ. ஏனெனில் அதுவே அதிகபட்ச வெப்பத்தையும் அநாயாசமாக ஏற்று, ஆயுட்காலம் முழுவதும் உழைக்கும் வண்ணம் உறுதியாகத் தயாரிக்கப்பட்டு, சோதிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

ராம்கோ அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகளும் மற்ற உபகரணங்களும் தரமான கூரைகளுக்கு மட்டுமல்ல நிரந்தரமான பாதுகாப்புக்கும் கூட.

சதர்ன் அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் லிமிடெட்
739, அண்ணா சாலை,
சென்னை 600 002.
போன்: 82006

பரிபூரண விற்பனையாளர்கள்:
ராஜா சாரிடி டிரஸ்ட்

அலுவலகங்கள்: பெங்களூர்
● எர்ணாகுளம் ● ஹைதராபாத்
● பூனா ● விஜயவாடா
● விசாகப்பட்டினம்

தொழிற்சாலைகள்:
அரக்கோணம் (தமிழ்நாடு)
கரூர் (கர்நாடகம்)

பிரஷர் பைப் பிரிவு:
மக்ஸி (மத்தியப் பிரதேசம்)

CAS SACL 27 A 85 TAM

சொர்க்கத்தின் கதவுகள்

16

லக்ஷ்மி

குளிர் காலத்துப் பனி மறையத் துவங்கி கதிரவனின் கோடை நாட்களை அறிவுறுத்திய படி, காலை வெய்யில் எரிக்கத் துவங்கிவிட்டிருந்தது. வீட்டுப் பொறுப்பு, கவலைகள், போதாதகுறைக்குப் பிறரது பிரச்னைகள் என்று அலண்டு போயிருந்தார் சுவாமிநாதன். முன்னைப் போல் அவரால் எதையும் துணிச்சலுடன் எதிர்க்கும் சக்தி உடலில் வற்றிப் போயிருந்தது. மனத்தில் மட்டும், நிறையவே, உறுதியைத் தேக்கி வைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் தவித்தார் அவர். இரவு முழுவதும் பல்வேறு எண்ணங்களினால், படுக்கை மீது தூங்காமல் புரண்டு கொண்டே இருந்தவர், அவரையறியாமல் கண்ணயர்ந்து போனார்.

பூப்போல் அவரை இலேசாக ஒரு கரம் தொட்டதும் தூக்கி வாரிப் போட எழுந்தார். விமலா! மெல்ல, தட்டித் தடவிக் கொண்டு, காப்பி தயாரித்து எடுத்து வந்து எழுப்பி இருக்கிறாள்.

படுக்கையறை ஜன்னலினூடே சூரியனின் காலை நேரத்துச் சூடு உறைத்ததுகூடத் தெரியாமல் இப்படியா தூங்கிப் போய்விட்டார்? பாவம் விமலா! கணவர் காலைக் காப்பி முகத்தில்தான் கண் விழிப்பார் என்று, மிகுந்த கரிசனத்தோடு காப்பியுடன் வந்திருக்கிறாள்.

"உன்னை யாரு இதெல்லாம் செய்யச் சொன்னது? என்னை எழுப்பக் கூடாது?" என்று உரிமையுடன் கடிந்தபடி காப்பித் தம்ளரைக் கையில் வாங்கினார். "இப்படி பேசாமல் ஓய்வா படுத்துக் கொள். சும்மா உடம்பைப் போட்டு அலட்டிக் கொண்டால், திருப்பியும் உடம்புக்கு வந்துடும்னு டாக்டர் சொல்லி இருக்கார்" என்று உத்தரவிட்டார்.

"தினமும்தான் நீங்களுடாய் உழைக்கறேள். பாவமா இருந்தது. காப்பிதானே, போடலாம்னு செஞ்சேன்" என்று பரிவுடன் மெல்லக் கூறிய விமலா அவர் அருகில் அமர்ந்தாள். அவசரமாக பல் துலக்கிவிட்டுக் காப்பியைப் பருகியபடி தம் மனைவியைப் பார்த்தவர் ஒருகணம் சிந்தனையில் ஆழ்ந்து போனார்.

"ஒரு காலத்தில், அவர் உடலில் இளமை இருந்த சமயம், இதே விமலாவை, மணிக்கணக்குப்படி காப்பி தரவில்லை என்று எத்தனை மிரட்டி இருப்பார்? ஆனால் விமலா. உடல் நலிவையும் பாராட்டாமல் பச்சாத்தாபத்துடன் அவருக்காகக் காப்பி எடுத்து வந்தது அவளது மன உறுதியைத்தானே காட்டுகிறது? இந்த நிலையிலும், கடமையை நிறைவேற்ற வேண்டும் என்ற திடமான மனம் அவளுக்கு இருக்கும்போது..... அவர் தம் கடமைகளைக் கண்டு கலங்குவதா?

"சரி நீ இனிமேல் ஓய்வு எடுத்துக்கோ. நான் கவனிச்சுக்கறேன்" மனைவியைக் கை அமர்த்திவிட்டு, குளியலறைக்குள் புகுந்து கொண்டார். இயந்திர கதியில் வீட்டைக் கவனித்து, விமலாவிற்குப் பணிவிடைகள் செய்த பிறகு, முன்னறைக்கு வந்தவர், அனுதையாக வழக்கம்போல் கிடந்த செய்தித்தாளை அவசரமாகப் பிரித்தார். வாயிற்பக்கம் காலடி ஓசை கேட்டதும் எரிச்சலுடன் கதவைத் திறக்க எழுந்து வந்தார்.

"ஸார்! மிஸ்டர் சுவாமிநாதன் வீடு இதுவா?" வெளியே குரல் கேட்டதும், கதவை வேகமாகத் திறந்து "ஆமா, யாரு அது?" என்று வினவினார் கோபத்துடன்.

பத்து வயதுச் சிறுவன். கையில் ஒரு சிறு கடிதத்துடன் நின்றிருந்தான். எடுபிடி வேலைகளுக்குச் செல்லும் ஏழைமைத் தோற்றம். ஏதேனும் பிச்சையாக இருக்குமோ? முன் கூட்டியே பெயரைத் தெரிந்து கொண்டு ஏமாற்றும் திருட்டுக் கும்பலைச் சேர்ந்தவனோ? கேள்விக்குறிகளுடன் அவனை ஏற இறங்கப் பார்த்தபடி. "இப்ப எதுக்காக அவரைத் தேடறே?" என்று அதட்டினார்.

"நான் கேசவன் ஸாருக்கு, ஓட்டல் சாப்பாடு கொண்டு குடுக்கிற பையன். அவர்தான் உங்க விலாசத்தைச் சொல்லி, இந்தக் கடிதத்தைக் குடுக்கச் சொன்னாங்க"

"கேசவனா?" வியப்புடன் அவர் கடிதத்தைக் கைநீட்டி வாங்கினார்..

"ரொம்ப அவசரம்னு சொல்லச் சொன்னாருங்க."

''அவசரமா?''

''ஆமாங்க. அவருக்கு எங்கியோ, ஆக்ஸிடெண்ட் ஆயிட்டுதாம்.''

அவர் பதற்றத்துடன், ''எங்கே? எப்போ?'' என்று கேட்டார்.

''வீட்டிலதான் இருக்கார். பெரிய கட்டுப் போட்டுக்கிட்டிருக்கார். உங்களை முடிஞ்சா உடனே வரச் சொன்னார் ஸார். வீடு தெரியுமா ஸார்'' பையன் மிக்க கவலை தோய்ந்த முகத்தோடு கேட்டான்.

கேசவனது இடம் அவருக்குத் தெரியும். கட்டைப் பிரம்மச்சாரி குடியிருப்பு. சந்து பொந்துகளைக் கடந்து ஒரு மூலையில் தாழ்ந்த பகுதியில் சிறு அறைக்குள்ளே அவன் பதுங்கி இருந்தான்.

''சரி நீ போ. நான் பார்த்துக்கறேன்!'' அவனை அனுப்பிவிட்டு, அவசரமாகக் கடிதத்தைப் பிரித்தார்.

''ஆபத்தில் சிக்கிக்கொண்டேன். உடனே வரவும்.'' — கேசவன்.

அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆபத்து என்றால் எந்தவிதமான ஆபத்து? இது நிச்சயம் விபத்தல்ல என்று அவருக்குள் எதுவோ இடித்துக் கூறியது. கேசவனைப் பார்க்க அவனுடைய இடத்திற்குப் போவது அவருக்கு நல்லதா? ஒரு விநாடி மனம் தடுமாறியது. சே! அவரை யார் என்ன செய்து விட முடியும்? நீதி, நேர்மை, என்ற உயர்வான எண்ணங்களுக்காகவே போராடி வருபவர். கடமைகளே பெரிது என எண்ணும் கர்ம யோகி அவர். கேவலம் முகம் தெரியாத, கேசவனது எதிரிகளைப் பற்றிக் கவலைப்படுவாரா? விமலாவுடன் தடுமாறி, சமைத்த காலைச் சாப்பாட்டை வேகமாக முடித்துக் கொண்டு வெளியே புறப்படத் தயாராகி விட்டார்.

மெல்லிய புன்முறுவலுடன் விமலா அவரை நோக்கினாள். ''எங்கே போகிறீர்கள்?'' என்று எப்பொழுதுமே அவள் கேட்டதில்லை. இப்போதா கேட்கப் போகிறாள்?

''விமலா! வெளியே கொஞ்சம் வேலை இருக்கு. பார்வதி மாமியிடம் சொல்லி விட்டுப் போறேன். வேலை செய்யறேன்னு கிளம்பி அதிகமாக்கிக் கொள்ளாதே'' கனிவும், கண்டிப்புமாகக் கூறிவிட்டுக் கிளம்பினார். பார்வதியம்மாள் பலத்த சந்தோஷத்துடன், விமலாவிடம் விரைந்ததைப் பார்த்துவிட்டு, நிம்மதியாக பிரதான சாலையில் மறைந்தார்.

கேசவனது வீட்டை அடைந்தபோது பிற்பகல் நேரமாகிவிட்டிருந்தது. வெய்யிலின் கடுமை அதிகம் இல்லை என்றாலும், கண்கள் கூசும் அளவிற்குச் 'சுளீர்' என்றிருந்தது. வாயிற் கதவு இலேசாகச் சாத்தியிருந்ததை மெல்ல விரலால் தட்டிவிட்டு, ''கேசவா'' என்றார் மிருதுவாக.

''வாங்க ஸார்'' பலவீனமான குரல்கேட்டதும் வியப்புடன் கதவைத் திறந்தவருக்கு முதலில் தெரிந்தது ஒரே இருட்டு. ''வெய்யிலில் வந்தது. கண் தெரியலே'' என்றபடி மெல்ல உள்ளே நுழைந்தார்.

சிறிது நேரத்தில் நிதானத்துக்கு வந்தபின் உற்றுப் பார்த்தவர் திடுக்கிட்டுப் போனார். அறையின் கயிற்றுக் கட்டிலின் மீது கேசவன், மண்டையில், கையில் காலில் என்று பலத்த கட்டுகளுடன் படுத்திருந்தான்.

''ஐயையோ! இதென்னப்பா இது? கேசவா? என்ன ஆச்சு உனக்கு?'' உடம்பெல்லாம் ஆடிப் போயிற்று அவருக்கு.

வாயிற் கதவை மூடிவிட்டு, அருகில் வந்து அமரும்படி சைகை செய்தான் கேசவன். அவர் அவ்வாறு அமர்ந்ததும், மெல்லக் கூறத் துவங்கினான் அவன்.

''ஸார்! அன்னைக்கு உங்க வீட்டுக்கு வந்தேனே.. நினைப்பிருக்கா?'' திக்கித் திணறி அவன் கேட்டதும் அவர் அந்த நாளை நினைவு கூர்ந்தார்.


கலவரமான முகத்துடன் அவன் அவரிடம் ஓடி வந்தது, ஆலோசனை கேட்டது எல்லாமே நினைவுக்கு வந்தன.

''கேசவா! உன் நிலையைப் பார்த்தால் ரொம்ப மோசமா இருக்கப்பா. முதல்ல நீ என்கூடப் புறப்படு. நல்ல ஆஸ்பத்திரியில சேர்க்கணும். ரொம்ப ரத்தம் போயிருக்கணும்னு சந்தேகப்படறேன். பிறகு எல்லாம் பேசலாம்.''

அவன் ''வேணாம் ஸார்! ஆஸ்பத்திரி.... போலீஸ் எதுவுமே வேணாம்'' என்று பலவீனமாகக் கூறியபடி மயக்கமாகிப் போனான். அவருக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. மறுகணம் பளிச்சென்று டாக்டர் மோகன் குறிப்பிட்ட 'பாலி கிளினிக்' நினைவில் வந்தது. தமது சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்தவர், வேகமாக வெளியே போய் டாக்ஸி கொண்டு வந்தார்.

மயக்கமாக இருந்த கேசவனை மெல்லத் தூக்கி நிறுத்திக் கொண்டார். ''கேசவா! மெதுவா எம் மேலே சாய்ந்து கொண்டு, வெளியே வா. டாக்ஸி கொண்டு வந்திருக்கேன். ஆஸ்பத்திரி போயிடலாம். நல்லா குணமாயிடும்'' என்று காதருகில் கிசுகிசுத்தார்.

வாயிற்புறம், மிகுந்த சிரமத்துடன் அவனை வெளிக் கொணர்ந்தவர், டாக்ஸிக் காரரை உதவிக்கு அழைத்தார்.




"என்ன ஸார்! ஆக்ஸிடெண்டா?" சந்தேகத்தோடு கேட்டார் டாக்ஸிக்காரர்.

"வீட்டிலே விழுந்திட்டாருப்பா. குளியலறையில் ஒரே பாசி. பார்க்கலே. மண்டையில் வேறே அடி. ஒரே மயக்கம்." பேசியபடி காரினுள் மெதுவாகக் கேசவனை ஏற்றிக் கொண்டவர், "நேரா மந்தவெளிப் பக்கம் போயிடுப்பா. அங்கேதான் நான் சொன்ன நர்ஸிங் ஹோம்" என்றார் அழுத்தலாக.

'நமக்கேன் வம்பு. பெரியவர் பொய் பேசினா என்ன, நிஜம் பேசினா என்ன? போலீஸ் ஸ்டேஷன் போகாமல், ஆஸ்பத்திரிக்குத்தானே போகச் சொல்றாரு' மனத்துக்குள் எண்ணமிட்டவராய், டாக்ஸிக்காரர் கதவுகளை அழுத்தி மூடினார்.

மந்தைவெளிப்பக்கமிருந்தபாலிகிளினிக்கில் இறங்கியவர், டாக்ஸியை அனுப்பி விட்டு, கேசவனை மிகுந்த பிரயாசையுடன், முன்பக்கமிருந்த வரவேற்பு அறையில் அமர்த்தினார்.

"டாக்டர் மோகனைப் பார்க்கணும்.



ரொம்ப அவசரம். நான் சுவாமிநாதன் வந்திருக்கேன்னு சொன்னாப் போதும்'' ரிஸப்ஷனிஸ்டிடம் சொன்னார் அவர்.

ஐந்தே நிமிடங்களில் டாக்டர் மோகன், ஓடோடி வந்தான். கேசவனின் நிலைமையை விளக்கிவிட்டு, ''உங்க நர்ஸிங் ஹோமுக்கு இப்படித்தான் வரமுடிந்ததுப்பா'' என்றார் சோகமான புன்னகையுடன்.

''பரவாயில்லே ஸார். உங்க நோயாளியை நல்லபடியா அனுப்பி வைக்கிறது எங்க பொறுப்பு'' என்று புன்னகை புரிந்துவிட்டு டாக்டர் மோகன் உள்ளே சென்றான்.

கேசவனை ''ஸ்டெரச்சரில்'' வைத்து உள்ளே எடுத்துச் செல்ல ஏற்பாடுகளைச் செய்தபடி இருந்த டாக்டர் மோகனிடம் மெதுவாகக் கவலையுடன் கேட்டார் அவர். ''பிழைச்சுக்குவானா?''

''இரத்தம் அதிகமா வெளியேறி இருக்கு; கவலைப்படாதீங்க. காப்பாத்திடலாம்'' என்று தைரியம் கூறினான் டாக்டர் மோகன்.

''நான் இங்கேயே உட்காரட்டுமா?''

''வேண்டாம் ஸார். எங்ககிட்டே அவரை ஒப்படைச்சிடுங்க. இங்கே, முழுமூச்சோடு, வேலை செய்யும் இளைய டாக்டர்கள் இருக்காங்க. எப்பாடுபட்டாவது அவரைப் பிழைக்க வச்சுடுவோம். நீங்க வீட்டுக்கு நிம்மதியா போங்க.''

நிம்மதியாகவா? உயிருக்கு ஆபத்தான நிலையில் அவனை அவர் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார். அவனுக்கு உற்றார், உறவினர் என்று எவரும் இல்லைதான். ஆனால் நிறைய எதிரிகளைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறானே? இவனை உயிருடன் விட்டால் ஆபத்து என்று அவர்கள்தான் இவனை இப்படி அடித்துப் போட்டுவிட்டிருக்கவேண்டும். அத்தகைய அரக்கர்களிடமிருந்து அவனை மீட்டு மீண்டும் ஒரு புது வாழ்வுக்கு அவரால் வழி வகுத்துக் கொடுக்க இயலுமா?

''என்ன யோசனை? என் மேலே நம்பிக்கை இல்லையா?'' டாக்டர் மோகன் சீண்டினான்.

''அதுக்கில்லே. நான் கொண்டு வந்த பையன் நிதிநிலைமை எனக்குத் தெரியாது. உங்க பில்...''

''ஸார்! இன்னமும் டாக்டர் மோகனை நீங்க புரிந்து கொள்ளவில்லைன்னு நினைக்கிறேன். வைத்தியத்தை வியாபாரமா நினைக்கிற மோகன் நான் இல்லே. அதை உயிராக நினைக்கிறேன்.''

''ரொம்ப சந்தோஷம். எப்படியாவது கேசவன் பிழைக்கணும்'' அவர் தொண்டையில் ஏதோ அடைத்துக் கொண்டது.

''உங்க மனத்தில் பிறருக்கு உதவணும்கிற ஒரு நல்ல எண்ணம் தீவிரமாக இருக்கு பாருங்க. அது தெய்வமாக இருந்து அவரைக் காப்பாத்திடும். இல்லாட்டி.....

''என்ன சொல்றேப்பா?''

''இல்லாட்டி அவர் ரொம்ப ஆபத்தான நிலையில் இருக்கார்னு உங்களுக்குச் சொல்ல விரும்பாம, 'பிழைச்சுடுவார்'னு தைரியமா சொல்லமாட்டேன் ஸார். நான் வரேன்'' டாக்டர் மோகன் விருக்கென்று உள்ளே மறைந்தான்.

வழி முழுவதும் அவர் ஆண்டவனைப் பிரார்த்தனை செய்தபடி நடந்தார். ''இறைவா! தவறு செய்துவிட்டுத் திருந்தி வாழ நினைக்கும் இளம் வாலிபனுக்கு உயிர் பிச்சை கொடு. அவனுக்கு வாழ்க்கையின் பாதை மிக நீண்டு இருக்கிறதே. அதில் திடமாக, காலை ஊன்றி நடந்து நல்ல பாதையில் செல்ல மறு வாழ்வு தா....'' அவர் தெருவில் கண்களில் நீர் வழிய நடந்து சென்றார்.

(தொடரும்)


போப்புக்கு ஒரு பரிசு : நண்டு!



சென்னையில் போப் ஆண்டவருக்கு அளிக்கப்பட்ட பரிசுப்பொருட்களிலேயே மிக வித்தியாசமானது, நண்டு ஒன்று சிலுவையைப் பிடித்துக் கொண்டிருப்பது போன்ற உருவம். இது எதற்காக?

செயிண்ட் பீட்டர் கடலில் பயணம் செய்து கொண்டிருக்கும்போது புயல் படகை அலைக்கழித்ததாம். ஆண்டவனை வேண்டிக் கொண்டு, புனித பீட்டர் தாம் அணிந்திருந்த சிலுவையால் கடல் பரப்பைத் தொட்டதும், சிறிது சிறிதாகக் கடலின் ஆவேசம் குறைந்து, முழுமையாய்ப் புயல் நின்றும் விட்டதாம். ஆனால் கைதவறிக் கடலினுள் போய் விட்டதாம் அந்தச் சிலுவை! வருத்தமடைந்தார் செயிண்ட் பீட்டர். கரை வந்து சேர்ந்து துயருடன் நின்று கொண்டிருந்தபோது ஒரு நண்டு, கடலினுள் மறைந்த சிலுவையைத் தன் முன்னிரு கால்களில் இடுக்கிக் கொண்டு வந்து தர, பீட்டர் நண்டை அன்புடன் தடவிக் கொடுத்தாராம்.

தகவல்: ஜூலி.



சின்னஞ்சிறு காயத்தில்கூட அழுக்குப் புகுந்துவிடும்
இதனால் காயம் பெரிதாகும், கஷ்டம் உருவாகும்.

உடனடியாக பாண்ட்-எய்ட் உபயோகியுங்கள்



உலகில் உள்ள தாய்மார்கள் நம்புவது பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள்—அது, காயங்களில் அழுக்குப் புகாமலும், தொற்றிலிருந்தும் காயங்களைப் பாதுகாக்கிறது.

ஆகவேதான் பாண்ட்-எய்ட் முழுப் பாதுகாப்பானதாகும். பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்கில் உள்ள நிரூபணமான ஆண்டிஸெப்டிக், காயத்தை ஆற்றுவதற்கு உதவுகிறது. அதிலுள்ள நுண்துளைகள் காயங்களை விரைந்தாற்றிட உதவுகின்றன. ஒட்டிக்கொள்ளாத வசதிமிக்க ஒப்பற்ற அடுக்கு.

காயங்களின் வெவ்வேறு வடிவம் மற்றும் அளவுகளுக்கு ஏற்ப வருகின்றன பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள். பெரிய புண்கள், சிறிய வெட்டுக் காயங்கள், கட்டுப்போட முடியாத இடங்கள், கொப்புளம் மற்றும் சிராய்ப்புகளுக்கு எப்போதும் உங்கள் கைவசமிருக்கட்டும் பாண்ட்-எய்ட் டிரஸ்ஸிங்குகள்.

கைவசம் வைத்திருங்கள் பாண்ட்-எய்ட்
ஏனென்றால், காயங்கள் எங்கும் எந்நேரமும் ஏற்படலாம்.

CBM/2514/TM

Johnson & Johnson

30. பதினேழு நாட்கள்!

மகாக்ஷத்ரபனுன நாகபாணன் சொற்களைக் கேட்டும் இகழ்ச்சிப் புன்முறுவலைக் கண்டும் எந்தவித சமாதானத்தையும் அடையாத க்ஷத்ரபன், கட்டிலில் ரண காயங்களுடன் கிடந்த தனது தலைவனை நீண்ட நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டே நின்றான். பிறகு மெதுவாக, "மகாக்ஷத்ரபர் இரும்பு மனம் இளகிக் கொண்டு வருவதாகத் தெரிகிறது" என்று சொன்னான்.

நாகபாணன் லேசாக நகைத்து, "தன்னந் தனியாக வந்து தானாகவே சிக்கிக் கொண்ட எதிரியைத் திரும்பிச் செல்ல அனுமதித்தது தவறு என்கிறீர்?" என்று வினவினான்.

"சிக்கிய எதிரியைத் தப்ப விடுவதால் எந்த அனுகூலம் கிடைக்கும்?" என்று க்ஷத்ரபன் வினவினான்.

"திடீர் படையெடுப்பு ஏற்பட்டிருக்காது" என்றான் நாகபாணன் சிரித்துக் கொண்டே.

"திடீர் படையெடுப்புக்கு ஏற்பாடு செய்யச் சாதவாகனனுக்கு அவகாசம் ஏது?"

"எந்த ஏற்பாடும் செய்யாமல் நம்மிடம் தலையைக் கொடுக்கச் சாதவாகனனை முட்டாள் என்று நினைக்கிறீரா?"

இதற்குச் சில விநாடிகள் பதில் சொல்லாத க்ஷத்ரபன், "சிக்கிய எதிரியைக் கொன்றிருந்தால் என்ன ஆகும்?" என்று வினவினான் கொடுமை நிறைந்த குரலில்.

"சரித்திரம் நம்மைக் கொன்றுவிடும்" என்ற நாகபாணன் பெருமூச்செறிந்தான். மேலும் சொன்னான்: "நான் சரித்திரத்தில் எப்படியும் ஜீவிப்பேன். எப்படி ஜீவிப்பேன் என்பதுதான் கேள்வி. சிக்கிய எதிரியைப் போகவிட்டுச் சமரில் நேருக்கு நேர் சந்தித்து வெற்றியடைந்த, அல்லது களத்தில் வீர மரணமடைந்த, வீரனாக ஜீவிக்கலாம். அல்லது என்னைக் காப்பாற்றிய எதிரி தனியாகச் சிக்கியபோது கொலை செய்து நன்றி கெட்ட கொலைகாரனாகச் சரித்திரத்தில் இடம் பெறலாம். பிந்திய நிலையை அடைய நான் விரும்பவில்லை. இது உமக்குப் புரியாது க்ஷத்ரபரே! ஆகையால் போர் வரும்போது அதற்குச் சித்தமாக இரும்.... இன்னும் இரண்டு நாட்களில் அமாவாசை வருகிறது. ஆகவே உமக்குப் பதினேழு நாட்கள் இருக்கின்றன. அதற்குள் ஆற்றைக் கட்க்கவும் எதிரியைச் சந்திக்கவும் ஏற்பாடுகள் செய்யும்" என்றும் உத்தரவிட்டான்.

க்ஷத்ரபன் நீண்ட நேரம் சிந்தனை வசப்பட்டுச் சாகர்களின் தலைவன் முன்பே தலை குனிந்து நின்றான். கௌதமிபுத்ரன் தனது பிடியிலிருந்து தப்பிச் சென்றதையும், தப்பிச் செல்ல மகாக்ஷத்ரபன் அனுமதித்ததையும் அவனால் ஜீரணிக்க முடியவில்லை. போரில் தர்மா தர்மங்களைப் பார்ப்பது கெட்டிக்காரத்தனமல்லவென்று உண்மையாகவே நம்பினான் க்ஷத்ரபன். சிந்து நதி தீரத்தில் நடந்த போர்களில் தயை தாட்சண்யம் பார்க்காமல் ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்ற க்ஷத்ரபனுக்கு, மன்னிப்பு, கருணை முதலிய குணங்களைப் புரிந்து கொள்வது மிகவும் கஷ்டமாயிருந்தது. பல பயங்கரமான போர்களை நடத்தி சாம்ராஜ்யத்தை அமைத்த மகாக்ஷத்ரபனுன நாகபாணன் குணம் பெரும் மாறுதலுக்கு உட்பட்டுவிட்டதை நினைத்து உள்ளூர பொருமிக் கொண்டு நின்ற க்ஷத்ரபனை நோக்கிய நாகபாணன், "க்ஷத்ரபரே! நான் சிறிது உறங்குகிறேன். நீர் போய்ப் படைகளை நிலப் பாதுகாப்புக்கும் கடல் பாதுகாப்புக்கும் வகுத்து அமைத்து நிறுத்தும். மீண்டும் நாளைக் காலையில் பேசுவோம்" என்று கூறிக் கண்களை மூடினான். க்ஷத்ரபன் அதற்குமேல் அங்கு நிற்கவில்லை. திடீரென்று அவன் மனத்தில் ஒரு யோசனை பளிச்சிடவே அதை நிறைவேற்றத் தீர்மானம் செய்து கொண்டு வெளியே சென்றான்.

அவன் வெளியே சென்றதும் சாக இன மருத்துவர் இரு பணிப் பெண்களுடன் உள்ளே நுழைந்து நாகபாணன் காயங்களைப் பரிசோதித்தார். "ஏற்கனவே காயங்களுக்கு மருத்துவம் நடந்திருக்கிறது. வெறும் களிம்பு தானே கேட்டார்கள் என்று நினைத்தேன். கோட்டையில் இன்னொரு மருத்துவர் இருக்கிறாரா?" என்று வியப்புடன் வினவினார் நாகபாணனை நோக்கி.


"இங்கு உங்களுக்குப் போட்டி யாரும் கிடையாது. மருத்துவம் பார்த்தவர் எதிர்க் கரையிலிருந்து வந்தார்" என்றான் நாகபாணன் இதழ்களில் இளநகை கூட்டி.

"இங்கு நானிருக்க அங்கிருந்து மருத்துவரை வரவழைப்பானேன்?" என்று கேட்ட மருத்துவரின் முகத்தில் வருத்தம் தெரிந்தது.

"நான் வரவழைக்கவில்லை. அவராகத்தான் வந்தார்" என்றான் நாகபாணன்.



சாண்டில்யன்



சித்தரஞ்சனி

''நீங்கள் காயமுற்றிருப்பது அவருக்கு எப்படித் தெரியும்?'' மருத்துவர் விசாரித்தார்.

''அவர்தான் என்னைத் தூக்கி வந்தார்.''

''உங்களைத் தூக்குவதானால் நல்ல பலசாலியாயிருக்க வேண்டும்.

''நல்ல பலசாலிதான்.''

''வீரனாகவும் இருக்க வேண்டும்.''

''வீரன்தான்.

''வீரமும் மருத்துவமும் எப்படிச் சேர முடியும்?'' என்ற மருத்துவர் ''சரி எப்படியிருந்தாலென்ன? உங்களைப் பிழைக்க வைத்துவிட்டான்'' என்றும் சொன்னார். அவர் குரலில் வருத்தம் ஒலித்தது.

''கவலைப்பட வேண்டாம். வெகு சீக்கிரம் உங்கள் மருத்துவத்துக்கு நிரம்ப வேலை இருக்கும்'' என்ற நாகபாணன் ''பதினேழு நாட்கள் பொறுத்திருங்கள்'' என்று கூறினான்.

மருத்துவருக்கு ஏதும் புரியாததால் குழப்பமடைந்தார். ''பதினேழு நாட்களில் என்ன விசித்திரம் ஏற்பட்டுவிடும்?'' என்று கேட்டார் குழப்பத்துடன்.

''போர் நடக்கும். கையிழந்தவர், காலிழந்தவர், எலும்பு முறிந்தவர் இப்படிப் பலவித

மான பேர்கள் தங்களுக்குக் கிடைப்பார்கள். காயமுற்றவர் தொகையும் கணிசமாயிருக்கும். போதும் போதுமென்னும் வரையில் நீங்கள் மருத்துவம் செய்யலாம். குற்றுயிரும் குலைஉயிருமாகப் பலர் கிடைப்பார்கள்" என்றான் நாகபாணன்.

அதைக் கேட்ட மருத்துவர் முகத்தில் சந்துஷ்டி நிலவியது. "நன்று நன்று" என்று மருத்துவர் கொக்கரித்து "அனைவரையும் நான் கவனித்துக் கொள்கிறேன். அப்புறம் நீங்கள் கவலைப்பட அவசியமிருக்காது" என்று குதூகலித்தார்.

"மருத்துவரே......" என்று மெள்ள அழைத்தான் நாகபாணன்.

"பிரபு!"

"நமது வீரர்கள்....."

"என்னிடம் வந்த பிறகு யாரும் கவலைப்பட அவசியமில்லை."

"கைகால் முறிந்தவர்களை என்ன செய்வீர்?"

"கைகால் போனவர்கள் இருந்தாலென்ன, போனாலென்ன? இருப்பதால் அவர்களுக்கும் கஷ்டம் நமக்கும் தொல்லை" என்று எரிச்சலுடன் பேசினார் மருத்துவர்.

நாகபாணன் உள்ளூர நகைத்துக் கொண்டான். "இதற்கு முன்பு போர் முனைகளில் இருந்திருக்கிறீர்களா?" என்று வினவினான்.

"அங்கு எனக்கென்ன வேலை?" என்று மருத்துவர் வினவினார்.

"வேறெங்கு வேலை?"

"போர்முனையிலிருந்து தப்பி வந்தவர்களை நான் கவனித்துக் கொள்வேன்."

"அப்படியா!"

"ஆம். பெரும் காயமுற்று வந்தால் இரும்பைப் பழுக்கக் காய்ச்சிக் காயத்தில் சொருகுவேன்."

இதைக் கேட்ட நாகபாணனே அச்சமுற்று, "ஐயோ!" என்று குரலெழுப்பினான்.

"குருதியை நிறுத்த காயத்திலுள்ள ரத்தக் குழாய்களைத் தீய்த்துவிட வேண்டும். அதற்கு வழி நான் சொன்னதுதான். ரண சிகிச்சையின் முதல் படியே இதுதான்" என்று மருத்துவர் விளக்கினார்.

"மருத்துவரே ஒரு சந்தேகம்" என்றான் நாகபாணன்.

"கேளுங்கள் பிரபு" என்றார் மருத்துவர்.

"மருத்துவரே.....!"

"உம்?"

"போரில் இறப்பது நல்லதா, ரண சிகிச்சையில் பிழைப்பது நல்லதா?"

மருத்துவர் நாகபாணன் கட்டிலின் முகப்பில் உட்கார்ந்தார். "பிரபு! எனது சொந்தக் கருத்தைச் சொல்லட்டுமா?" என்று மெதுவான குரலில் ரகசியம் பேசுபவர்போல் கேட்டார்.

நாகபாணன் கண்கள் நகைத்தன. "சொல்லுங்கள் மருத்துவரே" என்று உதடுகள் பேசின.

மருத்துவர் நாகபாணனை நோக்கிக் குனிந்து "பிரபு! ரண சிகிச்சையில் பிழைப்

அருள்வாக்கு

மூன்றாவதாக அர்த்தார்த்தி. 'அர்த்தார்த்தி' என்றால் 'பொருளை இச்சிக்கிறவன்' என்று அர்த்தம். 'அர்த்தம்' என்றால் பொருள்; அதாவது பணம். 'அர்த்தி' என்றால் அதை வேண்டுகிறவன்.

முதலில் துன்புற்றவனைச் சொன்னாரே, அதிலேயே பொருள் இல்லாமல் கஷ்டப்படுகிறவனும் அடக்கம்தான். அதனால் இங்கே பிரித்துச் சொல்லியிருக்கிற அர்த்தார்த்தி என்பவன் வறுமையால் கஷ்டப்படுகிறவன் அல்ல, வாழ்க்கை நடத்த முடியாமல் இவன் ச்ரமப்படவில்லை. ஆனாலும் இது போதாது. இன்னும் நிறைய ஸௌபிக்ஷம் வேண்டும் என்று பகவானை ப்ரார்த்தனை பண்ணுகிறான். நம்மில் பலபேர் இப்படித்தான் இருக்கிறோம். காலக்ஷேபம் நடக்க நமக்கு ச்ரமமில்லைதான். இருந்தாலும் இன்னும் நிறைய ஸௌகர்யம், வீடு வேண்டும், கார் வேண்டும் என்று ஆசை இருக்கத்தான் செய்கிறது. ஸப் கலெக்டர் கலெக்டராக ப்ரமோஷன் கிடைக்க வேண்டும் என்று ப்ரார்த்தனை பண்ணுகிறார். கலெக்டர் மாகாணம் பூராவுக்கும் ஏதாவது ஓர் அதிகாரியாக வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறார். 'அர்த்தம்' என்றதில் பணம் மட்டுமில்லாமல் பதவி, கௌரவம், புகழ் எல்லாவற்றையுமே சேர்த்துக் கொள்ளலாம்.



நாலாவதாக ஞானியைப் பற்றி அடுத்து வரும் இதழில் பார்க்கலாம்.

—ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.



புனேயில் காங்கிரஸ் பவன் கட்டிடத்தில் கட்சி ஊழியர் கூட்டத்தில் உரை நிகழ்த்திய தகவல், ஒலிபரப்பு அமைச்சர் காட்டில் விட்டுச் சென்றிருந்த அவருடைய செருப்புகள் திருடு போய்விட்டதால் வெறுங்காலுடன் தான் நடந்து சென்றார். அன்று மாலை மருதியில் நடந்த ஒரு விழாவில் கலந்து கொண்ட அமைச்சர் காட்டில் தன் புத்தம் புதுச் செருப்புகளைப் பத்திரமாக வைக்க இடம் தேடினார். அதைக் கண்ட அம்மருதியின் காவலாளி, 'இது காங்கிரஸ் கட்சிக் கூட்டமல்ல, மருதி. நீங்கள் எங்கு வேண்டுமானாலும் விட்டுச் செல்லலாம்!' என்றாராம்.

ஆதாரம்: டைம்ஸ் ஆப் இந்தியா

தகவல்: கோபஞ்சு.

பதைவிட போரில் இறந்துவிடுவதே மேல். நானயிருந்தால் அந்த காய்ச்சின இரும்புக்கு பலியாவதைவிட தற்கொலை செய்து கொள்வேன். இதையெல்லாம் உத்தேசித்துதான் நமது பெரியவர்கள் வீர சொர்க்கமுடைய, அதாவது போரில் மடிந்துவிட, உபதேசம் செய்திருக்கிறார்கள்'' என்று மருத்துவ இம்சையையும், வீர தத்துவத்தையும் இணைத்து விளக்கம் கொடுத்தார்.

நாகபாண்ணன் அத்துடன் உரையாடலை முடித்து, ''மருத்துவரே! ஏது எப்படியிருந்தாலும் காயமடைந்த வீரர்களுக்கு மருத்துவம் பார்ப்பது நமது கடமை. அதற்கு வேண்டிய இட வசதி மருந்து வசதி சகலத்தையும் செய்து கொள்ளுங்கள்'' என்று உத்தரவிட்டான்.

மகாக்ஷத்ரபனுக்குத் தலைவணங்கி வெளியே சென்ற மருத்துவர் போர் என்றால், சண்டையில் பிராணன் போகாதவர்களெல்லாம் தனது பிராணனை வாங்குவார்களென்பதை அறிந்திருந்ததால் அதற்காக ஏற்பாடுகளைப் பெரிய அளவில் செய்யத் தமது மருத்துவத்தைக் கோட்டையின் பெரிய மாளிகையொன்றில் வைத்துக் கொள்ள முடிவு செய்தார். அதைப் பற்றி க்ஷத்ரபரைச் சந்தித்துப் பேசவும் செய்தார். மகாக்ஷத்ரபர் சொன்னதைப் பற்றி விளக்கி ''நமது தரப்பில்காயப்படுபவர்கணிசமாக இருக்குமோ?'' என்று வினவினார்.

''யார் சொன்னது அப்படி?'' என்று சீறினான் க்ஷத்ரபன்.

''யாரும் சொல்லவில்லை. சிகிச்சைக்கு மருந்து சித்தம் செய்ய வேண்டுமே என்பதற்காகக் கேட்டேன்'' என்றார்.

''அதிகமாகக் காயமுடைந்தவர் இருக்க மாட்டார்கள்'' என்றான் க்ஷத்ரபன்.

''ஏன்? போய்விடுபவர் அதிகமாக இருக்குமோ?'' என்று வினவினார் மருத்துவர்.

''அதைப் பற்றி உமக்கென்ன கவலை!'' என்று சீறினான் க்ஷத்ரபன்.

''போகிறவர்களைப் பற்றி யாருக்குத்தான் கவலை? இருந்தால்தான் தொல்லை'' என்று அலுத்துக் கொண்ட மருத்துவர் ''எதற்கும் மருந்துகளையும் மருத்துவமனையையும் நான் சித்தப்படுத்துகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

அவர் சென்றதை வெறுப்புடன் பார்த்த க்ஷத்ரபன் ஆற்றங்கரையை நோக்கி நடந்தான். அங்கிருந்த படகொன்றை எடுத்துக் கொண்டு எதிர்க் கரைக்குச் சென்று கரையை அடைந்ததும் முந்திய இரவில் வந்து கடற்கரையை அடைத்த மலைப் பகுதியில் பாசறை அமைத்திருந்த படைகளை நோக்கிச் சென்றான். அங்கு படைகள் தங்கியிருந்த இடத்தில் படைகளைக் காணோம். பாசறை இருந்த இடமும் சூன்யமாயிருந்தது. அங்கு நின்ற வண்ணமே சுற்றுமுற்றும் நோக்கினான் க்ஷத்ரபன். எங்கும் யாரும் தென்படவில்லை. சிறிது நேரத்திற்கெல்லாம் எட்ட இருந்த மலைச் சரிவில் இரு புரவிகள் வேகமாக வந்து மரங்களின் மறைவில் நின்றன. அதிலிருந்து குதித்த இருவர் யாரென்று தெரியாததால் மெள்ள அவர்கள் இருந்த மறைவிடத்தை நோக்கிச் சென்றான். ஒரு புதரின் மறுபுறத்திலிருந்து இருவர் பேசும் குரல் கேட்டது. ''ஆக்கப் பொறுத்தவர் ஆறப் பொறுக்கக் கூடாதா?'' என்று ஒலித்தது சித்ரஞ்சனியின் குரல்.

''இன்னும் பதினேழு நாட்கள் இருக்கின்றன. அத்தனை நாள் எப்படிப் பொறுக்க முடியும்?'' என்று ஒலித்தது சாதவாகனன் குரல்.

அவர்களுக்குத்தானிருப்பதை அறிவுறுத்த ஓர் அடி எடுத்த வைத்த க்ஷத்ரபன் சட்டென்று நின்றுவிட்டான். அதே சமயத்தில் மரக்கலங்களை இயக்கி வந்த யவனன் கடல் மணலில் நடந்து வந்து கொண்டிருந்தான். என்னதான் சாதவாகனனிடம் தனக்குப் பகையிருந்தாலும் தனது வளர்ப்பு மகளும் ஆபத்திலிருக்கிறாள் என்ற நினைப்பால் சட்டென்று இன்னொரு மறைவுக்குச் சென்றான் க்ஷத்ரபன். தன்னை எதிர்நோக்கி இருக்கும் ஆபத்தை உணராமல் பாழுங் கிணற்றை நோக்கி வரும் யானை போல் நடந்து மதோன்மத்தமாக நடந்து வந்தான் யவனன்.

(தொடரும்)

ஒரு பிரச்னை படம் பாடல்

படங்கள்: நாட்டின் முக்கியமான பிரச்னைகளை எடுத்துக்காட்ட "தேசிய விழிப்புணர்ச்சி" என்ற தலைப்பில் உருவான விளம்பரங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. இவை அசோக் ஜெயின் பரிசு பெற்றவை. (நன்றி: டைம்ஸ் ஆஃப் இந்தியா) இந்தப் புகைப்படங்கள் கூறும் செய்தியைக் கவிதையாக வடித்துத் தருமாறு நமது கவிஞர்கள் சிலரைக் கேட்டோம்.

மக்கள் தொகைப் பெருக்கம்

காலிலே கோணிகட்டிக்
கைவண்டி இழுப்பவளின்
கனவுலக ராச்சியமே
கண்மணியே கண்வளராய்!

மாற்றுசேலை இருந்திருந்தால்
மரக்கிளையில் தூளிவரும்
மகராசி என்னசெய்வாள்
மரத்தடியில் போட்டுவிட்டாள்!

மயிலாகப் பிறந்திருந்தால்
மன்னர்வீட்டுப் போர்வைவரும்
மகளாகப் பிறந்துவிட்டாய்
மரத்தடியில் தூங்குகிறாய்!

உன்பசிக்குப் பாலூட்டி
உறங்கச்சொல்லித் தாலாட்டி
தன்பசிக்கு இரைதேடித்
தாய்ப்பறவை போனதுவோ?

ஆனைகட்டிப் போரடித்து
ஆருக்கென்ன லாபமடா
அன்றாடம் தாய்ப்பறவை
அரைவயிறுக்கு அலையுதடா!

— கெ. அமரசிகாமணி



வரதட்சணைக் கொடுமை — மருமகள் எரிப்பு

இன்னும் இருக்கிறோம்
சிறைகளுக்குள் வலையின்னும்
சிலந்திகளாய்....

கானலாற்றங்கரையில்
மீனுக்குத் தவமிருக்கும்
கொக்குகளாய்....

சுமப்பது
பூக்களையா
சிலுவைகளையா
என்று
புலப்படாதவர்களாய்.



சுற்றுச் சூழல் நச்சுமயமாதல்

ஐம்பூதங்கள் ஆக்கிய உலகில்
அவதரித் துள்ளதோ ஆறாம் பூதம்:

சாதி மத வேறுபாடுகள்

ஒருவர்
கையில் ஒருவர் கை — எனினும்



பூப்பெய்திய போது
'மஞ்சள் தண்ணி' தெளிக்கச் சொன்னது
சாஸ்திரம்.
'கரித் தண்ணி' தெளித்திருந்தால்
எதார்த்தம்.

போதும்!
போதும்!

மணமானவள் மட்டுமென்ன
மகாராணியானளா?

இச்சை தணித்த
ஏழாம் நாளில்
எச்சில் இலையாய்
நனைந்து கிழிந்தாள்

இளமை எங்களுக்கு
வெறுப்பில் அழிகிறது
அவர்களுக்கோ
நெருப்பில் அழிகிறது

முடிவுக்கு வந்துவிட்டோம்!
எங்களுக்கு
மீசை இல்லையென்று
எந்நாளும் நாங்கள்
ஏங்கியதில்லை.

கல்யாணமும்
எங்களுக்கு
முளைக்காத மீசையென்ற
முடிவுக்கு வந்துவிட்டால்:....

— கவிஞர் வைரமுத்து


ஆண்டவன் படைத்ததோ ஐந்து பூதங்கள்.
அடுத்ததைப் படைத்ததோ அறிவிலி மனிதன்!
விளக்கினுக்காக வீட்டையே கொளுத்தும்
இலக்கணம் தொடர்ந்தால் ஏற்படும் வருத்தம்.

ஆறாம் பூதம் தாவி அணைத்தது:
அலைகடல் உள்ளும் உயிரினம் செத்தது:
ஊற்றுப் புனலும் ஊனம் கண்டது
காற்றே இயற்கையைக் களங்கம் செய்தது!

ஆலைப் புகைகள் அணுக்கதிர் வீச்சுகள்
சாலை வாகனங்கள் துப்பிய நச்சுகள்:
கள்ளத் தனமாய்க் கண்களைப் பறிக்கும்
கரும்புகை விடங்கள்; காலனின் தடங்கள்!

இயற்கை அன்னையின் இந்தக் கோலம்
இனியும் வளர்ந்தால் அது அலங்கோலம்;
மனிதா நீபெறும் மூச்சுக் காற்றே
பிணிதரும் என்றபின் ஏனினும் உறக்கம்?

— வ. வே. சுப்பிரமணியன்



எனவே
கைகுலுக்குவோம்....
கனவுகள்,
கடலின் அலைகள் தாண்டிவந்து
கரையில்
கண்கள் விழிக்கட்டும்.

கைகுலுக்குவோம்....
இதயச் சங்கமத்தில் — புதிய
உதயங்கள்
உத்தரவாதமாகட்டும்.

இனி
இந்த
விரல்களே வேய்ங்குழல்களாகட்டும்
வேர்வை நாளங்களில்
'வெல்க மானுடம்' என்று
பிரபஞ்சமே வந்து
இசையாகம் செய்யட்டும்
கைகுலுக்குவோம்.

— தமிழன்பன்.



படிப்பறிவு இல்லாத பரிதாபம்



இருவர் நெஞ்சம் தழுவும் இனிமை
இடைவழி மனிதர் அறிவானேன்?

இதயச் சுமையை ஏந்திய கடிதம்
இப்படி ஊர்வலம் வருவானேன்?

பருவம் பார்த்து விளையாப் பயிராய்ப்
பார்வை இருந்தும் குருடானுள்!

பலரும் அறியும் ரகசிய மாகிப்
பாவம் இவளோர் சருகானுள்!

இந்தக் காலம் இப்படி முடியும்
என்பது ஒன்றும் விதியில்லை!

ஏட்டை எடுத்துப் பாடம் பயில
எப்போதும்தான் வாய்ப் புண்டு!

சொந்தக் காலில் நிற்கும் போதே
சுயமரி யாதைப் பொருள்புரியும்!

சோகம் வேண்டாம் தாயே என்றே
சொல்லிக் கொஞ்சம் தேற்றுங்கள்!


பள்ளிச் சந்தை நெரிசல் காட்டில்
பாதை பார்த்து நடைபோடப்

பாவம் இவளின் காலக் கொடுமை
பலபல தடைகள் போட்டதுண்டு!

துள்ளிப் போகும் மான்கள் போலே
துறுதுறுப் பெல்லாம் சுமைதூக்கிக்

கல்விக் கூடப் பெருமை சேர்க்கும்
காலம் நமது தலைமுறையே!

— சுப்ர. பாலன்.



லஞ்ச ஊழல் அதிகரிப்பு

அருளாசை உள்ளான் எவரும் ஆண்டவன்! நீயோ மனையில்
இருளாக்கிப் படர்ந்துவிட்டாய்! இதயத்தும் நிறைந்து விட்டாய்
வெருளாத மனிதர் இல்லை. வேண்டிய பெறுதற்காக
பொருளாலே அர்ச்சித்துன்னைப் பூசிக்க மறுப்பதில்லை.

பள்ளியில் சேருதற்கும் பணியிடம் கூடுதற்கும்
உள்ளவோர் பதவியில்மேல் உயர்வினைச் சேருதற்கும்
கள்ளத்தை, கொலையை மற்றக் கயமையை மறைப்பதற்கும்
உள்ளத்தைத் திறந்துன்னை உதவிக்குச் சேர்த்து விட்டார்.

வாழுகிறார் சிலபேர் உன்னால் மாளிகை மீதில், ஆனால்
தாழுகிறார் எண்பேர் கூடச் சந்ததம் உன்னைத்தானே
சூழுகிறார் விளக்கில் வீழ்த் துடித்திடும் விட்டில் போல!
ஆழுகிறார் இருளில் அறிவுக் கண்ணை கையால் மூடி.

கொடுப்பவர் பெறுவோர் செய்யும் கூட்டுறவமைப்பினாலே
தடுப்பவர் இல்லாமல் நீ தழைக்கிறாய்! பயந்து நின்முன்
படித்தவர் பாமரர்கள் பணிகிறார்! அதனாலே நீ
துடிக்கிறாய் நின்றன் ஆட்சி தழைக்கவே வழி செய்கின்றாய்!

விளக்கிலே தோன்றும் பூத வியப்பென விளைந்த நின்னை
வளர்த்தவர்? சுயநலத்தால் வளர்ந்தவரெல்லாம். ஆனால்
உளத்திலே இளைஞர் கூட்டம் உறுதியின் தீயை மூட்டிக்
களத்திலே புகுந்தால் நின்றன் காலமும் முடிந்து போகும்!

— நா. சீ. வரதராஜன்

a ஃபார் ஆப்பிள்

m ஃபார் மர்டர்

7

பிரபு தன் அகலமான நெற்றியைத் தேய்த்துக் கொண்டு, சந்திரபோஸை ஏறிட்டுப் பார்க்காமல் வேறு எங்கோ பார்த்துக் கொண்டு மெல்லிய குரலில் கேட்டார்.

''யாமினியோட பாடியை எப்படி டிஸ்போஸ் பண்ணப் போறே சந்திரபோஸ்?''

''ரொம்பவும் ஈஸி ஸார்..... மொதல் ஸ்டெப்....யாமினியோட முகம்,அடையாளம் தெரியாம இருக்கிறதுக்காக.... ஆசிட்டை ஊத்திச் சிதைக்கப் போறேன்.... ரெண்டாவது ஸ்டெப் பாடியை ஒரு கோணிப் பையில போட்டு நீட்டா தெச்சு.... புட் டின்ஸ் டெலிவரி பண்ற நம்ம கம்பெனி வேன்ல ஏத்தி, ஏதாவது ரிமோட் ஏரியா பக்கமா கொண்டு போய்ப் புதைச்சுடப் போறேன்.''

''வேன்லே நீ மட்டுமா போறே....?''

''ஸ்டெனோ கீதாவையும் கூட்டிக்கிட்டுப் போறேன் ஸார்.''

''போ. பட் காரியம் கச்சிதமா முடிச்சிருக்கணும். போலீஸுக்கு மோப்ப சக்தி அதிகம். ஒரு மில்லி மீட்டர் அளவுக்கு விஷயம் கசிந்தாலும் போதும், வீ வில் பி இன் ட்ரபிள்....''

''தெரியும் ஸார்.''

''இன்னும் கொஞ்சம் இருட்டட்டும். கம்பெனி வேன் ஷெட்லதானே இருக்கு!''

''ஆமா ஸார்.''

''சரி வா, யாமினியைப் போய்ப் பார்த்துவிட்டு வருவோம். வேணுமின்னு நீ போய் நைட்ரிக் ஆசிட் ஜாரைக் கொண்டாந்துடு. நானும் கீதாவும் மெடிக்கல் செல்லில் இருக்கோம்.''

''எஸ் ஸார்.''

சந்திரபோஸ் ஷூ சப்திக்க வெளியே போனான். பிரபு கொஞ்சம் தள்ளி நின்றிருந்த கீதாவை நோக்கிப் போய், அவள் தோள் மேல் சிநேகபாவத்தோடு கையைப் போட்டுக் கொண்டார்.

''யாமினியைப் பார்க்கப் போகலாமா கீதா?''

''எ..... எனக்குப் பயமாயிருக்கு ஸார்.''

''டெட்பாடியைப் பார்த்து என்ன பயம்? உயிரோட இருக்கிற மனுஷங்களைப் பார்த்துத்தான் பயப்படணும்.... ம். வா. போகலாம்.''

கதவைத் தாண்டி வெளியே வந்து, மெடிகல் செல்லை நோக்கிப் போனார்கள். காற்றில் குளிர் உட்கார்ந்து இருவருடைய உடம்புகளையும் ஊடுருவிக் கொண்டு போயிற்று.

''அந்த யாமினியோட ஃபாதர் திருஞானத்தை நினைச்சா, பாவமாயிருக்கு ஸார். செத்துப் போன மகளுக்காக அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் வாங்கிக்கிட்டுப் போயிருக்கார் மனுஷன்....''

''பாவந்தான் என்ன பண்றது கீதா. அவளை உயிரோட வெளியே விட்டிருந்தா, நாம எல்லோரும் போலீஸ் கையிலே மாட்டியிருப்போம். இந்த இண்டர்வியூவுக்குச் சாகிறதுக்காகவே வந்திருக்கா. புவர் கேர்ள்.''

மெடிகல் செல்லுக்குள் நுழைந்தார்கள். உடம்பின் மேலிருந்த துணியை விலக்க வெளிப்பட்ட, அழகான யாமினியின் முகத்தில் உதட்டோரத்தில் வழிந்திருந்த ரத்தக் கோடு, செங்கல் நிறத்தில் காய்ந்து போயிருந்தது.

''ஹாரிபிள் ஸார்.''

''இந்த அழகான முகத்தைச் சிதைத்து வெளியே கொண்டு போய் டிஸ்போஸ் பண்றதுதான் ரிஸ்க். நீயும் சந்திரபோஸும் முடிச்சுடுவீங்கள்லே?''

''முடிச்சுடுவோம் ஸார்.''

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே, கதவுப் பக்கமாய் அந்த சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தார்கள்.

சந்திரபோஸ் உள்ளே வந்து கொண்டிருந்தான்.

கையில் கூம்பு வடிவ அமில ஜாடி. ஜாடியின் மேல் **Highly concentrated Nitric Acid** என்ற எழுத்துக்கள் என்க்ரேவ் செய்யப்பட்டிருந்தது.

''ஸார்..... வெளியே மழை அதிகமாயிடும் போல் தெரியுது..... சீக்கிரமா கிளம்பணும். மழை வலுத்துட்டா பாடியை டிஸ்போஸ் பண்றது சிரமமாயிடும்....'' சந்திரபோஸ் சொல்ல,பிரபு புன்னகைத்தார். ''உன்னோட நினைப்பு தப்பு சந்திரபோஸ்.... மழை வலுத்துட்டா பாடியை டிஸ்போஸ் பண்றது ரொம்ப

வும் ஈஸி. ஆள் நடமாட்டம் எங்கேயும் சுத்தமா இருக்காது. நினைச்ச பக்கம் வேனைக் கொண்டுகிட்டுப் போகலாம். குழி வெட்டறதும் சுலபம். ஆமா.... பாடியை எந்த ஏரியா பக்கமா கொண்டுகிட்டுப் போகப் போறே."

"மகாபலிபுரம் பக்கம்....."

"தட்ஸ் குட்.....! ஏற்பாடு பண்ணு."

"மொதல்ல இந்த ஆசிட்டை உபயோகப் படுத்தி பாடியோட முகத்தைப் பொசுக்கணும் ஸார்.... நீங்க வெளியே போயிடுங்க. ஆசிட் தோலைப் பொசுக்கும்போது வர்ற ஸ்மெல் ரொம்பவும் மோசமா இருக்கும்." சொல்லிக் கொண்டே பாண்ட் பாக்கெட்டில் இருந்த கர்ச்சீப்பை எடுத்து, கண்களுக்குக் கீழே மூக்கைச் சேர்த்துக் கட்டிக்கொண்டான்.

பிரபுவும் கீதாவும் வெளியே வந்தார்கள்.

சுத்தமாய்ப் பத்து நிமிஷம்.

யாமினியின் முகம் ஒரு கரிக்கட்டை மாதிரி தீய்ந்து போயிருக்க, சந்திரபோஸ் ஒரு குரூர புன்னகையோடு எழுந்தான்.

அமில ஜாடியை ஓர் ஓரமாய்த் தள்ளி வைத்துவிட்டு, யாமினியை அந்த நீளமான கோணிப் பைக்குள் திணித்தான். முழுவதுமாய்த் திணித்து, கோணிப் பையின் வாயைக்

கயிற்றால் இறுகக் கட்டிவிட்டு நிமிர்ந்தான். கதவுக்கு வெளியே தலையை நீட்டி, எட்டிப் பார்த்தான். வராந்தாவின் ஓர் ஓரமாய் பிரபுவும், கீதாவும் பேசிக் கொண்டிருந்தார்கள். சந்திரபோஸின் தலையைப் பார்த்ததும், "என்னாச்சு....?" என்கிற மாதிரி கையைக் காட்டி அபிநயித்தார்கள்.

சந்திரபோஸ் தன் வலது கையின் கட்டை விரலை உயர்த்திக் காட்டி, "எல்லாமே முடிஞ்சது" என்கிற பாணியில் சிரித்தான்.

பிரபுவும் கீதாவும் அவனை நோக்கி வந்தார்கள். பிரபு கேட்டார்.

"ப்ராப்ளம் ஒண்ணும் இல்லையே, சந்திரபோஸ்?"

"இல்லை சார்."

"அப்போ ஷெட்டிலிருந்து வேனைக் கொண்டு வந்து அதை ஏத்து.... கூடவே கொஞ்சம் மில்க் டின் கேனையும் ஏத்திக்கோ. சென்ட்ரியிலே யாரும் சந்தேகப்படக் கூடாது."



"சரி ஸார்."

தூரத்தில் தெரிந்த ஷெட்டிலிருந்து கம்பெனி வேனைக் கொண்டு வருவதற்காக, பெய்கிற மழையையும் பொருட்படுத்தாமல், போர்டிகோ படிகளில் இறங்கிப் போனான் சந்திரபோஸ்.

மழை ஒரு சின்ன இரைச்சலோடு பெய்து கொண்டிருந்தது.

டாக்ஸி டிரைவர் கன்னியப்பன் தாம்பரம் வரைக்கும் போய் ஒரு கல்யாணப் பார்ட்டியை இறக்கிவிட்டு சிடியை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தான். நேரம் ஆறரையைத் தாண்டியிருந்தது.

"பாழாப் போன மழை....." என்று வாய் விட்டுத் திட்டிக் கொண்டே ஸ்டீயரிங்கை வளைத்த கன்னியப்பனுக்கு வயது முப்பது. உடம்பில் முப்பது வயதுக்குரிய திடகாத்திரம் தவறியிருந்தது. போன மாதம் சென்ட்ரல் ஸ்டேஷனின் எடை மெஷினில் இரண்டு பத்து பைசாக்களைப் போட்டுவிட்டு, தட்டோ தட்டென்று தட்டியதில் 48.5 Kg என்ற உண்மையைச் சொல்லிக் கொண்டு அட்டை வெளிப்பட, கன்னியப்பன் கவலைப் பட்டு, மனைவியிடம் சொல்லி உடம்பைத் தேற்ற வேண்டுமென்று தீர்மானம் செய்திருந்தான். அவனுடைய சம்பாத்யத்தில் அது சாத்தியமில்லை என்று மனைவி சொன்னதும் தீர்மானத்தைவாபஸ்வாங்கிக்கொண்டான்.

கன்னியப்பனுக்கு இருந்த ஒரே ஆஸ்தி அந்த அம்பாசிடர்டாக்ஸிதான். அவனுடைய அப்பா மாரியப்பன் உருப்படியாய் விட்டுப் போன சொத்து அது ஒன்றுதான். அந்த 70 மாடல் அம்பாசிடர் தினமும் நிகர லாபமாய் முப்பது ரூபாய் சம்பாதித்துக் கொடுத்தது. இன்றைக்கு செமத்தியாய் தாம்பரம் கிராக்கி ஒண்ணு மாட்ட, சட்டைப் பையில் நூறு ரூபாய் நோட்டொன்று இடம் பெற்றிருந்தது.

'என்ன செய்யலாம்?' சந்தோஷமாய் யோசித்தான் கன்னியப்பன்.

'வீட்டில் ஏழு மாத கர்ப்பிணியாய் உட்கார்ந்திருக்கும் மரகதாவுக்கு ஸ்வீட்டும், புகாரி பிரியாணியும் வாங்கிக் கொண்டு போகலாமா?'

'சே! வேண்டாம். வாங்கிக் கொண்டு போனால் திட்டுவாள். 'ரெண்டு துட்டு ஜாஸ்தியா சம்பாதிச்சாலே, உன்னை ஒரு நிலையில நிறுத்த முடியாதய்யா.... நா உன்னிய ஸ்வீட்டும் பிரியாணியும் கேட்டேனா' என்பாள். வேண்டாம். இந்த நூறு ரூபா நோட்டைக் கொண்டு போய் அவ கையிலே திணிச்சு.... அவ கண்ணு ரெண்டும் ஆச்சரியமா விரியறதை நான் பார்க்கணும்.

மழையில் டாக்ஸியை விரட்டினான் கன்னியப்பன்.

எதிரே வந்த லாரிகள் மழையில் ஏராளமாய் நனைந்து கொண்டு, பிரகாசமான ஹெட்லைட்டுக்களோடு அவனுடைய டாக்ஸியைத் தாண்டிப் போயின.

பல்லாவரத்தை நெருங்கிக் கொண்டிருந்தான் கன்னியப்பன்.

எக்ஸ்டென்ஷனுக்கு ஒரு கிலோ மீட்டர் இருக்கும்போது, சாலையோரமாய்த் தெரிந்த அந்த போர்டு, டாக்ஸியின் வேகத்தைக் குறைத்தது.

'இதுதான் சாராயக்கடை. ஐம்பதடி உள்ளே வந்தால் சொர்க்கம் பார்க்கலாம்'

அம்புக்குறியிட்ட போர்டு ஒன்று பளிச்சென்று கன்னியப்பன் கண்களில் பட, மனத்துக்குள் ஓர் உற்சாகப் புயல் எழுந்தது. 'அந்த மழைக்கும் குளிருக்கும் ஒரு இருநூறு மில்லி உள்ளே போனால் எப்படியிருக்கும்?', இந்த நினைப்பு வந்ததுமே.... மனத்துக்குள் இருந்த மனைவி மரகதா மறைந்து போனாள்.

டாக்ஸியை ரோட்டோரமாய் ஒதுக்கி நிறுத்தினான் கன்னியப்பன். வலது கை பக்கமாய் மண் ரோடு ஒன்று மழையில் நனைந்த

ஒருவர்: அந்த ஆளுக்கு லாட்டரியிலே ஒருகோடி விழுந்த உடனே ரொம்பப் பணத்திமிரு வந்துடுத்து...

மற்றவர்: ஏன்...?

முதலாமவர்: பட்சணம்பண்ணவிடியோ ஆயில் கிடைக்குமான்னு கேட்கிறாரே...!"

— வி. சாரதி டேச்சு.





தர்மசாலா அருகில் உள்ள தார்கேதி என்னும் ஊரில் புதுமையான ரக்ஷா பந்தன் விழா நடைபெற்றது. அவ்வூர் மக்கள் 1200 மரங்களுக்கு 'ராக்கி' கட்டி ரக்ஷா பந்தன் நடத்தினர். மரங்களைக் காப்பதற்காகக் காட்டிலாக்கா இந்த ரக்ஷா பந்தனை ஏற்பாடு செய்திருந்தது!

—தீதாபஞ்சு.


Blackbelt
Blackbelt
BRIEFS & BANIANS
For strong ones
who wish to remain in style and comfort.
BRIEFS
Sultan
BANIANS
BOXER
TRUNKS
FIANCEE
COMFORT BRIEFS
SAHEB
BANIANS
MARSHALL
BRIEFS
Quality Products of Aristocrat Hosiery Pvt. Ltd.
Post Box No. 3359, Bombay-400 003. Tel: 321861 • 330251



''செக்கொஸ்லோவேகியா சென்றிருந்தேன். ஊரைச் சுற்றிப் பார்க்கலாம் என்று சென்றபோது வீதிகளில் ஈ காக்கை இல்லே. ''இன்றைக்கு அலுவலகங்களுக்கு லீவா?'' என்று ஒருவரைக் கேட்டேன். அதற்கு அவர், ''இல்லே'' என்ருர். ''பின்னர் ஏன் இப்படி வெறிச் சோடிக் கிடக்கிறது?'' என்று கேட்ட போது, ''அலுவலக நேரம் தொடங்கி முடியும்வரைவீதியில்ஒருவரையும்காண முடியாது'' என்று பதில் வந்தது!''

ஜெகத்ரட்சகன் எம். பி. வாணெலியில் கூறக் கேட்டவர்:

— வி. ந. ஸ்ரீதரன்.

படி சொதசொதப்பாய்த் தெரிய, கன்னியப்பன் டாக்ஸியினின்றும் சாவியைக் கழற்றிக் கொண்டு கீழே இறங்கினுன்.

மண் ரோட்டுக்குக் கொஞ்சம் உள்ளே, மரங்களுக்கு மத்தியில் சோகையான ட்யூப் லைட் வெளிச்சத்தோடு தெரிந்த சாராயக் கடையை நோக்கிப் போனுன் கன்னியப்பன்.

கிட் புட்ஸ் கம்பெனியின் காம்பௌண்ட் கேட்டைத் தாண்டியது வேன்.

நான்கைந்து பால் டின் கேன்களுக்கு மத்தியில் யாமினியின் உடம்பு ஒரு கோணிப் பைக்குள் சிக்கியிருக்க, முன் சீட்டில் நகத்தைக் கடித்தபடி கீதாவும், ஸ்டியரிங்கைப் பிடித்தபடி சந்திரபோஸும் தெரிந்தார்கள்.

செண்ட்ரி ஆள் சந்திரபோஸுக்கு ஒரு விசுவாச சல்யூட்டை அவசரமாய்ப் போட அதை லட்சியம் பண்ணுமல் போனுன் சந்திரபோஸ்.

கீதா அவனைப் பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தபடி கேட்டாள்.

''எந்தப் பக்கமா போறோம், சந்திரபோஸ்?''

''மொதல்ல பெட்ரோல் போடணும் கீதா. அப்புறந்தான் போற இடத்தைப் பத்தி டிசைட் பண்ணனும். மகாபலிபுரம் பக்கமா போயிடலாம்னு பார்க்கிறேன். நீ என்ன நினைக்கிறே?''

''தட்ஸ் கரெக்ட். அந்தப் பக்கமாத்தான் யாரும் இருக்க மாட்டாங்க.''

வேன் மெயின் ரோட்டுக்கு வந்து, வேகமாய் ரோட்டைத் தேய்த்தது. மழை சிலுசிலுவென்று தூறிக் கொண்டிருக்க, வைப்பர் முன் கண்ணுடி நீரை வழித்து வழித்துப் போட்டது.

''கீதா.''

''ம்.''

''இந்தக் காரியத்துக்குத் துணிச்சல்தான் முக்கியம். வழியிலே எங்கேயாவது போலீஸ் நிறுத்தி எதையாவது கேட்டா நெர்வஸ் ஆயிடக் கூடாது.''

''மா...ட்...டே...ன்...''

''பார்த்தியா சொல்றப்பவே உன்னுடை குரல் நடுங்குது.''

''பயமில்லே. குளிர்.''

புன்னகைத்துக் கொண்டே தலையை உயர்த்திய, கீதாவின் பார்வையில், வேனுக்கு முன்னுல் போய்க் கொண்டிருந்த அந்த அம்பாஸிடர் டாக்ஸி பட்டது. ரத்தப் பொட்டுக்களாய்த் தெரிந்த டாக்ஸியின் சிவப்பு விளக்குகளைப் பார்த்தவளுக்கு, வித்தியாசமான அந்த அசைவு தெரிந்தது.

கூப்பிட்டாள். ''சந்திரபோஸ்....''

''என்ன கீதா....?''

''அந்த டாக்ஸியைப் பார்த்தீங்களா?''

''பார்த்தேன்..... என்ன....?''

''டாக்ஸியோட பேக் போர்ஷனைப் பாருங்க. ஏதோ அசையற மாதிரி தெரியலே?'' சந்திரபோஸ் வேனின் ஹெட்லைட்டுக்களைப் பிரகாசமாக்கி, டாக்ஸியை உற்றுப் பார்த்தான். சொன்னுன். ''டிரைவர் டிக்கியைப் பூட்டலே. அதான் பள்ளத்துல ஏறி இறங்கும்போது, பூட்டாத டிக்கியோட கதவு ஆடுது.''

சந்திரபோஸ் சொல்லிக் கொண்டிருக்கும் போதே —

முன்னுல் போன டாக்ஸியின் வேகம் குறைந்து ரோட்டோரமாய் நின்றது. பின்னுல் வந்த சந்திரபோஸின் வேன் டாக்ஸியைத் தாண்டியது.

''சாராயக் கடை போர்டு..... அதான் நிறுத்திட்டான்....'' சந்திரபோஸ் சிரித்து ஆக்ஸிலேட்டரை மிதிக்க, கீதா அவசரக் குரலில் சொன்னுள்.

''சந்திரபோஸ்..... நம்ம வேனைத் திருப்புங்க....''

வேகத்தைக் குறைத்த சந்திரபோஸ், ''எதுக்கு?'' என்ருன்.

''திருப்புங்க சொல்றேன்.... யாமினியோட பாடியை டிஸ்போஸ் பண்ண ஒரு அருமையான வழி கிடைச்சிருக்கு....''

''நீ என்ன சொல்றே....?'' குழப்பமாய் அவளைப் பார்த்தான் சந்திரபோஸ். கீதா பரபரத்தாள். ''நான் அந்த டாக்ஸியைச் சொல்றேன் சந்திரபோஸ்.... யாமினியோட பாடியைத் தூக்கிகிட்டு நாம அங்கேயும் இங்கேயும் அலைய வேண்டாம். சாராயக் கடைக்குள்ள போயிருக்கிற டாக்ஸி டிரைவர் திரும்பவும் டாக்ஸிக்கு வர எப்படியும் பத்து நிமிஷமாகும். அந்தபத்துநிமிஷத்துக்குள்ளே நாம யாமினியை அந்த டிக்கிக்கு மாத்த முடியாதா என்ன?''

ஒரு விகார இளிப்போடு, ''குட்'' என்ருன் சந்திரபோஸ்.

வேனை டாக்ஸியை நோக்கித்திருப்பினுன்.

(தொடரும்)

சபரிமலை சென்றபோது...







மமதை அகன்றது!

ஐந்தாண்டுகளுக்கு முன்னர் நான் சில நண்பர்களுடன் சபரிமலை சென்றபோது நடந்த சம்பவம் இது: அழுதை ஏற்றத்தில் பாதிவரை ஏறியிருப்போம். வயதான தம்பதியர் மணிகண்டன் என்ற ஐந்து வயதுப் பையனுடன் மிகச் சிரமப்பட்டு மலை ஏறிக் கொண்டிருந்ததைப் பார்த்தோம். அவர்களுடைய இருமுடிகளை வாங்கிக்கொண்டு அவர்களுக்குப் பழங்களும் தண்ணீரும் கொடுத்து, சற்று ஓய்வு எடுத்துக் கொள்ளச் சொல்லிவிட்டு நாங்கள் எங்கள் பிரயாணத்தைத் தொடர்ந்தோம். இரவு ஏழு மணியளவில் கரிவளந்தோடு என்ற இடத்தை நெருங்கிய போது நான் 'பாவம், அந்த வயதான தம்பதியரும் மணிகண்டனும் என்ன ஆனார்களோ? நாம் சீக்கிரமே வந்து சேர்ந்துவிட்டோம்' என்று சொன்னதும்தான் தாமதம், எங்களுக்கு முன்னால் வேறுவழியாக அங்கு வந்து சேர்ந்திருந்த மணிகண்டன், 'தாத்தா, நமக்குப் பழம் தந்த மாமா இப்பத்தான் வருகிறார் பாருங்கள்' என்று சொன்னவாறு எங்கள் பக்கம் சுட்டிக்காட்டக் கண்டேன். என் மமதை அகன்றது.

— எஸ். காசிநாதன், கும்பகோணம்.

ஐயப்பன் அருளிய தயிர்!

மகர ஜோதி தரிசனத்தின்போது நாங்கள் பம்பையில் அன்னதானம் செய்வது வழக்



கம். ஒரு வருடம் நாங்கள் கொண்டு போன தயிர் எல்லாம் தீர்ந்து போய் அரிசி மட்டும் ஏராளமாக மீந்து போய்விட்டது. எங்கள் குருசாமியோ, 'அதைச் சாதமாக வடித்து விடுங்கள், ஐயப்பன் தயிர் கொடுத்து அருள் புரிவார்' என்று சொல்லிவிட்டார். நாங்கள் சாதத்தை வடித்து வைத்துக் கொண்டு இரவெல்லாம் செய்வதறியாது காத்திருந்தோம். விடியற்காலையில் முன்பின் தெரியாத ஒருவர் சில தயிர் டின்களைக் கொண்டு வந்து கொடுத்து, உபயோகித்துக் கொள்ளும்படி கூறிவிட்டுப்போய்விட்டார். அந்தத்தயிரைப் பயன்படுத்தித் தயிர் சாதம் கலந்து வினியோகித்தோம். இந்த நிகழ்ச்சி எங்களைப் புல்லரிக்கச் செய்துவிட்டது.

— பிரகாஷ் ராமனாதன், சென்னை — 28.


வியக்கத்தக்க நிகழ்ச்சி!


என் நண்பர் ஒருவர் மலை ஏறும் போது கால் தடுக்கி, கீழே விழுந்துவிட்டார். முழங்காலிலிருந்து பாதம்வரை நன்ருக வீங்கிப் போய்விட்டது. அவரால் ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. அவருடன் வந்தஒருவர்மட்டும்மேதுணையிருக்க,குழுவைச் சேர்ந்த மற்றவர்கள் தொடர்ந்து மேலே சென்றுவிட்டனர். இரண்டு நாட்களுக்குப் பிரயாணத்தைத் தொடர முடியாமல் தவித்தார் நண்பர். போவோர் வருவோர் எல்லாம் விபூதிப்பிரசாதம்கொடுத்துவிட்டுப்போனுர்கள். மூன்றும் நாள், ஒரு மருந்தும் இல்லாமலே, வியக்கத்தக்க வகையில் வீக்கம் வடிந்துவிட்டது. நண்பர் மகர ஜோதியைத் தரிசனம் செய்ய நடந்தே போய்விட்டார்.

— ஆர். வி. ரமணி, சென்னை—28.

எதிர்பாராத உதவி

என் தந்தை சபரிமலை செல்ல இரண்டாம் முறையாக மாலை போட்டுக் கொண்டிருந்தார். அப்போது எங்கள் குடும்பத்தில் நிலவிய வறுமை காரணமாக அவர் எப்படிப் பிரயாணச் செலவுகளைச் சமாளிக்கப் போகிருர் என்பது கேள்விக் குறியாகவே இருந்தது. அப்போது ஏதோ வேலையாக அவர் திருவண்ணுமலை தாலுகா அலுவலகம் செல்ல நேர்ந்தது. அங்கு ஒரு பெண் அலுவலர் தனக்கு ஆண் குழந்தை பிறக்க வேண்





டும்என்று ஐயப்பனிடம்வேண்டிக்கொண்டதாகவும் அது நிறைவேறியதாகவும் சொன்ஞள். தான் சிறுகச் சிறுகச் சேர்த்து வைத்திருந்த காணிக்கைத் தொகையை என் தந்தையிடம் கொடுத்து அவருடைய பிரயாணச் செலவுக்கு எடுத்துக் கொண்டது போக மீதியைச் சபரிமலையில் உண்டியலில் போட்டு விடும்படி கேட்டுக் கொண்டாள். எதிர்பாராமல் கிடைத்த இந்தத்தொகைஎன் தந்தைக்குப் பெருதவியாக இருந்தது.

— ஹேமா. அருண், பெங்களூர்.

'பகவானை நினை!'

என் தந்தை மலைக்குச் சென்றபோது அழுதை என்ற இடத்தில் அவருடைய மோதிரம் காணுமல் போய்விட்டது. பரபரப்புடன் அதைத் தேடிக் கொண்டிருக்கையில் ஒரு வயதானவர் வந்து, "ஏனப்பா, பகவானைக் காண வந்துவிட்டு மோதிரத்தையே நினைத்துக் கொண்டிருக்கிருயே! பகவானை நினை!" என்று கூறிச் சென்ருர். மறுநாள் காலையில் இந்த அனுபவத்தைத் தன்னுடன் வந்தவர்களிடம் விவரித்துக் கொண்டிருந்த போது என் தந்தையை வியப்படையச் செய்தது அருகே தரையில் மின்னிக் கொண்டிருந்த அவருடைய மோதிரம். அது கிடைத்த இடம்: கரிமலை.

— லலிதா பஞ்சநாதன்,
திருவனந்தபுரம்.

ஐயப்பன்தான் காத்தான்!

சபரிமலைக்குச் சுமார் நாற்பது பேருடன் பஸ்ஸில் சென்று கொண்டிருந்தேன். இரவு நேரம். மலைப் பாதையில் போக்குவரத்து எக்கச்சக்கமாக இருந்தது.ஓரிடத்தில்போக்குவரத்துத் தடைபட்டு வரிசையாக வண்டிகள் நின்று கொண்டிருந்தன. எங்கள் பஸ்ஸும் நின்றுவிட்டது. அப்போது எங்களுக்கு முன்ஞல் இருந்த பஸ் திடீரென்று சரிவில் வேகமாக இறங்கி எங்கள் பஸ் மீது மோத, எங்கள் பஸ்ஸும் பின்னுக்குத் தள்ளப்பட்டு நகர ஆரம்பிக்க, பிரயாணிகள் எல்லோரும் கலவரத்துடன் பிரார்த்திக்க ஆரம்பித்தோம். பஸ் கல்லில் அடிபட்டு ஓர் ஓரமாக நின்ற போது வெளியே பின்பக்கம் எட்டிப் பார்த்தால் கிடுகிடு பள்ளம்! பஸ்ஸின் முன் பக்கத்தில் ஐயப்பனின் படம்—கண்ணுடி உடைந்து போய்க் காட்சி அளித்தது. எங்களைக் காப்பாற்றித் தன் மீது பாரத்தை ஏற்றிக் கொண்ட ஐயப்பனை எண்ணி மெய்சிலிர்த்தோம்.

— வி. இரகுநாதன், சென்னை—80.

இரவெல்லாம் பாம்போடு....!

'பம்பா நதியை அடைந்த பக்தர் கோஷ்டி இரவு அங்கு தங்கிவிட்டுக்காலையில் மீண்டும் பிரயாணத்தைத் தொடரலாம் என்று தீர்மானித்தது. குருசாமி இருமுடியைக் கீழே இறக்கப் போனபோது திடீரென்று பாம்பு ஒன்றைக் கண்டு அலறினுர். டார்ச்சை அடித்துப் பார்த்தபோது பாம்பைக் காண

வில்லை. மறுநாள் காலை குருசாமி தன் பையை எடுத்தபோது அதற்கடியிலிருந்து ஆறடி நீளமுள்ள ஒரு பாம்பு சரசரவென்று வெளிப்பட்டு, புதர்களுக்குள் போய்மறைந்தது! இரவு முழுவதும் தலைமாட்டில் பையை வைத்துக் கொண்டு படுத்திருந்த குருசாமியை அந்த ஐயப்பன்தான் காப்பாற்றினன் என்பதில் சந்தேகமே இல்லை.

— வி. மீனாட்சி, சென்னை—80.

ஐயப்பன் சன்னதியில் அற்புதம்!

என் கணவர் சபரிமலைக்குச் சென்றபோது வயதான பெற்றோர் தம் 19 வயது மகனுடன் ஐயப்பன் சன்னதியில் கதறி அழுது கொண்டிருந்ததைப் பார்த்தார். கற்பூர ஆரத்தியின் போது விண்ணதிர சரணகோஷம் எழும்பியது. திடீரென்று அந்த வயதான பெற்றோர் மகிழ்ச்சி மிகுதியால் கூச்சலிட ஆரம்பித்தனர். காரணம்: அதுநாள்வரை பிறவி ஊமையாக இருந்ததங்கள் மகன் ''சரணம் ஐயப்பா!'' என்று முதல் முறையாக வாய்விட்டுக் கூவியிருந்தான்.

— ராஜலக்ஷ்மி மார்க்கபந்து,
சென்னை—28.

சிறுவன் உருவில் தெய்வம்!

சிகரெட் பிடிக்கும் பழக்கம் உள்ள என் நண்பன் ஒருவன், சபரிமலைக்குப் போக மாலை போட்டுக் கொண்ட பிறகும் அப்பழக்கத்தைவிட இயலாமல் தவித்துக்கொண்டிருந்தான். ஒருமுறை கடைத்தெருவில் கறுப்பு வேட்டியுடன் அவன் புகை பிடித்துக் கொண்டிருந்ததைப் பார்த்த சிறுவன் ஒருவன், ''சபரிமலைக்குப் போறவங்கல்லாம் சிகரெட் பிடிக்கலாமா?'' என்று கேட்டுவிட்டுப் போக, ஐயப்பனே அச்சிறுவன் உருவில் வந்து கேட்டதாகக் கருதி என் நண்பன் அப்பழக்கத்தை அறவே விட்டொழித்தான்.

— எஸ். சிவசங்கர், ஸ்ரீமுஷ்ணம்.

அயரச் செய்த வைராக்கியம்!

ஒருமுறை என் சபரியாத்திரையின்போது, இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட ஒரு வாலிபர் தவழ்ந்து வந்து பதினைந்தாவது படியில் தேங்காயை உடைக்கக் கண்டேன். அவர் மன வலிமையும் வைராக்கியமும் என்னை அசத்திவிட்டன. அவர் காலில் விழுந்து ஆசீர்வதிக்கும்படி கேட்டேன். அவரோ, 'சுவாமியே சரணம் ஐயப்பா' என்று அடக்கமாகக் கூறிவிட்டார்.

— பி. எம். குமரன், தேனி.

'பையப்போ! பையப்போ!'

தலையில் இருமுடியினைத் தாங்கி, என் நண்பனும் இன்னும் சில இளவட்டங்களும் அட்டகாசமாக 'ஐயப்போ! ஐயப்போ!' என்றுகோஷமிட்டவாறு மலையேறிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு முன்னால் சென்ற ஒரு வயதான கோஷ்டியினர் அவர்களைப் போலவே 'ஐயப்போ!' கோஷமிட்டுக் கொண்டிருந்தார்கள். இளைஞர்களின் வேகம் அதிகரித்து எல்லை மீறியதும் இந்த வயோதிகக்கோஷ்டி 'ஐயப்போ' கோஷத்தை 'பையப்போ! பையப்போ!' என்று மாற்றி உச்சரித்ததானது சமயோசிதமான செயலாகும்.

— புதூர் குமரன், ஒரத்தநாடு.

போலீஸ் சாமியின் பொறுமை!

பதினெட்டாம் படிகளில் ஏறும்போது, பக்தர் ஒருவர், படிகளில் பாதுகாப்பு உதவிக்காக நின்ற போலீஸ் சாமியின் காலில் தவறுதலாகத் தேங்காயை எறிந்ததால், அவர் கால் கட்டை விரலில் அடிபட்டு ரத்தம் வந்ததையும்பொருட்படுத்தாது, கோபப்படாமல், வேதனையைத் தாங்கிக் கொண்டு, பக்தர்கள் மேலே செல்ல உதவி செய்ததைப் பார்த்து உள்ளம் சிலிர்த்தது.

— என். நாச்சிமுத்து, மதுரை—19.

என்ன ஆச்சரியம்!

'என் இருமுடியை ஒரு சிறுவன் கையில் கொடுத்துவிட்டு, சபரிமலை உண்டியலில் காணிக்கை செலுத்துவதற்காகப் போனேன். காணிக்கையைச் செலுத்திவிட்டுத் திரும்புவதற்குள் பையனைக் காணவில்லை! இருமுடி இல்லாமல் எப்படி ஊர் திரும்புவது! மிகவும் நொந்து போனேன். இரண்டு நாட்கள் கழித்து, ஊர் திரும்பும் வழியில் ஓரிடத்தில் வேதனையுடன் உட்கார்ந்திருந்தபோது எதிரே ஒரு பக்தர் குழு பாடிக் கொண்டே வந்தது. அந்தக் குழுவைச் சேர்ந்த ஒருவர் என்னிடம் வந்து ''என்ன தம்பி! இப்படி இருமுடியை ஓரிடத்தில் போட்டுவிட்டு, நீ ஓரிடத்தில் இருக்கிறாயே! அறிவிருக்கிறதா?'' என்று கேட்டுவிட்டு என் கையில் ஓர் இருமுடி பையைத் திணித்துவிட்டுப் போய்விட்டார். அதைப் பிரித்துப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! அது தொலைந்து போன என் இருமுடிப் பையேதான்!

— கா. அ. சுப்புரத்தினம்,
ஆத்தூர்.

ப்ளோப்ளாஸ்ட் வழங்கும் வி. ஐ. பி. ஸூட்கேஸைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறுபவர்:

**வி. இரகுநாதன்,
1092, 41வது தெரு, T.N.H.B.
கொரட்டூர், சென்னை—80.**





சலவை தோறும் பொலிவு...சலவைக்கு சலவை...பவர் பேக்டு ஸர்ஃப் புத்தாடைபோல் வெண்மை பொலிய வெளுக்கிறது!


வெளுக்கும் ஒவ்வொரு சட்டைக்கும், ஒவ்வோர் ஆடைக்கும் வெண்மை மிடுக்கு, புதுமைக் கருக்கு-அளிக்குது பவர் பேக்டு ஸர்ஃப். அன்றன்றே வாங்கி அணிவது போல் என்றென்றும்...கோடித் துணிபோல் கோலப் புதுமை.

இதுவரை இல்லாத ஏற்றமான சக்தி செறிந்து வருகுது பவர் பேக்டு ஸர்ஃப்... பேராற்றல் மிகுந்தது. பேணிக் காப்பதில் உயர்ந்தது. ஆழ ஊடுருவித் துப்புரவாக்கும் சக்திபடைத்தது! அடைக்திராத அமோகமான நுரைவளம் மிகுந்தது.

விடாத அழுக்கையும் விரட்டியடிக்கும், வெண்மையினை வாழ்விக்கும், காலமெல்லாம் துணிப் புதுமை காக்கும்.

வெண்ணிறமோ, வர்ணமோ...விசேஷத் துணிகள், அன்றாடத் துணிகள் எல்லாமே ஒளிமிளிரும் ஒப்பற்ற வெள்ளைவெளேர்... ஸர்ஃப் சலவையிலே...நித்தமும் நிலைபெறுமே புத்தாடைக் களையுடனே.

சலவைப் பவுடர்கள் பலநூறு இருக்கலாம், ஆனால் உங்கள் குடும்பத் துணிகளுக்கு நம்பிக்கையானது ஸர்ஃப் ஒன்றுதான்... ஸர்ஃப் அன்றி வேறில்லை.



ஸர்ஃப் சலவை: ஒப்பற்ற வெள்ளைவெளேர், சகல துணிகளுக்கும் புதுமை ஜோர்

வழக்கம்போல் அலுவலக வேலை முடிந்து ஏழு மணி சுமாருக்கு வீடு திரும்பிய போது வீடு பூட்டிக்கிடந்தது.

பக்கத்து வீட்டுச் சிறுவன் ராஜப்பா ஓடி வந்தான். "இந்தாங்க மாமா, சாவி. அக்கா சினிமாவுக்குப் போயிருக்காங்க...." என்றான்.

பூட்டைத் திறந்து கொண்டு உள்ளே வந்தேன். அறை முழுதும் இருளின் ஆக்கிரமிப்பு. தட்டித் தடுமாறி மின்விளக்கின் ஸ்விட்சைப் போட்டேன்.

உடம்பைப்போல் மனத்திலும் புழுக்கத்தின் பாதிப்பு குப்பென்று வியாபித்தது. உணர்வுகளின் கசப்பான ருசியில் வேதனையின் அனுபவித்தலோடு உடைகளை மாற்றிக் கொண்டேன்.

அடுக்களைக்குள் பிரவேசித்தேன். வத்சலா ஒரு பிளாஸ்கில் எனக்காகக் காப்பி கலந்து ஊற்றி வைத்திருந்தாள். பருகிவிட்டு வெளியே வந்தவன் வானொலியின் பித்தானைத் தட்டியபோது சரோஜ் நாராயண சுவாமியின் செய்தி அறிக்கை கம்பீரமான குரலில் ஏற்ற இறக்கங்களோடு ஒலிக்கத் தொடங்கியது.

செய்தி முடிந்ததும் வானொலியை மூடி விட்டுக் கட்டிலில் சென்று விழுந்தேன்.

மனத்தில் மனைவியைப் பற்றிய மதிப்பீடுகள்.

வத்சலா என் மனைவியாக ஊர் அறிய மேளதாளத்தோடு அங்கீகாரம் பெற்று இரண்டு ஆண்டுகள் ஆகின்றன.

திருமணமாகி அவள் எங்களுடன் புறப்பட்டபோது என் மாமியார் சொன்னது:

"மாப்பிளே! வத்சலா எங்களுக்கு ஒரே பொண்ணு. செல்லமாகவே வளர்த்திட்டோம். அவ ஏதாவது உங்க மனசு புண்படும்படியா நடந்துண்டா நீங்க பெரிய மனசு பண்ணி மன்னிச்சிடுங்கோ...."

கண்கலங்க அவர் சொன்னது இப்போதும் என் நினைவில் பசுமையாக நிற்கிறது.

இயல்பாகவே எனக்குச் சாத்வீக குணம் தான். அவளைக் கடிந்து கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் எனக்கு இல்லை. இருந்தாலும், அவளுடைய நடவடிக்கைகள் என்னுள் நெருடலைத் தோற்றுவிக்கும் சமயங்களில் இதமாக எடுத்துச் சொல்வேன்.

அவள் தன்வசம் ஒரு பதிலை ரெடிமேடாகத் தயாரித்து வைத்திருந்தாள்.

இந்தப் பூட்டுவிவகாரமும் அப்படித்தான்.

வாரத்தில் நான்கைந்து நாட்கள் நான் அலுவலகத்திலிருந்து திரும்புகையில், வீடு பூட்டிக் கிடக்கும்.

"அக்கா சினிமாவுக்குப் போயிருக்காங்க."

"அக்கா பாகீரதி மாமி வீட்டுக்குப் போயிருக்காங்க....

பக்கத்து வீட்டு ராஜப்பா செய்தியுடனும், கையில் சாவியுடனும் எனக்காகக் காத்திருப்பான்.

ஒருநாள் வத்சலாவிடம் சொன்னேன்: "சினிமாவுக்குப் போவதென்றால் பகற்காட்சிக்குப் போய்வரலாமே.....!"

"எப்படி முடியும்? காலையில் அஞ்சு மணிக்கு எழுந்திருக்கிறேன். சாப்பாடு, டிபன், பாத்திரங்களைத் தேய்க்கிறது, துணிகளைத் துவைக்கிறதுன்னு ஒவ்வொரு காரியமா பண்ணி முடிக்கிறப்ப மணி பன்னிரண்டைத் தாண்டிடறது. அப்புறம் சித்த நேரம் படுத்துக் கண் அசந்தாத்தான் உடம்பு நிதானத்துக்கு வர்றது. என்ன பண்ணுவேன் சொல்லுங்கோ....

முகத்தில் அலாதியான பாவத்தோடு அவள் அபிநயம் பிடித்துக் காட்டியபடி பேசுகையில் அவளைக் கடிந்து கொள்ளவோ, மனம் புண்படும்படி எதிர் வழக்காடவோ எனக்கு விருப்பமிருப்பதில்லை.

அந்த என் மனப்போக்கு அவளுக்குப் பூரண சுதந்திரத்தை அளிக்கப் போதுமானதாக இருந்ததில் வியப்பில்லை.

அதுவும் சினிமா என்றால் அது ரிலீசாகும் நாளன்றே பார்த்துவிட வேண்டும் என்ற துடிப்பு. மற்றவர் படம் பார்த்துவிட்டு வந்து கதையையோ, கதாநாயகன் நாயகியைக் கொடுமைப்படுத்தும் காட்சியையோ, ஹிட்டாகப் போகும் பாடல்களைப் பற்றியோ ஒரு வார்த்தை காதுபடச் சொல்லும் முன்பே முந்திக் கொள்ளத் துடிக்கும் ஓர் அவசரமும் ஆவேசமும் அவளுக்கு உண்டு.

சினிமா போக, அரட்டையிலும் ஆழ்ந்த ஈடுபாடு.

இந்தக் காரணங்களால் வாசற் கதவில் வாரத்தில் நான்கைந்து நாட்கள் பூட்டு தொங்கும்.

ஒவ்வொருவர் வீட்டில் மனைவி தலை நிறையப் பூவோடும், முகம் நிறையப் பொலி



மனைவியைப் பற்றிய மதிப்பீடுகள்!

விஜேதானந்த்



பக்கத்து வீட்டுச் சிறுவன் ராஜப்பா ஓடி வந்தான். ''இந்தாங்க மாமா, சாவி. அக்கா சினிமாவுக்குப் போயிருக்காங்க....'' என்றான்.

வோடும் கணவனின் வருகைக்காகக் காத்திருக்கும் காட்சியைக் கண்டவனுக்கு,கதவில் இப்படி அடிக்கடி காணும் பூட்டு சலிப்பைத் தந்தாலும் பொறுத்துக் கொண்டேன்.

ஆரம்பத்தில் அது ஒரு நிர்ப்பந்தம். இப்போது அதுவே இயல்பு.

ஒருநாள்.

அலுவலக மானேஜர் என்னை அழைத்தார். ''மதுரை பார்ட்டி பில் பேமண்ட்ல தகராறு பண்றான். இன்னைக்கே புறப்பட்டுப் போய் அவனைக் கன்வின்ஸ் பண்ணி பில் செட்டிலாகிற வழியைப் பாரு....'' என்றார்.

அன்று இரவு வண்டிக்கே புறப்பட்டேன்.

இரயிலில் உட்கார்ந்திருக்கையில் மனத்தில் திடுமென்று ஒரு ஃப்ளாஷ்.

வத்சலாவின் பிறந்தகம் மதுரைதான்.

போகிறவன் அப்படியே மாமனாரையும், மாமியாரையும் பார்த்துவிட்டு வரலாம்.

வத்சலாவின் அந்த விசேஷ குணத்தைப் பற்றி மாமியாரிடம் கோடிட்டுக் காட்டினால் என்ன என்று தோன்றியது. அதன் மூலம் ஏதாவது அனுகூலமான திருப்பம் ஏற்படலாம் அல்லவா?

மதுரை பார்ட்டியைப் பார்த்து அவனை ஒருவழியாகச் சமாதானப்படுத்தி, காசோலையையும் கையோடு வாங்கிக் கொண்டு, அவனுடைய அனுசரித்தலுக்காகப் பெரிய எழுத்தில் நன்றி சொல்லிவிட்டுக் கிளம்புகையில், மணி ஐந்தை நெருங்கிக் கொண்டிருந்தது.

பக்கத்தில்தான் என் மாமனார் பணிபுரியும் வங்கியின் கிளையும்.

நான் போய்ச் சேர்ந்த சமயத்தில் அவர் வீட்டுக்குக் கிளம்ப ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

என்னைப் பார்த்ததும், ''வாங்க, மாப்பிளே!'' என்று வாய்நிறைய வரவேற்றார். வந்த விஷயத்தைச் சொன்னேன்.


''ராத்திரி நம்ம வீட்டுலேயே சாப்பாட்டை வச்சுக்கலாம்....'' என்றார்;

இருவரும் புறப்பட்டோம்.

பேருந்தைப் பிடித்து வீடு போய்ச் சேர்ந்த பொழுது வீடு பூட்டிக் கிடந்தது.

மாமனாரைப் பார்த்துவிட்டுப் பக்கத்து வீட்டிலிருந்து ஒரு சிறுமி ஓடிவந்தாள்.

''மாமா! இந்தாங்கோ சாவி. மாமி சினிமாவுக்குப் போயிருக்கா....'' என்று சொல்லி விட்டு வந்த வேகத்திலேயே ஓடிப் போனாள்!


மகாராஜா!
நம் விரோதிகளை
விரட்டியடித்து விட்டோம்.
என்ன பிரயோசனம்?
கொசுக்களை விரட்டத்
திறமை இல்லையே!
கொசுக்களை எதிர்த்துப் போராடி வெற்றிபெற... டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்.
என்னப்பா?
விண்வெளிப் பயண
த்துக்குக் கிளம்பிட்டே?
அதொண்ணுமில்லேப்பா!
கொசுக்கள் கிட்டேந்து
தப்பிக்கத்தான் இந்த வேஷம்.
கொசுக்களை விண்வெளிக்கு அனுப்ப... டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்.
டார்டாய்ஸ் கொசு
வர்த்திச் சுருள்.
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
போர்ட், பம்பாய்-400 023. போன்: 273831

இசை கேட்க வந்தோம்; இரைச்சல் கேட்டு நொந்தோம்!

மூதல்தரப் பாடகரும் பக்கவாத்தியங்களும் இருந்தாலும்கூட ஒரு கச்சேரி சிறப்பாக அமைய ஒலிபெருக்கி ஒழுங்காக இருக்க வேண்டும். மைக் சரியாக உபயோகிக்கப்படாமலிருப்பதால் நாதத்திற்குப் பதிலாக சப்த ஜாலங்களைக் கேட்க வேண்டியிருக்கிறது. ஒலிபெருக்கிகளை இஷ்டம்போல் பல கோணங்களில் வைத்து, சப்தத்தையும் அதிகப்படுத்தி விட்டால், அதிலிருந்து வரும் இரைச்சலை சங்கீதம் என்று கேட்டு, மனத் திருப்தியுடன் திரும்புவது, ரஸிகர்களுக்கு முடியாத காரியம். இது பற்றி, சபா நிர்வாகிகள், வித்வான்கள், மைக் பொருத்துபவர் மூவரிடமும் பல சந்தர்ப்பங்களில் பேசியும் எல்லோரும் மற்றவர்கள் பெயரிலேயே குற்றம் என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். இஷ்டத்துக்கு மைக்கைப் பயன்படுத்திக் கேட்பவர்களின் காதைச் செவிடாக்குவதுடன், சங்கீதத்தை நல்ல முறையில் கேட்க முடியாமல் செய்து விடுகின்றனர். மேடையில் தான் பாடுவது தனக்குச் சரியாகக் கேட்காததால் சப்தத்தை மிகைப் படுத்துவதாகச் சில வித்வான்களின் கூற்று. அதனால் ரஸிகர்கள் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்களென்று அவர்களுக்கு அக்கறையிருப்பதாகத் தெரியவில்லை. கச்சேரி தொடங்குவதற்கு முன்பே மைக்கை மிகைப் படுத்தி வைக்க வேண்டுமென்று அவர்கள் சொல்வதாக மைக் பொருத்துபவர் சொல்கிறார். பெரிய வித்வான்களும் இந்த மைக் மாயையில் மூழ்கிவிட்டதால் ரஸிகர்கள் தெய்வீக இசையைக் கேட்பதற்குப் பதில் இரைச்சலையே கேட்க நேரிடுகிறது.

— பாகீரதி நரஸிம்ஹன், சென்னை—90.

பஸ்ஸில் கொள்ளை!

எங்கள் ஊரிலிருந்து 12 கி.மீ. தூரத்தில் உள்ளது பாண்டிச்சேரி மாநிலம். செல்லும் வழியில் 6 கி.மீ. தூரத்தில் உள்ளது ஜிப்மர் மருத்துவக் கல்லூரி. நாங்கள் எங்கள் ஊரிலிருந்து ஜிப்மர் செல்ல வேண்டுமானாலும் பாண்டிச்சேரிக்கு, அதாவது 12 கி.மீ.க்குத் தேவையான கட்டணம் கொடுக்க வேண்டும். இந்தக் கொள்ளை பலகாலமாக நடந்து வருகிறது. திண்டிவனம் மார்க்கத்திலிருந்து தினம் ஜிப்மர் வரும் நூற்றுக்கணக்கான மக்கள் இவ்வாறு தண்டம் அழுகிறார்கள். இதைக் கேட்க எந்த அரசும் இல்லையா?

— வி. செல்வராஜ், ஆரோவில்.

துன்பமில்லாத முறை!

ஆரோன்பிரபு, வாயில்லா ஜீவன்களை வங்கிகள் வதைக்கும் கொடுமை பற்றி எழுதியிருந்ததைப் படித்தேன். நான் கால்நடை மருத்துவர். வங்கிகள் கால்நடைக்குக் கடன் வழங்கும்போது அவற்றை இன்ஷ்யூர் செய்ய வேண்டும் என்று நிபந்தனை விதிக்கின்றன. இன்சூர் செய்ததற்கு அடையாளமாகக் கால்நடைகளின் காதுகளில் உலோக வளையம் (Metal tag) கால்நடை மருத்துவர்களால் பொருத்தப்பட்டுச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இது மிக எளிதான, கால்நடைகளுக்குத் துன்பமில்லாத அடையாளமிடும் முறை. இந்த உலோக வளையத்தின் ஒரு பக்கத்தில் இன்சூரன்ஸ் கம்பெனியின் பெயரும், எண்ணும் இருக்கும். மற்றொரு பக்கத்தில் கடன் வழங்கிய வங்கியின் பெயரும், எண்ணும் இருக்கும். இரும்பைக் காய்ச்சி கால்நடைகளின் தொடையில் எண் போடுவது மிகப் பழைமையான, அருவருக்கத்தக்க முறை. இப்பழக்கம் இன்னும் நீடிப்பது வேதனையாகவும், ஆச்சரியமாகவும் இருக்கிறது. இதற்கு அவசியமே இல்லை.

— ஏ.ஆர். ஜகத் நாராயணன், கள்ளக்குறிச்சி.

சுலபமான வழி உண்டு!

26.1.1986 இதழில் இரா. சம்பத்குமார் கடிதத்தினைப் பார்த்தேன். எங்கள் வங்கியைப் பொறுத்தமட்டில் கணக்குத் துவங்கும் போதே, எங்கள் பாங்கில் பணம் போடுகிறவருடைய வாரிசு யார் என்பதை நிர்ணயிக்கக் கோரி அதற்குரிய விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து வாங்கிக் கொள்கிறோம். வாரிசுதாரரைப் பின்னால் மாற்றுவதற்கும் உரிமை அளிக்கிறோம். இது போன்ற வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டால் வாரிசுதாரர், தாம்தான் வாரிசு என்பதை நிரூபிக்கச் சான்றிதழ்கள் பெறவோ அதற்காக 100, 150 என்று ரூபாய் செலவழிக்கவோ அவசியம் நேராது.

— அ. இராமன், பாங்க் ஆஃப் தமிழ்நாடு, கரண்டை.



இன்று மிக அதிகமான பாராட்டுக்கும் அதேசமயத்தில் தாக்குதல் விமரிசனத்துக்கும் உள்ளாகியிருக்கும் நடனக் கலைஞர் பத்மா சுப்பிரமணியம். தாக்குதல்களைப் பார்க்கும்போது அவரது ரசிகர்கள் உள்ளத்தில் வியப்பும்சிரிப்புமாக எழும் கேள்வி: 'பத்மா சுப்பிரமணியத்துக்கா பரதம் ஆடத் தெரியாது!'

தஞ்சாவூரில், தென்னகக் கலாசார மையத் துவக்க விழாவில் கலந்து கொண்டு விட்டு, அப்போதுதான் திரும்பியிருந்தார் டாக்டர் பத்மா சுப்பிரமணியம்.

ஞாயிற்றுக் கிழமை. மாலை நான்கு மணி.

அவரது சமீபத்திய நூல் பற்றியும், அவரது எண்ணங்கள், நடனம் பற்றியும் நமது நிருபருடன் உரையாடினார்......

நிருபர்: 'ஆரம்ப நிலையிலிருந்தே படிப்படியாக மாணவர்கள் கற்பதற்கென்று இச் சிறிய நூலைச் சமர்ப்பிக்கிறேன்' என்று முன்னுரையில் சொல்லியிருக்கிறீர்களே — நூலைப் படித்து நடனம் கற்றுக் கொள்ள முடியுமா?

பத்மா: புத்தகத்தை மட்டும் படித்து நடனம் பயில முடியும் என்று நான் இதை எழுதவில்லை. நடனம் பயின்று வருகிற மாணவிகளுக்கும், இளம் நடன ஆசிரியர்களுக்கும் இது உபயோகமாயிருக்கும் என்று நினைத்துத்தான் எழுதினேன். ஏனென்றால் இது ஸிலபஸ்—சார்புள்ள புத்தகம். இசையும் சரி, நடனமும் சரி, புத்தகத்திலிருந்து கற்றுக் கொள்ள முடியாது. குருவை அடைந்து செய்முறையோடு கற்றுக் கொண்டால்தான் சரியாக வரும். செய்முறைக்கு இதை ஒரு 'கைடு' மாதிரி அமைத்திருக்கிறேன். இதன் பின்னணி என்னவென்றால், வொகேஷனல் கோர்ஸ்+2 லெவலுக்கு பாடத் திட்டத்தில் ஒரு நூல் வேண்டியிருந்தது. எனவே அரசாங்கத்தில் ஒரு புத்தகம் தயாரிக்கச் சொன்னார்கள். அதனால் இதை கைடு மாதிரி தயாரித்தேன். விரிவாகவும், பெரிதாகவும் அமைந்து விட்டது. வானதி திருநாவுக்கரசு நல்ல புத்தகப் பதிப்பாளர். அவரிடம் இதைக் கொடுத்தேன். அரசாங்கத்துக்கு வேறு ஒரு சிறிய புத்தகம் எழுதிக் கொடுத்திருக்கிறேன்.

நிரு: புத்தகத்தில் சில வரைபடங்கள் ஆபாசமாக இருக்கின்றனவே. இவை தேவைதானா? கச்சையணிந்தும் திறந்த மார்பாகக் காண்பித்திருப்பது , வேண்டுமென்றே கிளர்ச்சியூட்டும் வகையில் இருக்கிறது. நடன நூலுக்கு இது அவசியம்தானா?

ப: சிற்ப சாஸ்திரத்தை அடிப்படையாக வைத்து எழுதிய சித்திரங்களை இதில் சேர்த்தோம். இக்காலப் பெண்ணின் படமாக வரைந்து காட்டினால் நன்றாக இருக்காது. அதனால் ஸ்தபதியைக் கொண்டு சிற்ப வடிவில் சித்திரம் வரையச் சொன்னேன். சிற்பமாக எண்ணி இதைப் பார்த்தால் நிச்சயம் உங்களுக்கு ஆபாசமாகத் தெரியாது. ஸ்தானம், நிலைகள் எல்லாம் சிற்ப சாஸ்திரம், தெரிந்த ஸ்தபதி வரைந்தவை. அவரிடம் ஒப்படைத்த பிறகு, அவர் வேலையில் நான் குறுக்கிட வேண்டாம் என்று விட்டுவிட்டேன்..... நீங்கள் சொல்லுவதுபோல் சிலர் நினைக்கலாம் என்று அச்சாகி வந்தபோது எனக்கே தோன்றியது. அடுத்த பதிப்பில் சிலவற்றை நீக்கிவிடலாம் அல்லது சிற்ப சித்திரம்தான் என்றாலும் இலேசாகத் திருத்திவிடலாம் என்று நானே தீர்மானித்திருக்கிறேன். (புத்தகத்தை மறுபடி புரட்டிவிட்டு) எனக்குத் தப்பாக ஒன்றுமே தெரியவில்லை. லைன் டிராயிங்காக இல்லாமல், மனிதர்களை நிறுத்தி எழுதியிருந்தால் நிச்சயமாக ஆபாசமாக இருந்திருக்கும்.

நிரு: உங்கள் நடனப் பள்ளியில் பயின்று, மேடையேறிப் புகழ் பெற்ற பெண்கள் யாராவது இருக்கிறார்களா?

ப: இருக்கிறார்களே! உமா ஸ்ரீராம், ஓரளவுக்கு நல்ல பெயர் பெற்றவள். இப்போது டொரன்டோவில் இருக்கும் ஜெயா சந்திரசேகர். அப்புறம் ஹேமா கிருஷ்ணமூர்த்தி, லக்ஷ்மி ரவிசந்தர், சரசுவதி ரமணன்,

பத்மா சுப்பிரமணியத்துக்கா

ஜயஸ்ரீ ராஜகோபாலன், சுஜாதா கேசவன். இன்னும் சில மாணவிகள் ரொம்ப அழகாகச் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் ஏழைக் குழந்தைகள். செலவழித்து விளம்பரப் படுத்தி, நிகழ்ச்சிகள் தேடிக் கொண்டு, போக முடியாதவர்கள். நம் நாட்டில் எப்போது தகுதி அடிப்படையில் மேடை ஏறி முன்னுக்கு வர முடியுமோ, அப்போது சோபித்துப் பிரபலமடைவார்கள். 1942ல் என் தகப்பனார் ஆரம்பித்து வைத்தார் நிருத்யோதயாவை. இங்கே நிறையக் குழந்தைகள் இலவசமாகக் கற்றுக் கொள்கிறார்கள்.

நான் கிரான்ட், நன்கொடை எதையும் எதிர்பார்க்கவில்லை; தரத்தில் மட்டுமே எனக்கு நம்பிக்கை உண்டு. எண்ணிக்கையில் அல்ல..... 'ஒரு தபால்காரரின் பெண் இங்கே நடனம் சொல்லிக் கொண்டு, ஆசிரியையாக இருக்கிறாள். கொத்தனாரோட பெண் ஒருத்தி ரெட் ஹில்ஸிலேருந்து வந்து கற்றுக் கொள்கிறாள். ஆனால் பஸ் சார்ஜுக்குக்கூட வசதியில்லை அவளுக்கு. அந்தக் குழந்தைக்கு பஸ் சார்ஜைக் கொடுத்து நடனமும் சொல்லிக் கொடுக்கிறோம். ஏழைக் குழந்தைகளோடு பெரிய மனிதர்கள் வீட்டுக் குழந்தைகளும் சரி சமமாகப் பழகுகிறார்கள். எல்லோரும் ஒன்றுதான் இங்கே. நான் நிருத்யோதயாவை ஒரு பள்ளியாக நினைக்கவில்லை. இது ஓர் இயக்கம். இது ஒரே குடும்பம். இங்கே எந்தவித்தியாசமும்பார்க்கமுடியாது.

திரு: நீங்கள் நடனப் பள்ளி நடத்தினாலும், நீங்களே சொல்லிக்கொடுப்பதில்லை; வகுப்புகள் எடுப்பதில்லை. ஒரு நடன ஆசிரியர் நேரிடையாகச் சொல்லித் தரா விட்டால், அப்புறம் உங்கள் பாணி எப்படி நிலைத்து நிற்கும்? மாணவிகளுக்குத்தான் என்ன அக்கறை இருக்கும்?



ப: பிரின்சிபல், புரொபசர், லெக்சரர், ட்யூட்டர் இப்படி எல்லாம் இருப்பார்கள் இல்லையா? அது போல, இங்கே இந்தப் பள்ளியின் டைரக்டர் நான். நானும் பாடம் எடுப்பேன். எங்களிடம் சீனியர் ஆசிரியைகளும், ஜூனியர் ஆசிரியைகளும் இருக்கிறார்கள். ஸிலபஸ் இருக்கிறது. தியரி இருக்கிறது. சமஸ்கிருதம் கட்டாயம். ஆனால் போதனா மொழி தமிழ்தான். ரஷ்யக் குழந்தைகளுக்குக்கூட போதனா மொழி தமிழ்தான். நடனமோ, பாட்டோ, சிற்ப சாஸ்திரமோ சாஸ்திர ரீதியாகப் படிக்க சமஸ்கிருதம் இல்லாமல் முடியாது. எல்லா நடன ஆசிரியைகளும் என்னிடம் தயாரானவர்கள். என்னுடைய பாணி, நாட்டிய

பரதமாடத் தெரியாது?



சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்ட பாணி. அந்தப் பாணியில் நாங்கள் இங்கே சொல்லிக் கொடுக்கிறோம். எடுத்த உடனே அடவு சொல்லிக் கொடுப்பதில்லை. ஆறேழு மாதம் வெறும் உடற் பயிற்சி மட்டும்தான்......

நிரு: நீங்கள் என்னென்ன வகுப்புகள் நடத்துகிறீர்கள்?

ப: நான் ஊரில் இருந்தேன் என்றால், ஜூனியர் லெவல் வகுப்பிலும்கூட உட்காருவேன். நான் எடுக்காத வகுப்பே கிடையாது. ஆசிரியைகள் எல்லாருமே ஆடியாகணும். பாடத் திட்டத்தின் தரத்தை அவ்வப்போது உயர்த்துவது, ஒர்க் ஷாப் போல அமைத்துப் பயிற்சி அளிப்பது எல்லாம் செய்கிறேன். சிதம்பரம் தஞ்சாவூர் மகாபலிபுரம் எல்லாம் மாணவிகளை அழைத்துப் போவேன். அங்குள்ள சிறப்புக்களை விளக்குவேன். அவர்களுடைய கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும்விடையளிப்பேன்.நீங்கள் நிருத்யோதயாவுக்கு நேரில் வந்து பாருங்களேன்!

(மறுநாள் 'நிருத்யோதயா'வுக்குப் போனபோது சீனியர்—ஜூனியர் மாணவிகள் இரு பிரிவாக அமர்ந்திருந்தார்கள். பத்மாவும் அவர் அண்ணா பாலகிருஷ்ணனும், நாட்டிய சாஸ்திரம் போதிக்கும் பண்டிதரும், டாக்டர் நாகசாமியும் மோடாக்களில் உட்கார்ந்திருந்தார்கள். சீனியர் மாணவிகள் கருத்தரங்கம் நடத்திக் கொண்டிருந்தார்கள்! ஹேமா கிருஷ்ணமூர்த்தி, ஒவ்வொருவரையும் ஒரு வரியில் அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார்., ஒவ்வொரு மாணவியும் ஆங்கிலத்திலும், தமிழிலுமாகத் தாம் நாட்டிய சாஸ்திரத்தைப் பற்றி, ஐந்து நிமிடங்களுக்குத் தயாரித்து வந்திருந்த கட்டுரையைப் படித்தார். பத்மா இடை இடையே அவர்களைக் கேள்விகள் கேட்க, மாணவிகளின் பதில்கள் பளிச், பளிச்!

அடுத்து, தொல்பொருள் ஆராய்ச்சித் துறை இயக்குநர் டாக்டர் நாகசாமி வகுப்புகள் ஆரம்பித்தார். கல்வெட்டுக்களைப் படிக்கக் கற்றுக் கொடுக்கும் ஆரம்ப நிலையாக, கிரந்த எழுத்துக்களை அறிந்து கொள்ளும் பாடம் துவங்கியது. மூன்று நாள் பாடங்களை ஒரே நாளில் கற்றுக்கொண்டுவிட்ட மாணவிகளைப் பார்த்து டாக்டர் நாகசாமிக்கு வியப்பாயிருந்தது.

'எப்படி எங்கள் பள்ளி? எப்படி எங்கள் மாணவிகள்?' என்றுநம்மைக்கேட்பதுபோல் இருந்தது பத்மாவின் பார்வை!)

நிரு: உங்கள் நூலுக்குப் 'பரதக் கலை' என்று தலைப்புத் தந்துவிட்டு, பாரதீய பாமர நடனங்கள் என்று கடைசியில் ஒரு நீண்ட கட்டுரை எழுதியிருக்கிறீர்கள். மேல் நாட்டு நடனங்கள் பற்றியும் ஒரு கட்டுரை. இது பொருத்தமற்றதாகத் தோன்றவில்லையா?

ப: ஒரு மாணவி தெரிந்துகொள்ள வேண்டிய தியரி எல்லாம் இதில் இருக்கிறது. நடனம் பயில்வோர் கிணற்றுத் தவளை மாதிரி இருக்கக்கூடாது. காந்திஜி சொன்னார்: "என்னுடை ஜன்னல்கள் எல்லாம் திறந்தே இருக்கட்டும். காற்று தாராளமாக என் அறைக்குள் வீசட்டும். ஆனால் என்னையே தூக்கிப் போகிற அளவுக்கு நான் அனுமதிக்கமாட்டேன்" என்று. அது மாதிரி மற்ற மாநிலங்களின், மற்ற நாடுகளின் நடனக் கலைகள் பற்றியும் ஓரளவு தெரிய வேண்டும். அப்போதுதான் நமது கலைக்கும், அவற்றுக்கும் உள்ள வித்தியாசம் புரியும். பரதக் கலை பயில்பவர்கள் பாரதக் கலைகள் பற்றியும் ஓரளவு அறிந்து கொள்ள வேண்டாமா? வேண்டாம் என்றால் தேசிய ஒருமைப்பாடு பற்றிப் பேச நமக்கு என்ன அருகதை?



* ராஷ்டிரபதி சஞ்சீவ ரெட்டியிடம்

நிரு: நடன விமர்சகர் ஒருவர் உங்கள் நடனத்தைப் பரத நாட்டியமல்ல, 'பத்மா நாட்டியம்' என்று சொல்லியிருக்கிறாரே, உங்கள் பதில் என்ன?

ப: நடனம் ஆடுவதோ, நடன ஆராய்ச்சி பண்ணுவதோ, எல்லாமே என்னுடைய ஆத்ம திருப்திக்காகவே பண்ணிக் கொண்டிருக்கிறேன். இதுதான் சரி என்று என் மனச்

சாட்சிக்கு எது தோன்றுகிறதோ, அதை நான் செய்து கொண்டிருக்கிறேன். இதை எல்லாம் புகழ்ந்தார்கள் என்றால், புகழ்ச்சிக்குக் காரணம், பரமாச்சார்யர்களின் பூரண அனுக்கிரகம். யாராவது, எதற்காவது திட்டினார்கள் என்றால், அதற்கு நிஜமாகவே என்னுடைய தவறு காரணம் என்றால், அது என்னுடைய குறை. பத்மா நாட்டியம் என்று எழுதினால் எனக்கொன்றும் இழுக்கு வந்து விடாது. அதேபோல் என்னைக் "கிரியேடிவ் ஆர்ட்டிஸ்ட்' என்று யாராவது புகழ்ந்தால் எனக்குப் பெருமையும் இல்லை. நாம் ஆதார பூர்வமாக ஆராய்ச்சி பண்ணி, பரதர் சொன்னதை மேடையில் வழங்கும்போது அதற்கான பாராட்டை எனக்கு அனாவசியமாகக் கொடுக்கிறார்களே என்று நான் வருந்துவதுண்டு. நான் க்ரியேட் பண்ணுவதே இல்லை. ரீ—க்ரியேட் பண்ணுகிறேன். அவ்வளவுதான். நாட்டிய சாஸ்திரத்தில் என்ன சொல்லியிருக்கிறதோ, அதை எடுத்துக் கையாள்கிறேனே தவிர, இது என் சொந்தச் சரக்கு இல்லை. ஒரு தீட்சதர் ராமாயண உபந்நியாசம் செய்கிறார். 'அது வால்மீகி ராமாயணம் இல்லை; தீட்சதர் ராமாயணம்' என்றால் எப்படி இருக்கும்? அது மாதிரிதான் இருக்கிறது பத்மா நாட்டியம் என்று சொல்லுவதும்! பொக்கிஷம் எங்கேயோ இருக்கிறது. அதை அள்ளி நான் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். நான் கொடுக்கிற விதம் சிலருக்குப் பிடிக்கும், சிலருக்குப் பிடிக்காமலிருக்கும். அது வேறு விஷயம். கலா ரசனை என்பது மனிதருக்கு மனிதர் வேறுபடத்தான் செய்யும்.



பத்மஸ்ரீ விருது பெறுகிறார் பத்மா.


நிரு: பரத நாட்டியத்தை பரத நிருத்யம் என்று நீங்கள் மட்டுமே குறிப்பிடுகிறீர்கள். நீங்கள் ஆடுவதிலும் கதக் பாணி சுழற்சிகள், ஒடிசி பாணி த்ரிபங்கிகள் எல்லாம் கலந்து ஆடுகிறீர்கள். நாட்டின் பிற பாகங்களில் ஆடப்படும் நடனங்களின் சாயைகள் தெரிகிறதே?

ப: பரதரின் நாட்டியசாஸ்திரத்தை ஒரிசாவில் பின்பற்றுகிறார்கள். குஜராத்தில் இவை ஓவியங்களாக இருக்கின்றன. மத்திய பிரதேசத்தில் சிற்பங்களாய் இருக்கின்றன. இந்தக் கரணங்களை வரிசைப்படுத்திப் பரப்பியது தமிழ்நாட்டில்தான். அங்கெல்லாம் நடைமுறையில் அழிந்ததை, தெற்குதான் காப்பாற்றியது.

என்னுடைய பாணி என்பது, நாட்டிய சாஸ்திரத்தில் பரதர் சொன்ன பாணி. அந்தப் பாணியில் நான் ஆடும்பொழுது, இன்றைக்குப் பல பிராந்தியங்களில் உள்ள சில அசைவுகளின் சாயைகளை அதில் நீங்கள் பார்க்கிறீர்கள். நான் கதக் படித்ததில்லை — கதக் ஆடுவதற்கு. கதகளி படித்ததில்லை கதகளி ஆடுவதற்கு. நான் படித்ததெல்லாம், எல்லோரும் சொல்கிறார்களே பரத நாட்டியம் என்று — அந்த 'சதிர்'. சதிர் ஸ்டைல். நான் ஒடிசி படித்தது கிடையாது. ஆனால் நாட்டிய சாஸ்திரத்தை ஆராய்ச்சி பண்ணும்போது, இந்தப் பல்வேறு பாணிகளின் ஆதாரத் தொடர்புகளை **(genetic relationship)** என்னால் தெரிந்து கொள்ள முடிந்தது. ஆறு காலம் ஆடணும்; ஆறு காலம் பாடணும் என்பது பொதுவாக, நடனத்திலும் இசையிலும் உள்ள ஒரு விஷயம். ஆனால் இது நடைமுறையில் யாரும் பண்ணுவதில்லை.

நிரு: ஆறு காலமா?

ப: ஆமாம். ஆறு காலம். மூன்று காலம்தான் இப்போது செய்கிறார்கள். ஆறு காலம் பாடணும், ஆறு காலம் ஆடணும் என்கிறது சாஸ்திரம். இந்த சாஸ்திரத்தை, தெற்கே யாரும் அதிகம் பின்பற்றுவதில்லை. சமீபத்தில் தஞ்சை விழாவிலே, 'எந்தரோ மகானுபாவுலு' பாடலை, பிரதமர் ராஜீவ் குறிப்பிட்டது நினைவிருக்கிறதில்லையா? கோவிந்த மாரார் என்று கேரளத்திலிருந்து ஒரு மேதை வந்தபோதுதான் தியாகராஜ சுவாமிகள் அந்தப் பாடலைப் பாடினார். அவருக்கு ஷட் காலம் கோவிந்த மாரார் என்று பெயர்! ஷட் காலம் என்றால் ஆறு காலம். இன்றைக்குக் கேரளத்திலும் ஆறு காலம் செய்கிறவர்கள் கிடையாது.... அந்த மாதிரி, தகதிமி அல்லது தையாதை என்று ஆறு காலம் போட்டு நாட்டியப் பயிற்சி செய்ய வேண்டும். ஆறு காலத்துக்கும் நான் ஆடுகிறேன். சாதாரணமாக இன்றைக்கு ஆறு கால



வேகம்கதக்கில்தான் பேசுகிறது. அதனால் எல்லோருக்கும் என்ன தோன்றுகிறது என்றால், நான் கதக்கைப் பின்பற்றுகிறேன் என்று. நான் பின்பற்றுவது சாஸ்திரத்தை. கதக்கை இல்லை!



பதினான்கு, பதினைந்து வருஷங்களுக்கு முன், தில்லியில் நடந்த என் நாட்டியத்தைப் பார்த்துவிட்டு ஒரு வெளிநாட்டு விமரிசகர் எழுதினார், 'ஒடிசியைக் காப்பி பண்ணி பத்மா ஆடினார்' என்று. அப்புறம்தான் ஒடிசி பார்க்க ஆரம்பித்தேன்! அவரைக் குறை கூறவில்லை., ஒடிசியைப் புரிந்து கொள்ள எனக்கு உதவியதற்காக அவரை வாழ்த்தினேன். நான் பண்ணினது பரத சாஸ்திரத்தில் இருந்தபடிதான்.

திரு: ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேல் நடனமாடக் கூடாது என்று ஏதாவது சுய கட்டுப்பாடு, வரைமுறை உண்டா?

ப: ஆடுவதற்குச் சக்தி இருந்தால், லாகவம் இருந்தால், உடல்வாகும் இருந்தால் எண்பது வயதில்கூட ஆடலாம். உலகப் புகழ் பெற்ற மேல்நாட்டு நடனக் கலைஞர் மார்த்தா கிரகாமுக்கு வயது எழுபது இருக்கலாம். இப்போதுகூட நிகழ்ச்சிகள் அளிக்கிறார். பார்ப்பதற்கு ரசிகர்கள் இருக்கிறார்கள்.

திரு: சாஸ்திரத்துக்கும், நடைமுறை நாட்டியத்துக்கும் இடையே ஒரு பாலம் அமைத்துவிட நினைத்து, அவராகவே கண்டுபிடித்த ஒரு பாணியைக்கையாள்கிறார் பத்மா என்று ஒரு கருத்து இருக்கிறதே?

ப: அதில் ஒன்றும் தப்பு இல்லை. நானே ஒப்புக் கொள்கிறேன். அதனாலேயே என்னோட பாணி தனிப் பாணி என்று நீங்கள் சொன்னால் ஏற்றுக் கொள்கிறேன். நாட்டிய சாஸ்திரப்படி, இலக்கணத்துக்கும், செய்முறைக்கும் வேறுபாடு இல்லை என்று நான் நம்புகிறேன். இதுதான் என் நடன வாழ்க்கையின் குறிக்கோள்கூட.

திரு: உடல்மொழி (**Body Language**) தான் பரத நாட்டியம் என்று ஒரு கருத்து இப்போது நிலவுகிறதே?

ப: பள்ளிகளில் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, மூன்றாம் வகுப்பு என்று இல்லையா? அதுபோல சரீரத்தைப் பழக்குவது (ஃபிஸிகல் லெவல்) என்பது 'முதல் வகுப்பு என்று வைத்துக் கொள்ளுங்கள். அடுத்தபடி இன்டலெக்சுவல் என்கிற அறிவு பூர்வமான இரண்டாம் வகுப்பு. அதற்கு அடுத்த நிலைதான் இமோஷனல் இன்வால்வ்மெண்ட் என்கிற உணர்ச்சி பூர்வமான தன்மயமான நிலை. இதையும் தாண்டி, எல்லாவற்றுக்கும் மேலே உள்ளது ஸ்பிரிசுவல் லெவல் என்கிற ஆத்மானுபவமான நிலை. எல்லாருக்குமே திமர் என்று ஆத்மானுபவம் வந்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. "இந்த உடலைப் பழக்குவதே அதை மறந்துவிட்டு ஆத்மானுபவத்தை அடைய முயற்சி செய்வதற்குத்தான்" என்று நான் எனது லெக்சர்களில் சொல்வேன்.

திரு: பரத முனி வடக்கே தோன்றியவர். அவர் அமைத்த நாட்டிய சாஸ்திரமே பரத நாட்டியம் என்று நீங்கள் சொல்கிறீர்கள். வேறு சிலர் பரத நாட்டியம் தமிழ் நாட்டில் தோன்றியது — அது தமிழர் கலை என்று சொல்கிறார்களே?

ப: இப்போதுள்ள பரத நாட்டியம் என்ற பெயரில் ஆடப்படும் சதிர் தமிழ் நாட்டில் படிப்படியாக உருவானதுதான். அதாவது அலாரிப்பிலிருந்து தில்லானாவரை ஆடப்படும் இந்த நிகழ்ச்சி பாணி. இது சுமார் 300 ஆண்டுகளாக நிலவி வரும் பாணி. ஆனால் அதற்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பாகவே நாட்டிய சாஸ்திரத்தை எழுதிய பரத முனிவர், எங்கு பிறந்தார் என்பது இன்னும் நிரூபிக்கப்படவில்லை. இந்தப் 'பரதக் கலை — கோட்பாடு' புத்தகத்தில் பரதர் எங்கே பிறந்தார் என்று நான் எங்கேயும் எழுதவில்லை. அகஸ்தியர் போலவே பரதரும் பல பரதர்கள் இருந்திருக்கிறார்கள். சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன் ஒரு சதஸ்ஸில், மகாமகோபாத்யாய குப்புசாமி சாஸ்திரி போன்ற மேதைகள் கலந்து கொண்ட சதஸ்ஸில், நாட்டிய சாஸ்திர நூல் எழுதப்பட்ட பாணி இருக்கிறதே, அது காஷ்மீரி சம்ஸ்கிருதமாக இருக்கலாம் என்ற



முடிவுக்கு வந்தார்கள். நாட்டிய சாஸ்திர சுவடிகள் தெற்கே கேரளத்திலும், வடக்கே நேபாளத்திலும் கூடக் கிடைத்திருக்கின்றன. வேதம் எப்படி பொதுவோ அப்படி இந்த நாட்டிய வேதமும் பாரதம் முழுமைக்கும் பொது. இதனைப் பஞ்சம வேதம் (ஐந்தாவது வேதம்) என்றே சொல்கிறார்கள்.

திரு: இன்றைய பரத நாட்டிய பாணி சமீப காலத்தில் தோன்றியது என்கிறீர்கள். அப்படியே வைத்துக் கொள்வதானாலும் கலை என்பது நாளாவட்டத்தில் பண்பட்டு வளர்ச்சியுற்றும் தூய்மையுற்று தெளிவு பெற்றும் (refinement) முன்னேறி வருகிற ஒன்றுதானே? இப்போது நீங்கள் பரத முனிவர் எழுதிய நாட்டிய சாஸ்திரப்படியும் தொன்மையான சிற்பங்களில் காணப்படும் கரணங்களின் படியும் நாட்டியம் ஆடுவது என்றால் இத்தனை கால வளர்ச்சி அல்லது refinement ஐ ஒதுக்கிவிட்டு பின்நோக்கிச் செல்வதாகாதா? இது பிற்போக்குத்தன மில்லையா?

ப: இது ஒரு நுணுக்கமான விஷயம். என் கருத்து என்னவென்றால், refinement அல்லது கலை நுணுக்க வளர்ச்சியானது காலத்தின் அடிப்படையில் ஏற்படுவது அல்ல. காலத்தின் அடிப்படையில் கலையானது தெளிந்து தூய்மை பெறுவதற்குப் பதில் தாழ்வுற்று நீர்த்துப் (dilute) போகவும் முடியும். 14ம் நூற்றாண்டுக்குப் பிறகு அந்நியர் படையெடுப்புக்கள் காரணமாக நமது புராதனக் கலைகள், பண்பாடு முதலியன ஓர் உச்ச கட்டத்திலிருந்து இறங்கி வந்துவிட்டன. இதைமறுபடி புனருத்தாரணம்செய்யமிகுந்த பாடுபட்டார் வித்யாரண்ய முனிவர். விஜய நகர சாம்ராஜ்யத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. அப்போதே, ஒரு கல்வெட்டு, நமது புராதனக் கலைகளைப் புனருத்தாரணம் செய்வது ரொம்பக் கடினமாக உள்ளது; போதிய அளவு கலைஞர்களோ கலை பற்றிய விவரங்களோ கிடைக்கவில்லை என்று கூறுகிறது. சங்கீததர்ப்பணம், அபிநயதர்ப்பணம், நாட்டிய தர்ப்பணம் முதலியன இந்த இடைக் காலத்தில் எழுதப்பட்டவை. தர்ப்பணம் என்றாலே கண்ணாடி என்று அர்த்தம். ஆக, இவைபழையகலாச்சாரத்தின்பிரதிபலிப்பே யன்றி பழைய கலாச்சாரத்தின் ஆதார பூர்வமான வடிவங்கள் அல்ல. இந்த நூல்களை ஆராயும்போது பரத சாஸ்திரத்தின் பல நுணுக்கமான கலை அம்சங்கள் எளிமைப் படுத்தப்பட்டுவிட்டன என்று தெரிய வரும். ஆக, இன்று நான் செய்வது பரதக் கலையை அதன் புராதன மேன்மைக்கு உயர்த்துவது தானே தவிர அதன் தரத்தைத் தாழ்த்துவ தாகாது.

— சாருகேசி.

வண்ணப்படம்: யோகா.

பரதக்கலை — பத்மா சுப்பிரமணியம்;
பிரசுரம்: வானதி பதிப்பகம்,
13, தீனதயாளு தெரு,
சென்னை — 17.
விலை ரூ. 60/—.

விடை: நாங்கள் கொடுத்திருக்கும் விடையைத்தான் நீங்கள் எழுதியிருக்க வேண்டும் என்று கண்டிஷன் ஏதும் இல்லை.

சினிமா நட்சத்திரம்	நதி	நாடு	ஊர்	அரசியல்வாதி	விளையாட்டு வீரர்
சிலுக்கு ஸ்மிதா	சிந்து	சிலி	சிம்லா	சிதம்பரம்	சிவராம கிருஷ்ணன்
பாக்யராஜ்	பாலாறு	பாகிஸ்தான்	பாலக்காடு	பாலசிங்கம்	பாய்காட்
அம்பிகா	அமேசான்	அர்ஜென்டைனா	அலகாபாத்	அர்ஜுன் சிங்	அசருதீன்
பிரதாப்	பியாஸ்	பின்லாந்து	பிச்சாவரம்	பிந்திரன்வாலே	பிரகாஷ் படுகோனே
மனோரமா	மகாநதி	மங்கோலியா	மகாபலிபுரம்	மகந்தா	மல்ஹோத்ரா
கிஷ்மு	கிருஷ்ணா	கிரீன்லாந்து	கிருஷ்ணகிரி	கிருபளானி	கிர்மானி

N.S.K.
மோட்டார் & ஜெனரல் பைனான்ஸ்



கவர்ச்சிகரமான வட்டி விகிதம்

27%

1 வருடம்	2 வருடம்	3 வருடம்	5 வருடம்
20%	21%	22%	24%

(குறைந்தபட்சம் ரூ. 1000/-ம் அதன் மடங்குகளும் ஏற்றுக் கொள்ளப்படும்).

3 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி பெற கூடுதல் போனஸ் 24% + 1% = 25%
6 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி பெற கூடுதல் போனஸ் 24% + 2% = 26%
12 மாதங்களுக்கு ஒரு முறை வட்டி பெற கூடுதல் போனஸ் 24% + 3% = 27%

கங்கா கேஷ் சர்ட்டிபிகேட் உங்களுடைய முதலீடு 42 மாதங்களில் இரு மடங்காகிறது. உதாரணம் ரூ. 10,000/= ரூ. 20,000/

அன்பளிப்பு		
முதலீடு	வருடம்	சிறப்புப் பரிசு
ரூ. 25,000/-	5	1 சவரன் தங்க நாணயம்
ரூ. 15,000/-	5	½ சவரன் தங்க நாணயம்
ரூ. 5,000/-	3	1 HMT வாட்ச்
ரூ. 5,000/-	2	1 அழகிய வெள்ளி குத்துவிளக்கு

பேங்க் கேஷ் சர்டிபிகேட்டுடன் டெபாஸிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

5 வருடம்	6 வருடம்	7 வருடம்	10 வருடம்
18%	19%	20%	24%

சிறப்புப் பரிசுகள் 28-2-86 தேதி வரை மட்டுமே வழங்கப்படும்.
இந்த பொன்னான வாய்ப்பை நழுவ விடாதீர்கள்.

N.S.K. மோட்டார் & ஜெனரல் பைனான்ஸ்

எண் 38B, பர்கிட் ரோடு [முதல் மாடியில்] (தி.நகர் பேருந்து நிலையம் எதிர்புறம்) தி. நகர், சென்னை-600 017 போன்: 447135

HIRE PURCHASE FINANCIERS



பாடத்துடன் நல்ல பழக்கம்!

ஒரு ஜப்பானிய ஆரம்பப் பள்ளியின் வகுப்பறை இது. படத்தில் உள்ள சிறுவன் வகுப்பறையின் தரையை அழுந்தத் துடைத்துச் சுத்தப்படுத்திக் கொண்டிருக்கிறான்! படிப்புடன் பொறுப்புணர்ச்சியையும், சுகாதார உணர்வையும் பிஞ்சு உள்ளத்திலேயே ஆழப் பதியச் செய்துவிடுகின்றன ஜப்பானிய பள்ளிகள். இப்படிப் பல ரகப் பணிகளை மாணவர்களுக்குக் கொடுப்பதன் மூலம் உடலுழைப்பின் உயர்வையும் உணர்த்தி விடுகிறார்கள்.

நன்றி: பிக்டோரியல் ஜப்பான்.

அங்கும்



இங்கும்

ஆச்சரியத்தில் ஆழ்த்திய பூட்டா சிங்

மாநிலக் கூட்டுறவு அமைச்சர்களின் கூட்டம் டில்லியில் நடந்தது. அதிலே தமிழகக் கூட்டுறவு அமைச்சர் கே. கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரனும் கலந்து கொண்டு, தமிழிலே தம் பேச்சை முடித்தார். மத்திய அரசின் விவசாயத் துறை அதிகாரியான அர்த்தனாரீஸ்வரன் என்கிற நம் ஊர்க்காரர் அமைச்சரின் பேச்சை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, பூட்டாசிங்கிற்குக் கூறினார். கடைசியில் மறுபடி, அதிகாரியை அழைத்து ஏதோ பேசினார் பூட்டாசிங். அப்புறம் அமைச்சர் கே. கே. எஸ். எஸ். ஆரிடம் வந்து, "நீங்கள் சொன்னதெல்லாம் புரிஞ்சுது; கவலைப்படாதே தம்பி! நான் எல்லாம் பாத்துக்கறேன்!" என்று தமிழில் சொன்னதும், நம் அமைச்சர் ஒரே 'ஆ!... ஆ!...' தான்!

அமைச்சரே சொல்லக் கேட்டவர்:
நமது நிருபர்



புலி பார்க்க வந்தார் — வாடகையை உயர்த்திச் சென்றார்!

ராஜஸ்தானில் உள்ள புலிகள் சரணாலயத்தில் வனத்துறைக்குச் சொந்தமான 'ஜோகி மஹால்' என்ற பங்களா இருக்கிறது. இதில் தங்கும் சுற்றுலாப் பயணிகள் அறை ஒன்றுக்கு ஒரு நாளைக்கு 65 ரூபாய் வாடகை கொடுத்து வந்தார்கள். இப்போது வாடகை 200 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது!

காரணம்: பிரதமர் ராஜீவ் காந்தியும் அவர் குடும்பத்தினரும், மற்றும் அவர் விருந்தினர்களாக அமிதாப் பச்சன் — ஜெயா பச்சன் குடும்பத்தினரும் இவ்வாண்டு தொடக்கத்தில் ஜோகி மஹாலில் தங்கி விடுமுறையை அனுபவித்தார்கள். பிரதமர் வருகையைத் தொடர்ந்து, காட்டுப் பகுதியில் அமைந்துள்ள இந்த ஜோகி மஹாலுக்கு மவுசு அதிகரித்துவிட்டது! வரலாறு காணாத வகையில் சுற்றுலாப் பயணிகள் ரான்தாம்பர் வனவிலங்கு சரணாலயத்துக்குப் படையெடுக்கின்றனர். ஜோகி மஹாலில் இடம் பிடிக்க அலைமோதும் கூட்டத்தைச் சமாளிக்க இயலாமல் வாடகையை உயர்த்திவிட்டார்கள்!



நன்றி: **இந்தியன் எக்ஸ்பிரஸ்**

போப்பாண்டவர் வருகையால் விலைவாசி குறைந்ததா?

* ஆர். அப்துல் சலாம், திருச்சி. *

? அமெரிக்காவில் சேலஞ்சர் வெடித்துச் சிதறச் சதித் திட்டம் காரணமாக இருக்குமோ?

! ஆம், விதியின் சதிதான்! அமெரிக்காவின் விண்வெளியை வெற்றி கொள்ளும் முயற்சியில் இது இரண்டாவது பெரும் விபத்து. விண்வெளிப் பயணங்கள் மனித குல முன்னேற்றத்துக்குப் பயன்படும்போது இவை உயிர்த்தியாகங்களாகும். மாறாக, ஸ்டார்வார்ஸ் போன்ற அழிவுப் பாதையில் அமெரிக்கா செல்லுமானால் யுத்த அரக்கனுக்கு இடப்பட்ட உயிர்ப்பலிகளாகும்.

* நீலா சுவாமிநாதன், திருப்பூர்.

? பகைவனுக்கும் அருளியவர் பற்றிப் படித்தேன். எங்கள் ஊருக்கு தேவரஸ் வருகிறார். ஸ்பெஷல் ரிப்போர்ட் அனுப்புகிறேன், பிரசுரிப்பீரா?

! அது பிரசுரம் ஆவதும் ஆகாததும் நீங்கள் எந்த அளவுக்கு அந்தக் கட்டுரையை சுவாரஸ்யமான முறையில் எழுதப் போகிறீர்கள் என்பதைப் பொறுத்தது. உங்கள் கேள்வியில் தொனிக்கிற சார்புத்தன்மை (bias) எங்களுக்குக் கிடையாது.

* மாதவ இராமன், கிருஷ்ணகிரி.

? கமல் — மோகன் இவர்களில் காதல் நடிப்பில் யார் டாப்?

! கமலஹாசனுக்குக் கற்பனை அதிகம். காதலியைக் கெஞ்சுவதில்கூடத் தன் கைச்சரக்கைச் சேர்த்து ஒரு கிள்ளல், ஒரு கண் சிமிட்டல், ஒரு தலை சொறிதல் என்று ரசிக்கக் கூடிய கோமாளித்தனங்களை வைப்பார். மோகன் விஷயத்தில் டைரக்டர்தான் பொம்மலாட்டக்காரர்.

* எம். உஷா, காரமடை.

? பஞ்சாயத்துத் தேர்தல்—மைதிலி என்னை காதலி — ஒப்பிடுக.

! அப்பாடா! அதோ வருகிறது, இதோ வருகிறது என்று சொல்லி ஒரு வழியாக வந்தே விட்டன இரண்டுமே. முன்னது நீதிமன்றத் தீர்ப்பையும் பின்னது மக்கள் தீர்ப்பையும் எதிர்பார்த்திருப்பதால் இரண்டும் வந்த வேகத்தில் மறைந்தும் விடாதிருக்க வேண்டுமே என்று கவலையாகவும் இருக்கிறது!





* காதலில்....... ......யார் டாப்?

* க. தியாகராஜன், நெய்வேலி.

? தி. மு. க. வில் மட்டும் கோஷ்டிகள் இல்லையே, ஏன்?

! உட்கட்சி ஜனநாயகம் இருந்தால் கோஷ்டிகள் தோன்ற வாய்ப்பு மிகவும் குறைவு.

* ப. விஜயபாலன், பம்பாய்.

? தங்களுக்கு மிகவும் பிடித்த ராகம் எது?

! அனுராகம்.

* பிரபாகரன், திருமங்கலம்.

? முன்னாள் எம். பிக்கள் கூட நகரசபைத் தேர்தல்களில் போட்டியிடுவது பற்றி...?

! பதவி சுகம் கண்டவர்களால் சும்மா இருக்க முடியாது. அதற்கு ரொம்ப ரொம்ப மனோதிடம் வேண்டும். எத்தனை பேர் ராஜாஜி மாதிரி இருக்க முடியும்?

* பி. ஆர். பார்த்தசாரதி, மன்னார்குடி.

? மறைந்த திரு. ஆர். டி. பார்த்தசாரதி பற்றி...?


! சரித்திர ஆராய்ச்சியாளருக்கு அவர் சேலம் விஜயராகவாச்சாரியின் பேரன். சேலம் வாசிகளுக்கு அவர் ஆதியில் காவிரி நீர் கிடைக்க உதவிய உத்தமர்; சமீபத்தில் சேலம் உருக்காலை உருவாகக் காரணமான பெருந்தகை. சுதந்திரப் போராட்டகாலத் தியாகிகளுக்கு அவர் 1942 ன் வெள்ளையனே வெளியேறு வீரர். தலைநகர் வாசிகளுக்கு அவர் ராஜ்ய சபையில் அர்த்தமுள்ள சொற்பொழிவுகளை நிகழ்த்திய அறிஞர். மத்திய அரசுக்கு அவர் பல்வேறு ஆலோசனைக்

கமிட்டிகளில் அங்கம் வகித்து உதவிய ராஜ குரு. ஹிந்தி எதிர்ப்பாளருக்கு அவர் ஆங்கிலமும் ஆட்சிமொழியாக நீடிக்கப் போராடி வெற்றி கண்ட தீரர். காந்தியவாதிகளுக்கு அவர் சேலத்தில் காந்தி சிலை பாழ்படுத்தப் பட்டபோது சாத்துவீக முறையில் பொங்கி எழுந்து அரசின் மெத்தனத்தைக் கண்டித்த அஞ்சா நெஞ்சினர். விளையாட்டுவீரர்களுக்கு அவர் நல்லதொரு கிரிக்கெட் ஆட்டக்காரர், விமரிசகர். ரயில்வே பயணிகளுக்குக் கோவை எக்ஸ்பிரஸ்ஸும் ஏர்காடு எக்ஸ்



* ஸ்பெஷல் ரிப்போர்ட்!

* சதித் திட்டம்?





* சேலம் தந்த செல்வர்



* காமெடியில்.....



..... யார் உசத்தி?

நீங்கள் கேட்டவை
— தராசு

பிரஸும் ஓடக் காரணமாயிருந்த கர்மவீரர். டி. வி. ரசிகர்களுக்குத் திருச்சி, சேலம் வாசிகள் டி. வி. பார்க்க வழி செய்த ஆன்டென்னா. எதிர்காலத்துக்கோ அவர் கங்கை காவேரி இணைப்புக்கு வித்திட்ட தீர்க்கதரிசி!

*** மின்னல் பிரியன், மானாமதுரை.**

? தெரியாமல்தான் கேட்கிறேன், போப்பின் வருகையால் விலைவாசி குறைந்துவிட்டதா, இல்லை ஈழப்பிரச்னைதான் தீர்ந்து விட்டதா?

! பதவி ஏற்றபிறகு நமது பிரதமர் போகாத தேசமில்லை. அதனால் அந்தந்த நாடுகளில் நிலவும் பிரச்னைகள் தீர்ந்துவிட்டதா? மனசைக் கொஞ்சம் விசாலப்படுத்திக் கொள்ளுங்கள், ஸார்!

*** சிவாம்பிகை, அரசகண்டநல்லூர்.**

? சுருளிராஜன், கவுண்டமணி — காமெடி யார் நன்றாய்ச் செய்வார்கள்?

! ஆட்டுக்கார அலமேலுவில் ஆடு துரத்திக் கொண்டு வர, ஓர் இடத்தில் ஒதுங்கிக் கொண்டு 'ஹ்ங்... ஹ்ங்... ஆட்டுக்கு மட்டும் இளப்பமாயிருக்காதா?' என்று சொல்லிவிட்டு மீண்டும் மூச்சிரைப்பார் சுருளி. வசனத்துடன் சேஷ்டையும் இருக்கும். மெது வடையுடன் கெட்டித் தயிரும் சேர்ந்த மாதிரி. கவுண்டமணி மெது வடை மட்டுமே.

*** சரீபா ராஜகுமாரன், கோவை.**

? இந்துமத ஆதீனம் சகமதமான இஸ்லாம் பற்றி அறிந்து, அதன் மகத்துவத்தை உணர்ந்து பேசினால் உங்களுக்குத் தமாஷாகப் படுகிறதா?

! சக மதத்தைப் பற்றித் தெரிந்து கொள்வது தவறில்லை என்பது மட்டுமல்ல அது அவசியமும் கூட. எனக்கும் எம்மதமும் சம்மதம்தான். ஆனால் சிரிக்க வைப்பது, அல்லது சிந்திக்கச் செய்வது யார், எதைப் பற்றி, என்ன பேசுகிறார்கள், எப்படிப் பேசுகிறார்கள் என்பனதான்.

*** ஜே. பாலசந்திரன், நீடாமங்கலம்.**

? தன்மானம், இனமானம் எது அதிகம் இருக்க வேண்டும்?

! இரண்டும் சம அளவில் இருக்க வேண்டியதுதான். ஆனால் அதிகரிக்க வேண்டியதென்னவோ வருமானம்தான்-!

*** ஷீலா, சென்னை — 34.**

? பட்ஜெட் யோசனைக்குப் பரிசு 5000 ரூபாயாமே?

! சிரிப்புத்தான் வருகிறது.. பட்ஜெட் பற்றி விஷயஞானத்துடன் ஆராய்ந்து எழுதக் கூடியவர்கள் பொருளாதார மேதைகளாக இருக்க வேண்டும். அத்தகையவர்கள் கேவலம் 5000 ரூபாய்க்காகவா தங்கள் பொன்னான நேரத்தைச் செலவிடுவார்கள்? இதைவிடப் பரிசு ஏதும் அறிவிக்காமல் நாட்டிலுள்ள நல்லறிஞர்களின் யோசனைகளை வரவேற்பதாக மட்டுமே அறிவித்திருக்கலாம். கௌரவமாக இருந்திருக்கும்.

*** ரூ. 10 பரிசு பெறுபவர்:**
ஆர். அப்துல் சலாம்,
12, தெற்கு 2 வது தெரு,
மன்னார்புரம், திருச்சி — 20.



''இப்ப பங்கஜம்மா வீட்லேர்ந்து பொண்ணு கேட்டு வருவாங்க. அந்தச் சம்பந்தத்துக்கு ஒத்துக்காதீங்க. அங்கே ஏற்கனவே இருக்கிற ஒரு வேலைக்காரி போதும்!''

நளினியின் வீட்டுக் கதவைத் தட்டி ஒரு பெண் சொல்கிறாள். மறைகிறாள். மறுபடியும் தட் தட்!

''இப்ப பங்கஜம்மா வீட்லேர்ந்து....'' — இத்யாதி எச்சரிக்கை. இந்த முறை ரவீந்தர்.

ராக்ஷஸத்தனமாய் அப்படி என்னதான் இருந்துவிடப் போகிறது அந்த வீட்டில்? கல்யாணமாகிப் போனபின்தான் தெரிகிறது.

மாமியார் = ராக்ஷஸி.

புஷ்பலதாவிற்கும் மாமியார் ரோலுக்குப் பத்துப் பொருத்தம். இரண்டாவது மருமகள் உண்டாகியிருக்கிறாள் என்றுநியூஸ்வந்ததும், ஆரத்தி எடுப்பதென்ன, குழையோ குழை என்று குழைவதென்ன, 'வாயைத் திற, நானே ஸ்வீட் ஊட்டி விடறேன்' என்று அன்பாய் திணித்துத் திணித்துத் தள்ளுவதென்ன! அட பேரப் பிள்ளைக்காக எத்தனை எதிர்

மாமியார்கள்

பார்ப்பு என்று காரெக்டர்களோடு சேர்ந்து நாமும் வாயைப் பிளக்க, 'கொடுத்தேனே, ஸ்வீட் அதில் கருவைக் கலைக்கிற மாத்திரையைக் கலந்திருக்கேன்!'' என்று மாமியார்

ஸார்!

அட நிக்கறாரு! அப்ப ஸாருக்கும் வேலையில்லே போல. அப்ப நாம இப்ப சொல்லப் போறதைக் கேப்பாரு போல!

அட, ஒண்ணுமில்லே ஸார். இந்த 'மைதிலி என்னை காதலி' பத்தி ஒரு நாலு வார்த்தை சொல்லலாமின்னுதான்!

சும்மா சொல்லக்கூடாது. டி. ராஜேந்தர் படு புத்திசாலி. ஆனா நமக்கெல்லாம் அந்த அளவுக்குப் புத்திசாலித்தனம் இருக்குங்களா?

ஸ்ரீவித்யா வராங்க, அக்கா'ங்கறாரு. அந்தப் பக்கம் ஒரு பொண்ணு காலேஜிலேர்ந்து வருது. அதைப் பார்த்து, 'வாடி மைதிலி, போடி மைதிலி, உக்காருடி மைதிலி, எழுந்திருடி மைதிலி'ங்கறாரு. இந்தப் பக்கம் ஒரு பொண்ணு வருது. அதையும் 'மைதிலி'ங்கறாரு. இந்த மைதிலி சிவப்பு விளக்கு வீட்டிலே இருக்கிற முள்ளில் ஆடும் பறவையாம். இதுக்கு காலேஜ் போறதுக்கு எல்லாம் பர்மிஷன் இருக்குதாம். ஆனாக்கூட இது சிவப்பு விளக்கு வீட்டிலே இருந்துக்கிட்டு அடிபடுமாம். கதை எழுதுமாம். வாழ்க்கையைப் போராடித்தான் ஜெயிக்குமாம். என்னவோ போங்க. இந்த டி. ராஜேந்தரு அத்தைப் பொண்ணு மைதிலியை லவ் பண்றாரு. அந்தப் பொண்ணைப் பார்க்கவே கஷ்டமா இருக்குது. இதைப் போய் டி. ராஜேந்தரு ஸெலக்ட் பண்ணியிருக்காரே— டி. ராஜேந்தருக்கு 'டேக்கா' குடுத்துட்டு வேறே ஒரு டான்ஸ் ஆடற பையனோடே அது ஓடிப்போகுது. இந்தச் சிவப்பு விளக்கு மைதிலி, 'என்னைக் கட்டிக்கோ'ன்னு சொல்லக் கொள்ள, ராஜேந்தர் ஸார், 'நான் என் மனசை ஏற்கெனவே மைதிலிக்குக் குடுத்துட்டேன், உன்க்கில்லே'ன்னு சொல்லிவிட்டு, வில்லன்கிட்டேயிருந்துஇந்த மைதிலியைக் காப்பாத்தக் கிளம்பி, சும்மா ஆறேழு அட்டை ஆட்டோ ரிக்ஷாங்களையெல்லாம் தூள் பண்ணி, ஆளே இல்லாத பாத்திரக் கடை, கறிகாய்க் கடை, சட்டிபானைக் கடை, லிம்கா, கோல்ட் ஸ்பாட் கடை எல்லாத்தையும் நாசம் பண்ணிட்டு,



மைதிலி



ஜாக்கிரதை

அனௌன்ஸ் செய்ததும் கனிஷ்கா விமானம் போல் தடால் தடால் என்று வெடித்துச் சிதறல்!

மாமியாரை வழிக்குக் கொண்டு வர. நளினி போடும் திட்டங்கள் நிறைய. ஆனால் அர்த்தமுள்ளவை, அதிர்ச்சியானவை கொஞ்சமே கொஞ்சம்.

(நிழல்கள்) ரவி, பிருந்தா ஒரு ஜோடி — செண்ட்டிமெண்ட்ஸ்களுக்காக.

ரவீந்தர் — நளினி ஒரு ஜோடி — கதை நகர்வதற்காக.

எஸ்.வி.சேகர் — வனிதா அடுத்த ஜோடி — அடிக்கடி கிச்சு கிச்சு மூட்ட. அதிலும் எஸ். வி. சேகருக்குத் தொழில் பாக்கெட் அடிப்பது ப்ளஸ் ரயில் நீளத்திற்கு ரீப் அடிப்பது. 'எக்மோர் பக்கத்தில ஓர் எண்ணெய்க் கிணறு. அது தோண்டி முடிச்சதும், நெக்ஸ்ட் செண்ட்ரல் பக்கத்தில' என்று கற்பனை! துபாய் அப்பாவின் பெயரைச் சொல்லியே அத்தனை காரியத்தையும் சாதித்துக் கொள்ளும் சமர்த்தர்.

மாமியாரின் முந்தானை நிழல் மாமனார் எப்படி இருக்க வேண்டும் என்று இலக்கணம் எழுத ஒரு வெ.ஆ. மூர்த்தி.

சந்திரபோஸின் இசை இனிமை.

நேரம் ஓடுகிறது.

முதுகிலே ஒரு கத்திக் குத்து, வயிற்றிலே ஒரு கத்திக் குத்து. தோள்லே ஒரு கத்திக் குத்து எல்லாத்தையும் தாங்கிக்கினு அம்சமா ஒரு பாட்டுப் பாடிட்டுச் செத்துப் போறாரு. இந்தப் பொண்ணு மைதிலியும் கற்பழியாம செத்துப் போவுது. லைலா மஜ்னு, அம்பிகாபதி, அமராவதி, ரோமியா, ஜூலியட்டுக்கு அப்புறம் ஜாக்கி—மைதிலிடான்னு நாலு பேரு நெனைக்கனுமின்னு இப்படி பண்ணி இருக்கார் போல.

புதுசா ரெண்டு பொண்ணுங்க மைதிலி, மைதிலின்னு பேர் வெச்சுக்கிட்டு வந்ததிலே, கொஞ்சம் கொழப்பம். அதிலே ஒரு பொண்ணு தலையைத் தலையை ஆட்டுது. இன்னொரு பொண்ணு புருவத்தைப் புருவத்தைத் தூக்குது. டான்ஸ் ஆடுதே...பரத டான்ஸ், அது தேறினா தேறலாம்.

மூர்த்தி, எஸ்.எஸ். சந்திரன் கோஷ்டியை நினைச்சா, பர்ர்ர்..... சிரிப்பு சிரிப்பா வருது. நம்பளைச் சிரிக்கவைக்கப் பாடுபடறாங்களே. நமக்குச் சிரிப்பு வரமாட்டேங்குதேன்னு நினைச்சா பர்ர்ர்....

ஸ்ரீவித்யா வர்றப்பல்லாம் மொழ நீள வசனம். வில்லி விஜயா அந்த நாள் படத்துல வசனம் பேசின கணக்கா எதுகை மோனையோட பேசறாங்களா? வருது ஆத்திரம்!

சும்மா இவ்வளவு செலவு பண்ணியும் கூட —

பாட்டிலே வர ஒவ்வொரு வரிக்கும் செட்டு போட்டுங்கூட —

ஊஹூம்!

எடிட்டிங், டான்ஸ், ஸ்டில், கலை, பி.ஆர்.ஓ. வேலையெல்லாம் வேற யார் யாரோ பண்ணியிருக்காங்க. ஒருவேளை அதையெல்லாம் டி. ராஜேந்தரே பண்ணியிருந்தா இன்னும் அட்டகாசமா வந்திருக்குமோ என்னவோ!

'இப்படி ஸதாய்க்கிறியே, படத்தை மொத ஸீன்லேர்ந்து கடைசி ஸீன் வரைக்கும் ஏண்டா பார்த்தே மாங்கா மடையா'ன்னு கேக்கறியா? பாட்டுப்பா! அப்பப்ப அது ஒண்ணு நல்ல படியா வருது. அதை அழகாகவும் படமா எடுத்துட்டாங்க. அவ்ளோதான்!

— ஜெயமன்மதன்

என்னை காதலி





தேடுகிறேன்... தேடுகிறேன்...

புஸ்வாணமாகியது!

* நாளொன்றுக்கு ஒன்றரைக் கோடி ரூபாய்க்கு வியாபாரமா? கவர் ஸ்டோரியின் தலைப்பைக் கண்டு மூக்கில் விரல் வைத்தேன். ஆனால் அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. மக்களின் வரிப் பணத்தை நாளொன்றுக்கு லட்சம் ரூபாய் வீதம் நஷ்டமாக்கி வரும் மத்திய அரசின் டானரி அண்டு ஃபுட்வேர் கார்ப்பரேஷனைப் பற்றிப் படித்ததும் புஸ்வாணமாகியது.

நீடூர். க. இராஜசேகரன்.

நடுநிலையான செயல்

* தமிழக அரசின் நடவடிக்கைகளை அவ்வப்போது இடித்துரைத்தாலும், நல்ல நடவடிக்கைகளுக்கும் இடம் உண்டு என்பதை கே.ஏ. கிருஷ்ணசாமியின் பேட்டி மூலம் தெளிவாக்கிவிட்டீர். தங்கள் நடுநிலையான செயலுக்கு வாழ்த்துக்கள்.

கோவை—39, வி. ஜெயகுமார்.

இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை!

* தமது தொகுதியைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள வேண்டுமென்ற நோக்கோடு மக்களின் குறையை நேரில் கேட்டறியும் கே.ஏ.கே. தொகுதி மக்களின் மனத்தில் நிலைத்திருப்பதில் ஆச்சரியமடைவதற்கு ஒன்றுமில்லை!

நெல்லிக்குப்பம், ஜெ. முகமது பாரூக்.

புதியன போற்றுவோம்!

* புதிய நடை..... புதுப் புது யுக்திகள்..... ஒரு நல்ல எழுத்தாளர் உருவாகிறார். ஆம். 'கூடு தேடும் குருவிகள்' சிறுகதையை எழுதிய ராஜா. பாலசுந்தரத்தான் சொல்கிறேன்.

திருச்சி—18, ராஜி ராதா.

தேடுகிறேன்! தேடுகிறேன்!

* 'விலைவாசி உயரும் விலை உயர்வு' என்ற துணிச்சல் மிக்க, ஆணித்தரமான நக்கீரர் பாணி தலையங்கம் பொன்னேட்டில் பதிக்கப்பட வேண்டிய ஒன்று அதைப் பாராட்டிக் கவி புனையத் தமிழில் வார்த்தைகளைத் தேடுகிறேன், தேடுகிறேன், தேடிக் கொண்டே இருக்கிறேன்!

சென்னை—5, ஆர்.பி. சாரதி

எங்கள் எண்ணத்தின் பிரதிபலிப்பே!

* அத்யாவசிய பொருள்களின் விலை உயர்வு அறிவிப்பால் வயிறு எரிந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் எண்ணத்தையும் பிரதிபலிக்கும் வகையில் அமைந்தது 'வயிற்றிலடிக்கும் விலை உயர்வு' தலையங்கம்!

கும்பகோணம்—1, பா. கிருஷ்ணதாஸ்.

பரவசமூட்டிய நடுப்பக்கப் படங்கள்!

* போர்முனையில் சாகசம் செய்து பெருமை கண்ட நம் ராணுவத்தினர் இன்று புல்வட்டில் ஏறிச் சாகசங்கள் செய்த காட்சி பரவசப்படுத்தியது!

சென்னை—93, எஸ். சம்பத்குமார்.

வேடிக்கையல்ல; வேதனை!

* வேடிக்கைக் கவிதைகளா அவை.....?
இந்நாட்டில்
வாடிக்கையாக நடக்கும் நிகழ்ச்சிகளை
வரிந்து கட்டிக் கொண்டு விளாசிய
வேதனைக் குமுறல்கள்!

வடலூர். எஸ். கண்ணன்.

கண்முன்னே கொணர்ந்திட்டார்

* 'பொன் விழாக் காணும் கலாக்ஷேத்ரா' பற்றிய பொன்மயமான நினைவுகளை இளைய தலைமுறையைச் சேர்ந்த எங்களோடு பகிர்ந்து கொண்டதன் மூலம், ரம்மியமான அந்த நாள் காட்சிகளைக் கண்முன்னே கொணர்ந்துவிட்டார் ஆனந்தி.

குடியாத்தம் (வ.ஆ.). ஆர். அரிகோபி.

தேடிக் கொண்டே இருக்கிறேன்!

சாந்தமடையுங்கள் சார்!

* கல்லூரிக்குப் பக்கத்தில் சிறைச்சாலையா?—கட்டுரை படித்தேன். எங்களூரில் ஆரம்பப் பள்ளிக்கூடத்தின் அருகே கள்ளுக் கடையும், ஊருக்கு நடுவே வுள்ள கோவிலுக்கு அருகில் சாராயக் கடையும் சரசமிடுவதைக் காணலாம்! இந்த மக்களாட்சியில் இதுவெல்லாம் சகஜம்தான் சார்..... சாந்தமடையுங்கள்!

ஒண்டிப்புதூர். கா.க. வேலாயுதன்.

நளாயினி பாணி அடிமைத்தனம்!

* 2.2.86 'கல்கி' இதழில் வாஸந்தி, தாய்லாந்துப் பெண்களின் அவல நிலை பற்றி எழுதியிருந்தது முற்றிலும் உண்மை. இதை நேரில் காணும் துர்பாக்கியம் எனக்கும் என் கணவருக்கும் ஏற்பட்டது. அங்கும் ஒரு 'நளாயினி'யைச் சந்தித்தேன். எங்களை அங்கு அழைத்துப் போன தாய்லாந்து நண்பர் தம் மனைவியுடன் வந்திருந்தார். 'கணவரையும் அழைத்துக் கொண்டு இங்கு ஏன் நுழைந்தோம்' என்று நான் வேதனைப் பட்டுக் கொண்டு இருக்கையில், எங்கள் தாய்லாந்து நண்பரின் மனைவி, "நான் வாயிலிலேயே காத்து கொண்டிருக்கிறேன்; நீங்கள் உள்ளே போய் 'மஸாஜ்' செய்து கொண்டு வருகிறீர்களா?" என்று தம் கணவருக்குக் குரல் கொடுத்ததைக் கேட்டு, 'இது என்ன நளாயினி பாணி அடிமைத்தனம்' என்று என் மனம் வெகுண்டது. நல்லவேளை, பழங்கால இந்தியப் பெண்ணாக இல்லாமல் இன்றைய இந்தியாவில் பெண்ணாக என்னைப் பிறக்கச் செய்த ஆண்டவனுக்கு மனத்திற்குள் நன்றி கூறினேன்!

ஈரோடு. ராஜலக்ஷ்மி கோதாரங்கன்.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032. (Phone: 431543).
Assistant Editor: P. S. Mani. Editor: K. Rajendran.



இறைவன் ஏற்றிய தீபங்கள்!

மரமே, இந்த மலர்கள் —

காற்றைத் தூய்மைப்படுத்தும் உன் ஆற்றலுக்கு
இயற்கை அளித்த தங்கப் பதக்கங்கள்!

மரமே, இந்த ம்லர்கள் —

இலையுதிர் காலத்திய உன் சோகத்தைப் போக்க
கிளையழகோடு பூத்த வண்ணச் சிரிப்புக்கள்!

மரமே, இந்த மலர்கள் —

சூரியக் காதலன் கேட்காமலே உனக்குப்
பூமித்தாய் போட்ட பொன்னாபரணங்கள்!

மரமே, இந்த மலர்கள் —

காங்கிரீட் கட்டிடக் காட்டினிடை
திக்குத் தெரியாது அலைவோர்க்கு
இருள் விரட்டி வழி காட்டும்
இறைவன் ஏற்றிய தீபங்கள்!

வண்ணப்படம்: திலீப் பானர்ஜி


காலைப் புதுமை மாலைவரை நீடிக்கச் செய்யுங்கள்!
புதியது
NEW CINTHOL
Godrej
NEW
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
CINTHOL
உண்மையான புத்துணர்ச்சி. மற்ற சோப்புகள் தரும் குறைந்த நேர புத்துணர்ச்சி அல்ல. நாள் முழுவதும் உடலின் வியர்வை நாற்றமின்றி திகழும் புத்துணர்ச்சி! புதிய ஸின்த்தால் மட்டுமே அதனைத் தரவல்லது. இப்போது, ஒரு புதிய அற்புத நறுமணம் ஸின்த்தாலில் உள்ளது.
மேலும் அதன் சக்திவாய்ந்த வியர்வை துர்நாற்றம் போக்கும் தன்மை, சரும கிருமிகளை ஒழித்து உங்களை நாள் முழுவதும் நாற்றமின்றி புத்துணர்ச்சியுடன் வைத்திடும்.
ஸின்த்தால் மட்டுமே
உங்களை புத்துணர்ச்சியுடன் வியர்வை நாற்றமின்றி நாள் முழுவதும் வைத்திடும்.
Godrej
தயாரிப்பு